

கல்கி
30
KALKI 22-3-1959
நயாபைசா

கல்கி பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



மலர் 18
இதழ் 34

தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

விளம்பி௵
பங்குனி௴ 9

அமரருள் உய்த்த அடக்கம்

உலகில் எத்தனையோ போட்டிகளைப் பார்த்திருக்கிறோம், அரசியலில் தலைமைப் பதவிக்குப் போட்டி; உத்தியோக உயர்வில் போட்டி; பொருள் சம்பாதிப்பதில் போட்டி; பொருள் செலவழிப்பதில் போட்டி. ஆனால் அடக்கத்தில் ஒருவரோடு ஒருவர் போட்டி யிட்டதுபோல் இருவர் அடக்கமும் பெருகி மக்கள் மனத்தைக் கவர்ந்த காட்சியைப் பார்த்ததுண்டா? அந்த அற்புதக் காட்சியைத்தான் சென்ற வாரம் பல்லாயிரக் கணக்கான ஜனங்கள் கண்டு மெய்சிலிர்த்தனர்; கண்கள் பனித்தன.

இது யுகத்தில் ஒரு தடவை கிட்டும் காட்சியல்லவா? இல்லை—பெரும் பேறல்லவா?

அந்த அற்புதக் காட்சியைப் பற்றி எழுதுவதே இவ்வாரத் தலையங்கமாக அமைய வேண்டும் என்று தீர்மானித்து விட்டோம், "யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்ற குறிக்கோள்படி.

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள், சென்னைக்கு வந்து ஒன்றரை ஆண்டுகள் ஆகிவிட்டன. அவர்களது சென்னை விஜயத்தில் தூய்மையுற்ற நெஞ்சங்கள் பல. அமைதியுற்ற மனங்கள் பல. 'முக்தி நெறி யறியாத மூடரோடு முயல்வோர்' பலர், பக்தி நெறி கண்டு உய்ந்து போனார்கள்.

இவ்வளவிருந்தும் ஆசார்ய சுவாமிகள் சென்ற மாதக் கடைசியில் தாம் சென்னையை விட்டுப் போகப் போவதாகத் தெரிவித்தார்கள். சற்றும் எதிர்பாராதவித மாக வந்த இந்தச் செய்தியைக் கேட்டுத் திடுக்கிட்டனர் பலர்.

ஆசார்ய சுவாமிகள் இப்படித் திடீர் என்று புறப்படக்கூடாது. அவர்கள் விஜயத் தால் உய்ந்து போன மக்கள் நன்றி செலுத்திக் கொள்ள ஒரு வாய்ப்பருள வேண்டு மென்று கேட்டுக் கொண்டார்கள்; மிகவும் வற்புறுத்தினார்கள். ராஜாஜியும் பிப்ரவரி 15-ந் தேதி கல்கி இதழில் 'நன்றி செலுத்துவோமாக!' என்று கட்டுரை வரைந்தார்.

எல்லாம் சேர்ந்து ஆசார்ய சுவாமிகள் உள்ளத்தில் கருணை பெருகச் செய்தன. பக்தர்கள் விருப்பத்துக்கு இணங்கிச் சில நாட்கள் தங்க இசைந்தார். சென்னை நகர ஆஸ்திக அன்பர்களும் சென்ற வாரம் மயிலாப்பூர் சம்ஸ்கிருத கல்லூரியில் ஆசார்ய சுவாமிகளுக்கு நன்றியும் வணக்கமும் செலுத்தினார்கள்.

இவ் வைபவத்துக்கு மந்திரி திரு வேங்கடராமன், தருமபுர ஆதீனத்தைச் சேர்ந்த திரு சோமசுந்தரத் தம்பிரான், திரு சச்சிதானந்தம் பிள்ளை, திரு டி. எம். பி. மகா தேவன் மற்றும் பல பிரமுகர்கள் வந்திருந்தார்கள். ராஜாஜியும் இவ் வைபவத்தைப் பார்த்துவிட்டுப் போக வந்தார். பொது மக்கள் பத்தாயிரம்பேர் குழுமியிருந்தார்கள். சம்ஸ்கிருதம், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், மராத்தி, குஜராத்தி, ஹிந்தி, ஆங்கிலம் முதலிய பல மொழிகளிலும் சென்னை நகரில் வாழும் பல மொழியினர் சார்பில் நன்றியுரை வாசித்தளித்தார்கள். திரு கே. பாலசுப்பிரமண்ய அய்யர் சேங்காலிபுரம் திரு அனந்தராம தீக்ஷிதர் முதலிய பிரமுகர்கள் பேசினார்கள்.

ராஜாஜியும் பேசினார். ராஜாஜியின் பேச்சு தேசம் போகிற போக்கைக் கண்டு, அவர்கள் உள்ளம் எவ்வளவு நொந்திருக்கிறது என்பதைத் தெளிவாக விளக்கியது. அத்துடன் ஆசார்ய சுவாமிகளிடம் அவர்களுக்கு எவ்வளவு மதிப்பும் மரியாதையும் இருக்கின்றன என்பதையும் எடுத்துக் காட்டியது.

"தேசத்தில் ஆங்காங்கே கொஞ்சம் கொஞ்சம் பாவம் இருக்கும். ஆனால் நகரங்களில் எல்லாவித பாவங்களும் சேர்ந்து விடுகின்றன. அப்படிப் பார்க்கும்போது சென்னை பாவக் குவியல் என்று சொல்லலாம். பாவம் இருந்தால் கூட பாக்கியம் என்பது தனியாக உண்டு. அந்தப் பாக்கிய வசத்தால் ஆசார்ய சுவாமிகள் சென்னைக்கு வந்து இத்தனை நாள் நம்மிடையே இருந்து அருளுபதேசம் செய்தார். அவர்களைத் தரிசிக்க வேண்டும் என்று தேசத்தின் மற்றப் பகுதிகளில் உள்ளவர்கள் நம்மைப் போலவே ஆசைப்படுவார்கள். ஆகவே, அவர்கள் இங்கிருந்து போவது நியாயம். அதில் நாம் வருத்தப்படுவதற்கு ஒன்றுமில்லை. அவர் சக்தி நம்மையெல்லாம் காப்பாற்றும்.

"நமது தேசம் வரவரக் கெட்டுப்போய்க் கொண்டிருக்கிறது. ரிஷிகளும் மகான்களும் பிறந்த புண்ணிய பூமி நம் பூமி. ஆனால் இங்கேதான் சிறுமைக் குணம் அதிகமாக இருக்கிறது. மற்ற நாடுகளைப் பார்க்கும் போது, அங்கு தர்மம் தழைத்து வளர்ந்திருக்கிறது. பத்திரிகைகளில் வரும் செய்திகளைப் படித்து ஏமாந்து போகக்கூடாது. அந்த நாட்டு மக்கள் நம்மைவிடத் தர்மத்திலும் சீலத்திலும் ஓங்கி வருகிறார்கள். இங்குதான் சிறுமைக் குணம் உயர்ந்து விளங்குகிறது.

"ஏழைக்குத்தான் ஆசை அதிகம். அம்முறைப்படி எல்லாரையும் யாசகம் நமது சர்க்கார் கேட்கிறது. நமது சர்க்காரிடமும் மந்திரிகள் தினம், 'பணம் அதற்குக் கொடுங்கள், இதற்குக் கொடுங்கள்' என்று கேட்கிறார்கள்.

"அதிலும் நம் நாட்டில் படித்தவர்கள் போல் தர்மமும் ஒழுக்கமும் குலைந்தவர்கள் வேறில்லை. இவர்கள் படிக்காத நல்லவர்களையும் கெடுத்து வருகிறார்கள். நல்லவர்கள் உள்ளத்தில் துராசையை வளர்க்கத் திட்டம் வேறு போட்டு வருகிறார்கள்!

"இப்படிச் சர்க்காரும் படித்தவர்களுமாகச் சேர்ந்து ஜனங்களைக் கெடுத்து வருகிறார்கள். நான் பதவியிலிருந்தால் கூட இப்படித்தான் செய்திருப்பேனோ என்னவோ!

"இந்த நோய்க்கெல்லாம் வைத்தியன் ஒருவனே. பகவான்தான் அந்த வைத்தியன்; மருந்து பக்தி.

"நாம் நல்லவர்களாக க்ஷேமமாக வாழப் பகவானைப் பிரார்த்தனை செய்வதைத் தவிர வேறு வழியில்லை. பக்தியைத் தவிர மருந்தில்லை.

"ஒருவேளை, ரிஷி புத்திரர்களாயிற்றே என்று பகவான் வேடிக்கைக்காகச் சோதனை செய்கிறானோ என்னவோ! பகவானின் லீலைகளை யார் அறியமுடியும்?

"இருந்தாலும் நாம் எல்லோரும் - நம் தேச மக்கள் அனைவரும் - உலக மக்கள் அனைவரும் க்ஷேமமாக இருக்க ஆசார்ய சுவாமிகள் பிரார்த்தனை செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். நமக்குப் பக்தியை அருளும்படி இறைவனைப் பிரார்த்தனை செய்ய வேண்டுகிறேன்.

"நாம் பிரார்த்தனையின் சக்தியையே மறந்து விட்டோம். நாம் மறந்தாலும் நமக்காக அவர்களாவது பிரார்த்தனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்!" என்று ராஜாஜி பேசி முடித்தார்.

ராஜாஜியின் உரை அங்கிருந்தவர்களின் உள்ளத்தை உருக்கி விட்டது. "ராஜாஜியா பிரார்த்தனையின் சக்தியை மறந்து விட்டோம் என்று சொல்வது?" என்றுதான் நெஞ்சம் தழுதழுத்தார்கள்.


ஐந்து வருஷ காலம் தமிழ் நாட்டில் சரியான மழையின்றி, குளம் குட்டைகள் வறண்டு போயின. சென்னை மக்கள் அருந்திவந்த புழலேரி வறண்டு, கடைசியாக நாற்றம் எடுக்கும் சேற்று நீரை வடிகட்டி அனுப்பி வந்தார்கள் சென்னை நகர சபையார். புழலேரிமுற்றும் வறண்டு விட்டால் என்ன செய்வது என்று அவசரம் அவசரமாகச் சென்னைக் கடற்கரை ஓரம் கிணறுகள் வெட்டத் தொடங்கினார் நகர சபையார். போதாதற்கு ஆறு அவுன்ஸ் அரிசி மக்களுக்கு வழங்கப்பட்டு வந்தது.

இத்தகைய நிலையில் ராஜாஜி மந்திரி பதவியை மேற்கொண்டார். பதவி ஏற்ற ஒரு வாரத்துக்குள் சென்னைக் கடற்கரையில் முதல் கூட்டம் போட்டார். சென்னை நகரின் பல பகுதிகளிலிருந்தும் லட்சக் கணக்கில் பொதுமக்கள் திரண்டு வந்திருந்தனர், ராஜாஜி என்ன சொல்லப் போகிறார் என்பதைக் கேட்க.

அப்பொழுது ராஜாஜி சொன்னது இதுதான்:

"நமக்கு முதலில் வேண்டியது மழை; மழையை வருவிக்க ஆண்டவன் கருணையைத் தவிர ஒரு சக்தியில்லை. விஞ்ஞானத் துறையில் எவ்வளவோ முன்னேறியிருக்கிறோம். ஆனாலும் இதற்குப் பிரார்த்தனை தவிர வேறு வழியில்லை. நீங்கள் அத்தனை பேரும் சேர்ந்து இறைவனைப் பிரார்த்தனை செய்தால் நிச்சயம் வானம் பொழியும்!" என்றார்.

நாஸ்திகம் தழைக்கும் சென்னையில் லட்சக்கணக்கான பேர்கள் கூடியிருக்கும் கூட்டத்தில் இப்படிப் பேசுகிறாரே என்றுதான் இருந்தது. ஆனால் அவர் பேச்சில், அவர் குரலில் சொல்லி முடியாத ஓர் உறுதியிருந்தது. அந்த உறுதி அத்தனை பேரையும் இறைவனை நோக்கி உள்ளத்துள்ளே இறைஞ்சவே செய்தது. ஒரு அபஸ்வரம் கூட எழவில்லை. லட்சக் கணக்கான பேர்களின் பிரார்த்தனைக் குரல், இடி முழக்கமென இறைவன் காதுகளில் விழுந்ததோ என்னவோ! அந்தக் கூட்டம் முடிவதற்குள் வான மண்டலத்தில் கருமேகங்கள் திரண்டன. அடுத்த சில நாட்களில் மழை 'கொட்டு கொட்டு' என்று கொட்டியது. அறுபது வருஷ சரித்திரத்தில் கண்டறியாத மழை. மூன்று நாட்களில் பெய்தது 32 அங்குல


அவர் உறுதி
"நீ எனக்கு எதிர்த் திசையில் துடுப்பு போட்டால், நான் படகை வெட்டி விடுவேன்"
காங்கிரஸ் பிளவு பட்டாலும் நாகபுரி தீர்மானத்தை விட மாட்டேன். - நேருஜி
வாலை ஒட்ட முடியுமா?
உத்தரப் பிரதேச பிரதமர் சம்பூர்ணானந்தாவின் மீது நம்பிக்கை தெரிவித்துச் சட்டசபையில் தீர்மானம் நிறைவேறியிருக்கிறது. இருந்தாலும் நிலைமை சீர் படாது என்று வதந்தி உலவுகிறது.
உ. பி. காங்கிரஸ்
நம்பிக்கைத் தீர்மானம்
சம்பூர்ணானந்த்
அவர் நிரபராதி!
பாகிஸ்தான்
இந்தியா-பாகிஸ்தான் எல்லை
அமெரிக்கா

மழை பெய்தது. இப்படி என்றுமே பெய்தது கிடையாது என்று பத்திரிகைகளெல்லாம் கூறின.

இப்படிப் பிரார்த்தனையின் சக்தியைக் கண் முன் காண்பித்த ஒரு மகான், ஆசாரிய சுவாமிகளை உலகம் உய்யவும் நமக்காகவும் நீங்கள் பிரார்த்தனை செய்யுங்கள் என்று கூறும்போது, அவர்களது அடக்கத்தின் சிறப்புதான் மேலோங்கி நிற்கிறது. அந்த அடக்கம் அங்கு குழுமியிருந்த மக்கள் உள்ளத்தில் ஊடுருவிப் பாய்ந்து மெய்சிலிர்க்கச் செய்தது.

நன்றியுரைகளுக்கெல்லாம் பதில் அளிக்கும் வகையில் ஆசார்ய சுவாமிகள் பேசியதன் சுருக்கம் இதுதான்:—

“நான் சொன்னபடி ஆசார அனுஷ்டானங்களோடு வாழ முற்படுவதுதான் எனக்குச் செய்யும் கைம்மாறும் நன்றியும் என்றெல்லாம் சொன்னார்கள். இதை மட்டும் சொல்லாமல் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். நான் இங்கு வந்து நிகழ்த்திய உரைகள் எல்லாம் நான் கொண்டிருந்த அபிப்பிராயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளத்தான், உங்கள் வாழ்க்கை முறைகளை மாற்ற அல்ல. அது வெறும் பேச்சினால் நடக்கும் காரியமல்ல. உலகில் எதுவும் பிரசாரத்தினால் நடந்த இல்லை. நீங்கள் ஆசார அனுஷ்டானங்கள் மேற்கொள்ளவில்லையென்றால் அந்த அளவுக்கு உங்களை மாற்றக்கூடிய சக்தி என்னிடம் இல்லை என்றுதான் பொருள். அந்தச் சக்தியை அருளுமாறு நான்தான் ஈசுவரனிடம் பிரார்த்திக்க வேண்டும். உங்கள் மேல் ஒரு குறையுமில்லை. நீங்கள் கவலைப்படுவதற்கு ஒன்றுமில்லை.

“இதையே ராஜாஜி வேறு விதமாகச் சொன்னார். உங்களுக்காக என்னைப் பிரார்த்தனை புரியச் சொன்னார். நான் இறைவனைப் பிரார்த்தனை செய்து உயர்ந்து விட்டால் என்னுடைய ஆசியைப் பெற வரும் நீங்களும் க்ஷேமத்தை அடைவீர்கள்!”

பிள்ளைப் பிராயம் முதல் இன்று வரை தவத்திலும் பூஜையிலும் காலம் கழிக்கும் பெரியவர்கள், இன்னும் நம் மனங்களை மாற்றும் அளவுக்குத் தகுதியும் சக்தியும் தாங்கள் பெறவில்லை என்று சொல்லும் போது நம் உள்ளம் உருகி விடுகிறது! பொதுமக்களின் குற்றங்களைத் தம் குற்றமாக எண்ணும் அந்தக் கருணையுள்ளத்தை என்னவென்பது! அவர்கள் அடக்கத்தைத்தான் என்னவென்பது?

ஆசாரிய சுவாமிகள் பேசின போது பலருக்குக் கண்களில் கண்ணீர் பெருகி விட்டது!

இப்படி இரண்டு பெரியவர்களின் அடக்கம் அங்கு கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்களின் ஆணவத்தை அடக்கி விட்டது.

‘அடக்கம் அமரருள் உய்க்கும்’ என்றார் குறளாசிரியர். சில நிமிஷங்களாவது ஆணவம் அடங்கிய பத்தாயிரம் பேரும் அந்தச் சமயம் அமரர் இன்பம் கண்டனர்.

சென்னையில் ரஷ்யக் கலை விருந்து

சென்னை அண்ணாமலை மன்றத்தில் நான்கு தினங்கள் ஆயிரக்கணக்கான ரசிகப் பொதுமக்களை இந்தியா வந்துள்ள சோவியத் பொம்மலாட்டக் கலைஞர்கள் வியப்பில் ஆழ்த்தித் திகைப்பில் திணற அடித்து விட்டார்கள்!

பொம்மலாட்டம் என்பது ஏதோ சாதாரண மேடைக் கலை அல்ல; அறிவு படைத்த மனிதனால் பொம்மைகளைச் சிருஷ்டிப்பதுடன் மனிதனுக்கும் மேலான விதத்தில் நடிக்க வைக்கவும் முடியும் என்பதை அவர்கள் நிரூபித்து விட்டார்கள்!

சோவியத் கோஷ்டியார் ஆட்டி வைக்கும் பொம்மைகள் ஒவ்வொன்றும் இயற்கையாகத் தோற்றமளிப்பதோடு இயற்கையாக நடிக்கின்றன. மேடையில் பொம்மைகள் கத்திச் சண்டைகள் போடுகின்றன; ஓடுகின்றன; ஆடுகின்றன. நடக்கின்றன. ஏன், புத்தகம் படிக்கின்றன. மேடைக்கு வந்து சபையோரை வணங்கி விட்டு, பியானோ வாசிக்கின்றன; பிடில் வாசிக்கின்றன. இன்னும் நடனம் ஆடுகின்றன. ‘மாஜிக்’ வித்தைகள் செய்கின்றன. மிருகப் பொம்மைகளை மனிதப் பொம்மைகள் ஆட்டி வைக்கின்றன. நாய்க் குட்டிகள் அழகாக அமர்ந்து பாடுகின்றன. விட்டம்மான் பொம்மையின் கொஞ்சு மொழிக்கு இணங்கி, கோழி ‘கொக்கரக்கோ’ வென்று பாடுகின்றது.

மேடைக்குக் கொண்டு வர வேண்டிய மேஜை நாற்காலிகளைப் பொம்மைகளே கொண்டு வந்து அதனதன் இடத்தில் சரியாக வைக்கின்றன. நாடகங்கள் நடிக்கின்றன. ஆமாம்! இவ்வளவும் பொம்மைகள்தான் செய்கின்றன. பொம்மைகள் அப்படி ஒன்றும் பெரிய பொம்மைகள் அல்ல. ஒன்றரை அடி உயரம்தான் இருக்கின்றன. இந்தப் பொம்மைகளின் உட்புறம் வெறும் கூடாயிருக்கிறது. இந்தக் கூட்டினுள் சிறு குச்சியைக் கொடுத்தும், கைவிரல்களின் உதவியாலும் பொம்மைகளை ஆட்டி வைக்கிறார்கள் சோவியத் கலைஞர்கள். பாட்டுக்கள் பேச்சுக்களுக்குத் தகுந்தபடி பொம்மைகள் உதடுகளை அசைத்துக் கண்களை இமைத்து, கைகால்களை அசைத்து பாவம் சிறிதும் பிறழாமல் நடிக்கின்றன.

பொம்மைகளை ஆட்டி வைப்பவர்கள் ஒவ்வொருவரும் இந்தக் கலையில் பூரணமான நிபுணர்களாக விளங்குகிறார்கள். ஆட்டம் முடிந்தவுடன் தங்களுடைய பொம்மைகளை வெளியே எடுத்து வந்து சபையோருக்கு இந்த நிபுணர்கள் காட்டுகிறார்கள். கலைவளர்ச்சியில் ‘இரகசியம்’ என்று அமுக்கிக் கொள்ளாமல், பரந்த

நோக்கத்துடன், சூத்திகளில் செருகப்பட்ட பொம்மைகளாகச் சபையோருக்குக் காட்டுகிறார்கள்!

சோவியத் நாடு, விஞ்ஞானம், கைத்தொழில், விவசாயம், யந்திரத் தொழில் இவற்றோடு கலைத் துறையிலும் மேம்பட்டு விளங்குவதாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் இந்தப் பொம்மலாட்டக் கலையிலும் இவ்வளவு அதிசயமான முறையில் முன்னேறியிருப்பதைக் கண்டு வியப்புறாமல் இருப்பதற்கில்லை.

சோவியத் ரஷ்யாவுக்கு இந் நாட்டிலிருந்து அடிக்கடி கலைஞர்கள் தூது சென்று வருகிறார்கள். அவர்களில் இது வரை யாரும் அங்கு இந்தப் பொம்மலாட்டக் கலை ரஷ்யாவில் எவ்வளவு தூரம் வானளாவ உயர்வு பெற்றிருக்கிறதென்பதை இங்கு நமக்குக் கூறியதில்லை. நல்ல வேளையாக, நமது தூதுகோஷ்டியார் மூலமாக ரஷ்யா பொம்மலாட்டக் கலைச் சிறப்பை நாம் அறிந்து கொள்ளக் காத்திருக்க வேண்டிய அவசியமில்லாமல், அவர்களே இந்நாட்டுக்கு வந்து இந்திய மக்களுக்கு இந்த அரிய கலையை வாரி வழங்கியதற்காக அவர்களுக்கு நம் நன்றி உரித்தாகிறது.

தனிப்பெருந் தலைவன்

பிரஞ்சு மொழியின் இலக்கிய வரலாற்றை ஆராய்ந்தால், அது ஆங்கில இலக்கியத்துக்கும் முற்பட்டது என்று தெரியும். ஆங்கில இலக்கியத்தை ஆராய்ந்தாலோ, அது பிரஞ்சு இலக்கியத்திலிருந்துதான் விழிப்பும் ஊக்கமும் பெற்று வளர்ந்தது என்பதை ஆங்கிலேயர்களே ஒப்புக் கொள்வதைக் காண்போம்.

அப்படிப்பட்ட பிரஞ்சு மொழியில் கார்னெய், ரஸீன் இருவரும் பெரிய நாடக ஆசிரியர்கள். அவர்கள் 17-ம் நூற்றாண்டில் வாழ்ந்தார்கள். அவர்களில் ஒருவரான கார்னெய் எழுதிய 'தனிப்பெருந்தலைவன்' என்ற பிரபல நாடகத்தை இவ்வார இதழில் தொடங்குகிறோம். இது சுமார் எட்டு வாரங்கள் கல்கியில் வரும்.

தமிழ் மொழியில் சிறுகதை, நாவல் முதலிய இலக்கிய வகைகள் வளர்ந்திருப்பதுபோல் நாடகத் துறை போதுமான அளவு வளரவில்லை. அதைக் கருதியே, பிறநாட்டுப் பேரறிஞர்கள் எழுதிய நாடகங்களை மொழிபெயர்த்து வெளியிடுவது தமிழ் எழுத்தாளர்களுக்கும், வாசகர்களுக்கும் தமிழன்னைக்கும் புரியும் நற்பணி என்று கருதி வெளியிடுகிறோம். தமிழ் மக்கள், தமிழ் இலக்கிய ரஸிகர்கள் இத்துறையில் காட்டும் ஆர்வத்தையும் அளிக்கும் உற்சாகத்தையும் ஒட்டியே மேலும் இத்துறையில் ஈடுபட விரும்புகிறோம்!

பிற நாட்டு நல் இலக்கியங்களைத் தமிழில் தர வேண்டுமென்றால், அந்தந்த நாட்டு மொழியில் நல்ல பயிற்சியுள்ளவர்களைக் கொண்டே இப் பணியில் ஈடுபட வேண்டும். பிரஞ்சிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த நூல்களைக் கொண்டு தமிழில் மொழிபெயர்க்கும் போது மூலத்தின் சுவையில் பெரும் பகுதி குறைந்து போகிறது. நல்ல வேளையாகப் பிரஞ்சு மொழியையும் தமிழையும் நன்றாகக் கற்ற ஒரு அறிஞர் தனிப்பெருந் தலைவனை மொழிபெயர்த்தளிக்க முன் வந்திருப்பது நமது பெரும் பேறாகும்.

திருவாளர் எம். வி. சுப்பிரமண்யம் அவர்கள் ஐ. ஸி. எஸ். உத்தியோகஸ்தராக முப்பத்துமூன்று ஆண்டுகள் சிறந்த பணி புரிந்து விட்டுச் சமீபத்தில் ஓய்வு எடுத்துக் கொண்டார். பதவி வகித்த காலத்தில் 'இவர் ஒரு நல்ல ஆபீஸர்' என்ற பெயர் எடுத்தார். சர்க்கார் நிர்வாகத் துறையில் பல முற்போக்கான யோசனைகளைக் கூறினார். அவற்றையெல்லாம் சர்க்கார் நடைமுறையில் கொண்டு வந்திருக்கிறார்கள். நிலச் சீர்திருத்த விஷயத்திலும் ஒரு கமிட்டியின் தலைவராக இருந்து ஒரு நல்ல யாதாஸ்தைத் தயார் செய்து அளித்திருக்கிறார். இப்படிச் சர்க்கார் உத்தியோகத்தில் பல துறைகளில் நல்ல பணியாற்றி விட்டுச் சமீபத்தில் ஓய்வு பெற்றார். உண்மையான ஓய்வு என்பது சும்மா இருத்தல் அல்ல. ஒரு பணியிலிருந்து மற்றொரு பணியை மேற்கொள்வதே. அதிலும் எம். வி. சுப்பிரமண்யம் போன்ற பல மொழிகள் அறிந்தவர்களும், கலையார்வம் மிக்கவர்களும் எப்படிச் சும்மா இருக்க முடியும்?

"நண்பர் சுப்பிரமண்யம் அவர்கள் சிறு வயதிலிருந்தே ஆங்கிலத்திலும் பிரஞ்சிலும் உள்ள கட்டுரைகளையும் காவியங்களையும் நாடகங்களையும் படித்து ருசி கண்டவர்" என்று அவர் நண்பர்கள் கூறுகிறார்கள்.

எம். வி. நல்ல ஹாஸ்யப் பிரியர். தாம் சிரிக்காமல் பிறரைச் சிரிக்க வைக்கும் சிறந்த நகைச்சுவையாளர். நல்ல சங்கீத ரஸிகரும்கூட. அவரே கஞ்சிரா வாசிப்பார். ஓழிந்த வேளைகளில் கவிதை யாத்து நண்பர்களை மகிழ்விப்பார்.

பல்லாண்டுகள் இலக்கியத்தில் ஊறிய திரு எம். வி. சுப்பிரமண்யம் தமிழன்னைக்குச் சேவை செய்யத் தீர்மானித்துள்ளார். அவர் எழுதும் எழுத்து நிச்சயம் அழகும் சிறப்பும் பெற்று விளங்கும் என்பதில் ஐயமில்லை. அவர் தமிழாக்கித் தந்த தனிப்பெருந் தலைவன் கல்கி நேயர்களுக்கு அருமையான விருந்தாக இருக்கும்.

கல்விப் பணிக்கு உதவி செய்யுங்கள்

"நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்" என்று மகாகவி பாரதியார் கல்வி ஸ்தாபனங்களுக்கு உதவும்படி கூறியிருப்பதைத் தமிழ் மக்களுக்கு நினைவுறுத்த விரும்புகிறேன்.

சென்ற பல ஆண்டுகளாகப் புதுதில்லியில் சர்க்கார் காரியாலயங்களிலும், மற்றத் தொழில் ஸ்தாபனங்களிலும் மிக உயரிய பதவிகளிலும் சாதாரணப் பதவிகளிலும் தமிழர்கள் அமர்ந்து தேசத்துக்கு அரும் பணி புரிந்து வருகிறார்கள்.

தமிழர்கள் எங்கு சென்றாலும் அவர்கள் பண்பாட்டை மறப்பதில்லை. அதைக் காப்பாற்றக் கருதியே முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே "மதராஸி கல்விச் சங்கம்" (Madrasi Education Association) என்ற பெயரில் ஒரு சங்கம் நிறுவினார்கள். ஒரு மாணவன் ஒரு ஆசிரியருடன் தொடங்கப்பட்ட இச்சங்கம், இப்பொழுது தில்லியின் நான்கு பகுதிகளில் நான்கு பள்ளிக்கூடங்களை நடத்தி, சுமார் 3500 மாணவ மாணவிகளுக்குக் கல்வி அறிவு புகட்டி வருகிறது!

மேற்கூறிய நான்கு பள்ளிகளில் இரண்டு பள்ளிக்கூடங்கள் சங்கத்தின் சொந்தக் கட்டடங்களில் நடைபெறுகின்றன. பாக்கி இரண்டு பள்ளிக்கூடங்களில் ஒரு பள்ளிக்கூடம் தில்லி கரோல்பாக்கில் வாடகைக் கட்டடத்தில் நடைபெறுகிறது.

விநயநகர் என்ற இடத்தில் ஒரு பள்ளிக்கூடம் நடைபெறுகிறது. சர்க்கார் அங்கு பள்ளி எழுப்ப நிலம் ஒதுக்கி விட்டார்கள். ஆனால் தற்சமயம் அந்த நிலப்பகுதியில் கூடாரங்கள் அமைத்துப் பள்ளிக்கூடம் நடத்தி வருகிறார்கள். மழையிலும், வெய்யிலிலும், பனியிலும் கூடாரங்களில் குழந்தைகளை உட்கார வைத்துப் பாடம் எத்தனை நாட்களுக்குத் தான் சொல்லிக் கொடுப்பது? விரைவில் அங்கு கட்டடம் எழுப்ப வேண்டும் என்று தில்லி கல்விச் சங்கத்தினர் துடிக்கிறார்கள். அவர்கள் ஆவல் நியாயமானது. அதற்குக் குறைந்த பட்சம் மூன்று லட்ச ரூபாய்கள் ஆகும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இந்தப் பணிக்கு நிதி உதவ நிதி மிகுந்தவர் ஆவலுடன் முன் வருவார்கள் என்பதில் ஐயமில்லை.

இப்பணிக்கு உதவ ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலட்சுமி ஏப்ரல் 5-ம் தேதி உதவி நிதிக் கச்சேரி செய்ய இசைந்துள்ளார். புது தில்லியில் லோடி ரோடிலுள்ள சங்கக் கட்டடத்தில் உதவி ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் தலைமையில் இக்கச்சேரி நடைபெறுகிறது.

தில்லியில் வாழும் தமிழர்களும், தமிழ் கூறும் நல்லுலகிலுள்ள தமிழ்ப் பெருமக்களும் தலைநகரில் நடக்கும் இக் கல்விப் பணிக்கு மனமுவந்து தாராளமாக நன்கொடை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் ப. சுப்பராயன்,
தலைவர், மதராஸி கல்விச் சங்கம், தில்லி.

ஆகாச வெடி

"எல்லைச் சம்பவங்களை வெறும்தொல்லை விஷயங்களாகக் கருதி எவ்வளவு காலம் நாம் பொறுமையாயிருப்பது?"

— ஒரு காங்கிரஸ் எம். பி.

ஆமாம்; தொல்லை விஷயங்களுக்கும் ஒரு எல்லை உண்டுதான்!

★

"மராமத்து இலாகா மந்திரி சுற்றுப் பிரயாணம் செய்யுமிடமெல்லாம் ஜனக் கூட்டத்தைப் போலீஸார் கண்ணீர் வெடிகளைப் போட்டுக் கலைக்கிறார்களா?"

— பஞ்சாப் விதான் சபையில் கேள்வி

சில சமயங்களில் ராஜ்ய மந்திரிகள் தங்களுடைய பிரசங்கத்தை ஆரம்பித்துக் கூட்டங்களைக் கலைப்பதும் உண்டு.

★

"ஓடும் பஸ்ஸில், கண்டக்டரிடமிருந்து ஜேப்படி செய்ய முயன்றவன் பிடிபட்டான்!"

—செய்தி

முதல் காரியமாக பஸ்ஸில் வந்ததற்கு அவனிடம் டிக்கெட் வசூலித்திருப்பார் என்று நம்பப்படுகிறது.

"மந்திரிகள் டெலிபோனில் பேசும் போது பிரதம காரியதரிசி ஒட்டுக் கேட்பதாக ஒரு அங்கத்தினர் கூறிய புகாரை முதன் மந்திரி மறுத்தார்."

—வங்க சட்ட சபையில்

இந்த மறுப்பை டெலிபோன் மூலமாகவும் முதன் மந்திரி வெளியிட்டாரா என்று கேட்கிறார் ஒருவர்.

★


"ஆணிகள், கண்ணாடித் துண்டுகள் சாப்பிடும் அதிசய மனிதர்...!" —தலைப்பு

இவற்றைச் சாப்பிட்டபின், தாகத்துக்கு முழு சோடா பாட்டில்களையும் அவர் விழுங்கி விடுவார் என்று ஊகிக்கப்படுகிறது.


★

"15 லட்சம் ரூபாய் செலவில் மூன்று அடுக்குகள் கொண்ட கதர் கிராம குடிசைத் தொழில் மாளிகை ஒன்று சென்னையில் கட்டப்படும்." —செய்தி

இந்தப் பெரிய மாளிகையில் நுழைந்தவர்கள், குடிசைகளை மறக்காமல் இருக்க மாதிரிக் குடிசைகளை அங்கு வைப்பார்கள் என்று நம்புகிறோம்.



சிலோன், கிரிபட்டி கடை வீதி வி. ஆர். எம். ராமசாமி அன் கோ. பார்ட்னர் ஸ்ரீ வெ. வைத்திலிங்கம் அவர்கள் குமாரன் திருவளர்செல்வன் இளையபெருமாளுக்கும் கடுகாமம் தோட்டம் மேல்கணக்கு, திரு எ. வீரப்பன் கே. பி. அவர்கள் குமாரி திருவளர்செல்வி மகேஸ்வரிக்கும் கவலேறு தோட்டத்தில் சமீபத்தில் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது. திருமணத்துக்கு ஏராளமான பிரமுகர்களும் உறவினர்களும், வியாபாரிகளும் வருகை தந்து மணமக்களை ஆசிர்வதித்தனர். வாழ்க மணமக்கள்!



74

தெய்வமும் கர்மமும் திருக்குறளில் இல்லை என்று சிலர் வாதிக்கிறார்கள். அது தவறு. ஹிந்து தருமத்தில் ஒப்புக் கொள்ளப்பட்ட கர்ம நியதியைத் திருவள்ளுவர் கொஞ்சமேனும் மாற்றவில்லை. ஊழ் என்பது கர்ம நியதி. நல்வினை தீவினை இரண்டும் அவ்வினை செய்தவனைச் சென்று அடையும். முன்பு செய்த வினை பின்பு விளைவு தரும். ஒரு ஜீவனுடைய எண்ணங்கள், ஆசைகள், செயல்கள் அனைத்தும் சேர்ந்து அவனுடைய மறு பிறப்பின் 'முதல்' ஆகும்.

ஊழ் என்றால் காரணமற்ற சுகமோ துக்கமோ அல்ல. நாம் எழுதின எழுத்தே நம் தலையெழுத்து. முற்பிறப்பில் செய்த வினையின் விளைவுக்கு ஊழ் என்று பெயர். தராசில் தூக்கியளந்தவாறு வினையும் விளைவும் சமமாக இருக்கும். மரணத்துடன் கணக்குத் தீராது. அடுத்த பிறப்புக்குக் கணக்கு ஏறும். கஷ்டமும் துக்கமும் வந்தால் நான் எந்தப் பாவமும் செய்யவில்லையே என்று கேட்கலாம். முன் ஜன்மத்தில் செய்த தீவினையின் பயன் என்பது அந்தக் கேள்விக்கு விடை. உடல், வாக்கு, மனம்—இவற்றைக் கொண்டு செய்யப்படும் அனைத்தும் வினையாகும்.

முயற்சியால் செல்வம் அடைகிறோம். சோம்பரால் வறுமை வந்து தாக்குகிறது. இவை இரண்டும் — முயற்சியும் மடியும் — ஊழின் விளைவே ஆகும். முன் ஜென்மத்தை நீ எப்படிக் கழித்தாயோ அதன் விளைவு இந்த ஜென்மத்தில் நீ செய்யும் முயற்சி அல்லது உன் சோம்பர். மடியும் முயற்சியும் தாமாக வரவில்லை. நீ பெற்ற சொத்து. முற்பிறப்பில் நீ செய்த வினைகளின் பயன். பணிக்குத் தகுந்த பயன் பெறுவாய். அது உண்மை. ஆனால் அந்தப் பணிக்கு வேண்டிய முயற்சியும் அதைத் தடுக்கும் மடியும் ஊழின் பயன்.

ஆகூழால் தோன்றும்
அசைவின்மை கைப்பொருள்
போகூழால் தோன்றும்
மடி.

ஆகூழ் - ஆகு ஊழ் - ஆக்கம் கொடுக்கின்ற ஊழ். போகூழ் - போகு ஊழ்-அழிவு கொடுக்கின்ற ஊழ். அசைவு - மடி - [illegible]. அசைவின்மை - முயற்சி. கைப்பொருள் செல்வம்.

அசைவின்மை, கைப்பொருள் - ஆக்கும். அது ஆகு ஊழால் தோன்றும். கைப்பொருளை அழிக்கும் மடி, போகு ஊழால் தோன்றும். செல்வத்துக்குக் காரணமாகிய முயற்சி ஊழினால் வந்தது. அதைப் போலவே, செல்வம் அழிவதற்குக் காரணமாகிய அசைவு அல்லது மடியும் ஊழினால் வந்தது.

பாகவதமாகிய

பக்தி வயல்

பௌராணிகர்

29. மீன் உருவாயினன்

பரீக்ஷித்து சுகரைப் பார்த்து, "முனிவரே! அதிசயச் செயல்களைச் செய்வதில் திறமையுள்ள நாராயணன் எடுத்த முதலாவதான மத்ஸ்யாவதாரத்தின் வரலாற்றை எனக்கு உரைக்க வேண்டும். செயல் வினைக்கு ஆளான மாந்தரைப் போல் பரமன் ஜீவராசிகளுள் தாழ்மையான மீன் வேடம் பூண்டதற்கு என்ன காரணம்?" என்று வினவினான்.

அதற்கு ஸுகர் விஷ்ணுவின் மத்ஸ்யாவதாரக் கதையை விவரிக்கலானார் :

எப்பொழுது பசுக்களுக்கும், மறை ஓதுவோருக்கும், தேவருக்கும், நல்லாருக்கும், மறைக்கும் அடைய வேண்டிய அறத்துக்கும் பொருளுக்கும் கேடு விளையுமோ, அப்பொழுதெல்லாம் நாராயணன் அவைகளைக் காப்பாற்றும் பொருட்டுப் பல வேடங்களை எடுத்துக் கொள்ளுகிறான். எல்லா ஜீவன்களுக்கும் அந்தர்யாமியாக உள்ளிருக்கும் உள்ளானுக்கு, எங்கும் பரவும் காற்றைப்போல் ஏற்றத்தாழ்வு கிடையாது. ஆயிரம் நான்கு யுகங்கள் கொண்டது ஒரு கல்பம், அதாவது பிரமனுக்கு ஒரு பகல் என்று கூறியிருக்கிறேன். இதற்கு முன் கல்பத்தின் இறுதியில், பிரமன் தன் தினசரி வேலையை முடித்து விட்டு, களைப்புற்று உறங்கச் செல்லுங்கால், ஒரு பிரளயம் ஏற்பட்டது. அச்சமயம் மூவுலகும், பொங்கிய கடல் நீரில் மூங்கிப் போயின. ஹயக்ரீவன் என்று ஒரு அசுரன் இருந்தான். கழுத்துக்குமேல் குதிரை உருவம் படைத்தவனாதலால் அவனுக்கு அப்பெயர் வாய்ந்தது. தனது பகல் கழிந்து சோர்ந்திருக்கும் பிரமன் வாயினின்று தானாக வெளிவந்து கொண்டிருந்த மறையை அவன் தன்னுடைய யோக சித்தியினால் திருடிக் கொண்டு போய் விட்டான். இதை அறிந்த ஹரி மறையை மீட்க வேண்டி ஒரு மீன் வேடம் பூண்டார்.

அந்தக் கல்பத்தில் ஸத்யவ்ரதர் என்று ஒரு ராஜரிஷி இருந்தார். அவர் நாராயணனிடத்தில் அளவிலா பக்தி கொண்டவர். ஒரு சமயம் அப்பெரியார் நீர் மட்டும் உட்கொண்டு வேறு உணவின்றி ஒரு நோன்பை நோற்று வந்தார். (இப்பொழுது நடக்கும் கல்பத்தில் மனுவாக விளங்கும் விவஸ்வான் என்பவரே அவர்.) அக்காலத்தில் அவர் தென்னாட்டுக்கு அரசனாக இருந்தார். ஒரு நாள் கிருதமாலா என்ற ஆற்றின் கரையில் அமர்ந்து தமது முன்னோர்களுக்கு நீரால் அர்க்கியம் கொடுத்துக் கொண்டிருந்தார். இரு கைகளிலும் நீரை ஏந்திக் கொண்டிருக்கும் பொழுது கைத்தலத்திலிருந்த நீருக்குள் ஒரு சிறிய மீன் இருப்பதைக் கண்டார். அந்த மீன் அரசனுடன் பேசிற்று: "என்னைத் திரும்பவும் தண்ணீரில் தள்ளி விடாதீர்கள். பெரிய மீன்கள் என்னைத் தின்று விடும். என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்றது.

பரமனே தம்மைப் பாதுகாக்க வந்திருப்பதை அறியாத அரசர், சிறு மீனாயிற்றே என்று கருணை கூர்ந்து அதைக் காக்க எண்ணம் கொண்டார். மீனைத் தம் கமண்டலத்துக்குள் போட்டுத் தம் ஆசிரமத்துக்கு எடுத்துச் சென்றார். அன்றிரவே அச் சிறு மீன் வளர்ந்து கமண்டல மெல்லாம் பரவியது. "இந்த இடம் எனக்கு வாழப் போதாது. போதிய இடத்தில் என்னை வளர்ப்பீர்" என்று அரசனை வேண்டிக் கொண்டது. அரசனும் கமண்டலத்திலிருந்து மீனை வெளியே எடுத்து நீர் நிறைந்த ஒரு பானையில் போட்டார். ஆனால் ஒரு மணி நேரத்துக்குள் அந்த மீன் மூன்று முழம் வளர்ந்து விட்டது. "இந்தப் பானையும் எனக்குப் போதவில்லையே. உம்மையே அண்டி விட்டேன். இதைவிடப் பெரிய இடத்தைத் தருவீர்" என்று மன்னனிடம் திரும்பவும் மன்றாடியது. மன்னனும் பானையிலிருந்து ஒரு குட்டைக்கு மீனை மாற்றினான். பெரிதாக வளர்ந்து அக்குட்டையையே அடைத்து விட்டது. அந்த மாய மீன். "இச் சிறு குட்டையில் என்னை அடைத்து விட்டீர்கள். எனது பெரும் சரீரத்துக்கு இது எவ்வாறு போதும்? நீர் நிரம்பிய தடாகத்தில் என்னை வாழ வைப்பாய்" என்றது மீன். இவ்வாறு கோரப்பட்ட அரசன் அந்த மீனை ஒவ்வொரு ஏரியாக மாற்றிக் கொண்டே வந்தான். எவ்வளவு பெரிதான ஏரியில் போட்டாலும் அவ்வளவுக்கு மீனும் வளர்ந்து கொண்டே வந்தது. இறுதியில் இதற்குக் கடல்தான் தகுதி என்று கடற்கரைக்கு எடுத்துச்

சென்றான். அப்பொழுது மீன் ''திமிங் கிலங்களும் முதலைகளும் என்னைத் தின்று விடும். என்னைக் கடலில் விட்டு விடா தீர்கள்'' என்றது.

அப்பொழுதுதான் அரசனுக்கு மீனைக் குறித்து ஐயம் தோன்றிற்று. ''பெரு மீன் வேடமிட்டு எம்மை மயக்கும் நீ யார்? உன்னைப் போல் ஒரே நாளில் ஏரியை விடப் பெரிதாக வளரும் மீனை நாம் கண்டதும் இல்லை; கேட்டதும் இல்லை. பாபங்களைப் போக்கும் நாரா யணனே இந்த உருவத்துடன் தோன்றி யிருக்கிறீர். இதுவும் உமது அருள் என்று கருதுகிறேன். மூவுலகைப் படைத் தளித்துத் துடைக்கும் பரம்பொருளே! உம்மை வணங்குகிறேன். உம்முடைய அவதாரங்கள் அனைத்துமோ அனைவருக் கும் நன்மை தருவன. ஆயினும் இச் சமயம் மீன் வேடம் பூண்டதன் கார ணத்தை எனக்குத் தெரிவித்தருள வேண்டும்'' என்று கேட்டான்.

பிரளயத்தில் கடலிலே மிதக்க மனம் கொண்ட மாதவன் அன்பனை அரச னுக்குப் பின்வருமாறு பதிலுரைத்தார்:

''அரசனே! இன்று தொட்டு ஏழாவது நாள் புவியும் இடைவெளியும் விண்ணுல கும் பொங்கி வரும் கடலுக்கு இரையாகி விடும். உலகங்கள் அழிவதற்கு முன்னர் நான் உனக்கு ஒரு பெரிய படகை அனுப்புகிறேன். பச்சிலைகள், செடிகள், விதைகள் இவை களை எடுத்துக்கொண்டு, ஸப்த ரிஷிகளுடன் அப்படகில் ஏறி ஒளியற்ற கடலிலே பய மின்றி மிதப்பாய். ரிஷிகளின் ஜோதியே உனக்கு வழிகாட்டி யாய் விளங்கும். அச்சமயம் இப் பெரும் திமிங்கில உருவத் துடன் நான் கடலில் கிடப் பேன். வாசுகி என்ற பாம்பைக் கயிறாய் வைத்து உன் படகை எனது செதிளில் கட்டிவிடு. பிர மனுடைய இரவு முடியும் வரை உன்னையும் ஸப்த ரிஷி களையும் நான் எல்லையற்ற கட லிலே கட்டித் திரிவேன். அச் சமயம் எனது பெருமையை நீ அறிந்து கொள்வாய்; என் அருளால் உனக்கு மெய்யறிவு மலரும்.''

இவ்வாறு அரசனுக்குக் கட்டளையிட்டுவிட்டு ஹரி மறைந் தார். ஸத்யவ்ரதனும் தர்ப் பாசனத்தில் அமர்ந்து பிர ளயத்தை எதிர்பார்த்துக் கொண்டு மீனுருவாய் முன் னின்ற மாதவனை இடைவிடாது எண்ணி வந்தான். ஏழாவது நாள் வானமே மறைந்து போய்ப் பெருமழை பெய் தது. கடல் கரை புரண்டு ஓடியது; புவிமீது பரந்தது. அச்சமயம் அனந்தன் முன்பு கூறியதற்கு இணங்க அரசனை ஒரு படகு அண்டி வந்தது. ஏழு முனிவ ருடனும் மூலிகைகளுடனும் விதைகளுட னும் மன்னவன் படகில் ஏறிக் கொண் டான். ''மூவருக்குள் முதல்வனை முகுந் தனை மனத்திலே சிந்திப்பாய். அவன் நம்மை இந்தக் கொடும் கஷ்டத்தி லிருந்து காப்பாற்றுவான்'' என்று முனி வர்கள் ஸத்யவ்ரதனுக்கு உபதேசம் செய்தார்கள். அரசனும் அவ்வாறே தியானம் செய்தான்.

அப்பொழுது, தங்கத் திமிங்கிலத் தோற்றத்துடன் விஷ்ணு கடலில் அவ தாரம் செய்தார். அதனுடைய உடலில் கொம்புபோல் நீண்டிருந்த பாகத்தில் ஸத்யவ்ரதன் படகைக் கட்டினான். விஷ்ணுவைப் பலவாறு தோத்திரம் செய்தான். விஷ்ணுவும் அரசனுக்கு மத்ஸ்ய புராணத்தை எடுத்துரைத்துத் தம் மகிமையை விளக்கினார். மன்னவ னுக்கு மெய்யறிவு வந்தது. மாதவனும்



ஹயக்ரீவனைக் கொன்று வேதத்தைப் பிரமனுக்குத் திருப்பிக் கொடுத்தார்.

அதன்மேல், சூரியவம்சத்துவரலாற்றைச் சுகர் கூறலானார். சூரியனுக்குப் பிறந்தவர், வைவஸ்வத மனு. அவருக்கு இக்ஷ்வாகு முதற்கொண்டு பத்துப் புதல்வர்கள் பிறந்தனர். ஆனால் முதலில் அவர் மக்கட் பேறின்றி வருந்தினர். அப்பொழுது மகன் வேண்டுமென்று ஒரு வேள்வியும் நடத்தினர். வேள்வி நடக்கும்பொழுது மனுவின் மனைவி புரோகிதரிடம் சென்று எவ்விதமாகவாவது ஒரு பெண் பிறக்கும்படி மந்திரங்களை ஓதி ஓமத்தைச் செய்ய வேண்டுமென்று கோரினள். அவரும் அவ்வாறே செய்தார். யாகத்தின் பயனாகப் பெண் குழந்தை பிறந்தது. அதற்கு "இலா" என்று நாமம் சூட்டினர்கள். மனு மிக்க மனவருத்தம் அடைந்தார். தமது குல குருவான வசிஷ்டரிடம் முறையிட்டார். "தேவரீர் நடத்திய வேள்வியில் கோளாத பலன் எவ்வாறு கிடைத்தது? மந்திரம் ஓதுவதில் நிகரற்ற உங்களுக்கு இவ்விதம் நிகழ்ந்தது பெரும் விந்தை" என்றார் மனு. தமது சக்தியினல் நடந்ததை வசிஷ்டர் அறிந்து கொண்டார். தவறைத் திருத்துவதாக மனுவுக்கு வாக்களித்து, விஷ்ணுவைத் துதித்தார். தவத்தில் தேர்ந்த வசிஷ்டருடைய வேண்டுகோளுக்கு இணங்கி விஷ்ணு இலா என்ற பெண்ணை ஆணாக மாற்றினர். மாறின மைந்தனுக்கு ஸத்யும்னன் என்று பெயர் வைத்தனர்.

ஒரு நாள் ஸத்யும்னன் அழகிய சிந்து தேசத்துக் குதிரை மீது ஏறிக் கொண்டு பரிவாரங்கள் சூழ வடக்குத் திசையை நோக்கி வேட்டை ஆடச் சென்றான். மேருமலைச் சாரலில் சிவபெருமான் உமாதேவியுடன் சல்லாபம் செய்து கொண்டிருந்தார். காட்டினுள் சென்றதுமே ஸத்யும்னனும்அவனது பரிவாரங்களும் பெண்களாக மாறிவிட்டனர். முன்னொரு காலத்தில் சில முனிவர்கள் சிவனைக் காண வேண்டி அங்கு சென்றதாகவும், அவர்களைக் கண்டதுமே பதியுடன் கூடியிருந்த பார்வதி வெட்கப்பட்டதாயும், அச்சமயம் சிவன் அவ்விடத்துக்கு வருவோர் அனைவரும் பெண்ணாக மாறி விடுவார்கள் என்று தேவிக்கு வாக்களித்ததாகவும் வரலாறு கூறுகிறது. அன்றுதொட்டு ஆண் மக்கள் அவ்விடம் போவதில்லை. மறுபடியும் பெண்ணான ஸத்யும்னன் சேடிகள் சூழக் கானகத்தில் திரிந்து வந்தான். அவளைக் கண்டு புத பகவான் காதலித்து அவளிடம் புரூரவஸ் என்ற புதல்வனையும் பெற்றார். ஆனால் பெண்ணாகி விட்டோம் என்ற வருத்தம் ஸத்யும்னனை வாட்டியது. தனது குல குருவான வசிஷ்டரை நினைத்தான். தனது யோக பலத்தினல் வசிஷ்டர் அங்கு தோன்றி, ஸத்யும்னன் நிலையைக் கண்டு வருந்திச் சிவனைத் துதித்தார். சிவன் அவர் முன் தோன்றினர். தாம் பார்வதிக்கு அளித்த வாக்கை முற்றிலும் மாற்றிவிட அவர் மனம் இசையவில்லை. ஆகவே, ஒரு மாதம் ஆணாகவும் ஒரு மாதம் பெண்ணாகவும் ஸத்யும்னன் இருக்கக் கடவது என்றார். இருப்பினும் நாட்டு மக்கள் இந்த ஆணாகவும் பெண்ணாகவும் இருந்த அரசனை ஒப்பவில்லை. ஸத்யும்னன் நாட்டைத் தன் மகன் புரூரவஸ் என்பவனிடம் அளித்து விட்டுக் காடு சென்றான்.

ஸத்யும்னன் காடு சென்றதும் மனு மறுபடியும் மகன் வேண்டுமென்று தவம் புரிந்தார். அத் தவப்பயனல்தான் அவருக்கு இக்ஷ்வாகு முதலாகப் பத்துப் புதல்வர்கள் பிறந்தனர். அவர்களுள் சர்யாதி என்பவன் ஒருவன். மறையின் உண்மையை அறிந்தவன். அவனுக்கு ஸுகன்யா என்று ஒரு பெண் இருந்தாள். ஒருநாள் அரசன் தன் மகளுடன் ச்யவன முனிவரின் ஆசிரமத்துக்குச் சென்றிருந்தான். ஸுகன்யா தன் தோழிகளுடன் அங்கிருந்த மரம் செடிகளைக் கண்டு களித்திருக்கையில் ஒரு எறும்புப் புற்றில் மினுமினுப் பூச்சிகளைப்போல் ஒளி தெரிந்தது. விளையாட்டாக ஒரு முள்ளை எடுத்து அவ்விடத்தில் குத்தினள். அப்பொழுது அங்கிருந்து ரத்தம் சிந்தியது. அத்தருணம் தொட்டு, அரசனுடன் வந்தவர் அனைவரும் வாய்விட்டுச் சொல்ல முடியாத வேதனைக்கு உள்ளானர்கள். அரசன் வியப்புற்றான். தவறான செயலை என்னுடன் வந்தவர் யாராகிலும் செய்ததுண்டா என்று வினவினன். அப்பொழுது ஸுகன்யா நடந்ததைத் தந்தையிடம் கூறினள். இதைக் கேட்ட அரசன் என்ன பாபம் நடந்துவிட்டதோ என்று பயந்தான். எறும்புப் புற்றால் மூடுண்டு தவம் செய்யும் ச்யவன முனிவரை வணங்கிப் பலவாறு சமாதானம் செய்தான். ச்யவனர் அரசனிடம் அவன் மகளைத் தமக்கு மணம் செய்து வைக்கும்படி கேட்டார். அரசனும் அதற்கு இணங்கினன். மேலொன்றும் கெடுதி வராது தப்பினேம் என்று அரசன் தனது தலைநகரத்துக்குத் திரும்பினன்.

சினம் மிகுந்த ச்யவனருக்கு மனைவியான ஸுகன்யா அவர் மனப்போக்கை நன்கு தெரிந்துகொண்டு, இணங்கிப் பணிவிடை செய்து வந்தாள். சிலகாலத்துக்குப் பின் தேவருக்கு வைத்தியரான

இரு அச்வினி குமாரர்கள் அங்கு வந்தார்கள். அவர்களை வரவேற்று ச்யவனர் தமக்கு ஒரு உதவி செய்யுமாறு வேண்டினார். "எனக்கு இளமைப் பருவத்தை அளியுங்கள். உங்களுக்கு யாகங்களில் கொடுக்கும் ஸோம பானத்தில் பங்கு கிடைக்கும்படி செய்கிறேன்" என்றார். அவர்களும் முனிவருடைய இச்சையை நிறைவேற்றுவதாக வாக்களித்துச் சித்தர்கள் நிர்மாணித்த ஒரு குளத்தில் அவரைத் தங்களோடு கூட நீராடச் சொன்னார்கள். வயது முதிர்ந்து தலை நரைத்துத் தோல் சுருங்கிப் பார்க்க அருவருப்பை அளித்து வந்த ச்யவனரும், அச்வினி குமாரர்களும் நீராடி வெளியில் வந்தபொழுது மூன்று அழகிய இளைஞர்களாய்த் தோன்றினர். மங்கையரை மயக்கும் இவ்வழகருள் தன் கணவர் யார் என்று ஸுகன்யாவுக்கு விளங்கவில்லை. அச்வினி குமாரர்களையே நியானம் செய்தாள். அவளுடைய கற்பை மெச்சின அச்வினி குமாரர்கள் அவளுக்கு அவள் கணவனைக் காண்பித்தனர்.

சில காலத்துக்குப் பின் ஸுகன்யாவின் தந்தை சர்யாதி மன்னன் ஒரு வேள்வியை நடத்தத் தீர்மானித்தான். அதற்காகத் தன் மருமகன் ச்யவனரைக் கலந்து கொள்வதற்கு ஆசிரமத்துக்கு வந்தான். அவ்விடத்தில் முனிவரைக் காணவில்லை. தன் மகள் கதிரவனின் காந்தி பொருந்திய ஒரு இளைஞனோடு இருப்பதைக் கண்ணுற்றான். அரசன் மனம் நொந்து தன் மகள் தன்னை வணங்கியபொழுது அவளுக்கு ஆசீர்வாதம் செய்யவில்லை. அவளைக் கோபித்துக் கொண்டான். "உலகெலாம் புகழ் பெற்ற முனிவரை வயோதிகரென்று தள்ளிவிட்டு இச்சிறுவனுடன் வாழ்வது முற்றிலும் தவறு. ஏன் உனக்கு இந்த மதியீனம்? குலத்துக்கே அவமானத்தைத் தேடுகிறாய்?" என்றான். ஸுகன்யா புன்னகையுடன், "தந்தையே! இவர் உங்கள் மருமகன்தான். வேறொருவரில்லை" என்று கூறிவிட்டு நடந்ததை விவரித்தாள். அரசன் ஆனந்தம் அடைந்தான்.

ச்யவனர் அரசனுடைய வேள்வியை விதிப்படி நடத்தி வைத்தார். அச்வினி குமாரர்களுக்கு ஸோமரசத்தையும் தம்முடைய யோக பலத்தினால் அளித்தார். ஆனால் இந்திரனுக்கு இது பிடிக்கவில்லை. வஜ்ராயுதத்தை எடுத்து ச்யவனரைக் கொல்ல முயன்றான். ச்யவனர் ஆயுதம் எடுத்த கையை அசையாது நிறுத்தி விட்டார். அன்றிருந்து அச்வினி குமாரர்களுக்கு ஸோமத்தில் பங்கு கிடைக்கலாயிற்று.


நகர சபைத் தேர்தல் தமாஷ்!
உங்களுக்குக் குடிநீர் வசதி செய்து தருகிறேன் என்று வாக்குறுதி அளித்து என் தொண்டை வறண்டு விட்டது! ஒரு டம்ளர் குழாய் நீர் தாருங்கள்!
நீங்கள் போய் வசதி செய்துதான் தண்ணீர் வர வைக்க வேண்டும்!
நீங்க சொல்லவேணுமா! நான் வந்து ஓட்டு போடாமல் இருப்பேனா! அப்பதானே 92 வயதுப் பாட்டி வந்து ஓட்டுப் பதிவு செய்தாள் என்று என் பெயர் எல்லாத் தினசரிப் பத்திரிகையிலும் வரும்!
??
??
எனக்கு ஓட்டுப் போடுங்கள்! நான் அப்புறம் பிரசங்கம் செய்வதையே நிறுத்தி விடுகிறேன்!
அப்படியானால் எங்கள் ஓட்டு உங்களுக்கே!
ரோடு வசதி
குடிநீர் வசதி
ஜாகை வசதி
விளக்கு வசதி
பூங்கா வசதி
எல்லா வசதிகளும் நான் செய்து தருகிறேன்.
எனக்கே ஓட்டுப் போடுங்கள்
அதில் கண்டிராத இதர வசதிகள் ஏதேனும் இருந்தால் நான் செய்து தருகிறேன் எனக்கே உங்கள் ஓட்டு.
சீட்டைக் கொடுத்து ஏதோ பெட்டியிலே போடச் சொன்னாங்களே! அது எந்தப் பெட்டி?
தபால் பெட்டி
சாமா



பீஷ்மன்

அறையில் விடி விளக்கு எரிந்து கொண்டிருந்தது. மெல்லிய நீல நிறச் சல்லாத் துணியைப் போல் அதன் ஒளி அறையின் சுவர்களில் ஆடிக் கொண்டிருந்தது. அப்பொழுது ஊர் அரவம் ஓய்ந்துவிட்ட வேளை.

நாகநாதனுக்குத் தூக்கம் வரவில்லை. காலுக்குப் போட்டுக் கொண்டிருந்த தலையணையையும் எடுத்துத் தலைமாட்டில் உயரமாக வைத்து விட்டுச் சாய்ந்து கொண்டான். விளக்கைச் சுற்றிச் சுற்றி வந்து அதில் விநாடிக்கொரு முறை 'பட் பட்'டென்று தன்னைத்தானே மோதிக் கொண்டு அறையின் அமைதியைக் குலைத்தது ஒரு பூச்சி. தெரியாமல் தற்கொலைக்குத் தயாராகும் அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

தொலைவிலே யிருந்த தியேட்டரிலிருந்து பாட்டும் பேச்சும் உருச்சிதைந்து தேய்ந்து ஒலித்தன.

"அ...ம்...மா...!"

கீழே படுத்திருந்த ஜோதி தூக்கத்தில் அலுப்புடன் முனகிக்கொண்டே புரண்டு படுத்தாள். நாகநாதன் தலையைத் தூக்கி அவளைப் பார்த்தான். பகலெல்லாம் உழைத்த அலுப்பு! அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள்.

'அவள் வாழ்வே ஒரு இயந்திர வாழ்வாகி விட்டது!'

என்று எண்ணமிட்டான். அவன் ஜன்னல் பக்கமாகப் புரண்டு படுத்தான். மின்வெட்டென நண்பன் ராஜுவின் முகம் அவன் நினைவில் தோன்றி மறைந்தது.

அந்நாட்களை நினைத்துப் பார்க்கும் போது அவனுக்கு வேடிக்கையாகவும் வேதனையாகவும் இருந்தது.

இப்பொழுது சென்னையில் இருக்கும் அவன் அன்றொரு நாள் உரிமையுடன் கூறியதைக் கேட்டிருந்தால் இன்று இப்படி வேதனைப்பட்டுக் குமையும் நிலை ஏற்பட்டிருக்காது. இளமை வெறியில் இமிர்த்து நின்ற மனசுக்கு அவ்வளவு பொறுமை ஏது?

அப்போது அவனுள் நோய் குடியேறத் தொடங்கியிருந்த வேளை. வலிவும், வனப்பும் நிறைந்த அவனது உறுதியான அங்கங்களில் சோர்வு உறவாடத்

தொடங்கியிருந்தது. க்ஷயத்தின் அறிகுறிகள் தென்படுவதாகவும் கவனமாக இருக்கவேண்டு மென்றும் டாக்டர் கூறியிருந்தார்.

ராஜுவிடமும் இதை வேடிக்கையாகச் சொல்லி வைத்தான்.

அதைக் கேட்டதும் "விளையாட்டாகச் சொல்லி விட்டு விடக் கூடாது. நாகு! உடனே இதையெல்லாம் கவனிக்க வேணும். முதலில், ஒரு மாசம் லீவு போடு" என்முன் ராஜு. அவன் பரபரப்பு நாகநாதனுக்கு வேடிக்கையாகத் தான் இருந்தது. நாகநாதன் அதைக் காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை.

ராஜுவுக்குத் தலைதீபாவளியின் போது. தெருவிலே மகிழ்ச்சி ஒளியும் மத்தாப்பு ஒளியும் சிந்திச் சிதறிக் கொண்டிருந்த வேளையில்தான் முதன் முதலாக அவன் ஜோதியின் புன்னகை யொளியைச் சந்தித்தான். ஈரம் உலராத தலை மயிரைக் கோதி முடிந்து கொண்டு, நீல வர்ணப் புடவையும் ரோஜா நிற வெல்வெட் ரவிக்கையுமாய் அருகிலே நின்ற சிறுவனுக்கு மத்தாப்புக் கொளுத்திக் காட்டிய வண்ணம் அவள் எதிர் வீட்டில் நின்முள். எண்ணெய் தேய்த்துக் குளித்து விட்டுப் புத்தாடை அணிந்து நாகநாதனும் அப்போதுதான் வாசலுக்கு வந்திருந்தான்.

அன்று ஜோதியின் புன்னகையைப் பார்த்ததிலிருந்து அவனுள் குறுகுறு வென்று ஏதோ புதுமையுணர்ச்சி பொங்கி வந்தது. அருகிலே ராஜுவும் அவன் இளம் மனைவியும் சிரித்துக் களித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கையில் அந்த உணர்ச்சி இன்னும் வேகமாக அவனுள் பரவியது. காலையில் அவன் பார்வைக்கு இலக்கான அந்தப் பெண் வேறு குறுக்கும் நெடுக்கும் நடந்து அவனைப் பைத்தியமாக அடித்துக் கொண்டிருந்தாள்.

பகல், மாலையாக முதிர்வதற்குள்ளாகவே அவன் தீர்மானம் செய்துகொண்டு விட்டான், அடுத்த தீபாவளியை அவளுடன் கொண்டாடுவது என்று. மாலையில் வழக்கம்போல் ராஜுவுடன் தென்னந் தோப்புக்கு நடந்து கொண்டிருக்கையில் மெல்லத் தன் எண்ணங்களைத் தெரிவித்தான் நாகு.

"என்ன நாகு இது? யோசனையே செய்யாமல் இந்த மாதிரி முடிவுக்கு வந்து விட்டாயே! உன் உடல் நிலையை முதலில் கவனித்துக் கொண்டு பிறகு கல்யாணத்தைப் பற்றி நினைப்பது நல்லது என்று எனக்குப் படுகிறது!" என்முன் ராஜு.

'இவனிடம் போய்ச் சொன்னேனே!' என்று முகத்தை 'உம்' மென்று தொங்க வைத்துக் கொண்டு சற்று நேரம் உட்கார்ந்திருந்தான், நாகநாதன். பிறகு "உன்னிடம் சொன்னால் நீ எப்படியும் என் ஆசையை நிறைவேற்றி வைப்பாய் என்று எண்ணினேன். நீ என்னடா வென்றால் வாலை விட்டுவிட்டுத் தும்பைப் பிடிக்கிறாய். ஒன்று மட்டும் நிச்சயம், ராஜு! இது நடக்காது போனால் அந்த மன அதிர்ச்சியில்தான் என்னுடைய நோய் அதிகமாகிவிடும்!"

நாகநாதன் இவ்வளவு மனம் நொந்து பேசி, ராஜு கேட்டதே யில்லை. அவன் முகத்தைப் பார்த்தவாறே சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்தான். பிறகு, "இந்தக் கல்யாணத்தை நடத்திவைக்க வேண்டியது என் பொறுப்பு. ஆனால் ஒன்று, நாகு, உன் உடம்பு பூரண குணமாகும் வரை நீங்கள் கணவன் மனைவியாக இல்லாமல்..." என்று கூறிக் கொண்டிருக்கும்போதே, நாகநாதன் குறுக்கிட்டான்.

"அவள் என் உடைமையாக வேண்டும். அப்புறம் நான் எவ்வளவு காலம் வேண்டுமானாலும் கட்டுப்பாட்டோடு காத்திருப்பேன்."

அதன் பின் ஜோதியும் நாகநாதனும் மாலை மாற்றிக் கொள்ளும் நாள் வர அதிகக் காலம் ஆகவில்லை.

அவள் பேசும் பொற்சித்திரமாய் அவன் மனைவியாக வந்து வாய்த்தாள். அவனுக்குப் பெருமை பிடிபடவில்லை. ஆயினும் இந்த அழகுக்கலையைப் பார்த்துப் பார்த்துத்தான் காலத்தை ஓட்ட வேண்டியிருந்தது!

திருமணமான வேளைதானோ என்னவோ, அவனுக்கு இருமல் அதிகமாகி விட்டது. ஒரு வேலையும் செய்யாமல் உட்கார்ந்திருக்கும் போதே உடம்பில் சொல்ல முடியாத சோர்வும் தளர்ச்சியும் ஏற்பட்டன.

டாக்டர் கூறிய யோசனையின் பேரில் ஒரு மாதத்திலெல்லாம் அவன் ஜோதியைப் பிறந்தகத்தில் விட்டு விட்டு, தாம்பரம் ஸானடோரியத்தில் போய்ப் படுத்துக் கொண்டான்.

ஜோதியின் புன்னகையை நினைக்கும் போது, ஏற்படும் இனிய பரவசம் ஒன்றுதான் அப்போது ஜீவாமிருதமாக அவனைக் காப்பாற்றிக் கொண்டிருந்தது.


ஒரு வருடம் முடிந்து மேலும் ஆறு மாதங்கள் ஓடிவிட்டன. நோய் நன்றாகக் குணமாகி விட்டதாகத்தான் அவன் உணர்ந்தான். ஆனால் டாக்டர்கள் அப்படி ஒப்புக் கொள்ளவில்லை. முடிவில் பொறுமையிழந்து போய் அவனாகவே 'டிஸ்சார்ஜ்' பெற்றுக்கொண்டு ஊருக்கு வந்து விட்டான்.

ஏக்கமும் ஆவலும் ஆதுரமும் நிறைந்த பார்வையுடன் என்றுமே மாறாத அந்தப் புன்னகையுடன் ஜோதி அவனை வரவேற்றபோது, அவனுக்குப் பரவசம் நிலை கொள்ளவில்லை.

ஆஸ்பத்திரியை விட எத்தனையோ மடங்கு உபசரணைகள் அவனுக்கு வீட்டில் நடந்தன. அலுப்போ சலிப்போ இல்லாமல் ஓடி ஓடி ஜோதி செய்யும் சேவைகளுக்காகவே நோயாளியாக இருக்கலாமே என்றுதான் முதலில் அவன் நினைத்தான்.

நோயின் உபாதைகள் இல்லையாயினும் எல்லோரையும் போல் எழுந்து நடமாடும் தெம்பு அவனுக்குஇல்லை. மேலும் இன்னும் குறைந்த பட்சம் நல்ல 'ரெஸ்ட்' எடுத்துக் கொண்டால்தான் உடல் நிலை சீர்ப்படும் என்று உள்ளூர் டாக்டர் தினம் வந்து சொல்லிக் கொண்டிருந்தார். ஆகவே, ஜோதியின் பணிவிடை ஒன்றைத் தவிர மற்ற எல்லா வகையிலும் வீடு அவனைப் பொறுத்த வரை ஆஸ்பத்திரியாகத்தான் இருந்தது.

நாட்கள் செல்லச் செல்ல அவனைமீறி அவனுள் ஏதோ இனம் புரியாத ஏக்கம் பிறந்து பெருகியது.



கல்கத்தா பிலிப்ஸ் இந்தியா கம்பெனியைச் சேர்ந்த திரு பி. ஆர். கிருஷ்ணனுக்கும் சௌ. பார்வதிக்கும் சமீபத்தில் விமரிசையாக விவாகம் நடைபெற்றது.

ஊர் உறங்கிக் கொண்டிருந்தது. தென்னந்தோப்பிலும், வீதியிலும்,வானரங்கிலும் பருவச் செழிப்புடன் நிலவு துள்ளிக் குதித்து விளையாடியது.

நாகநாதனுக்குத் தூக்கம் வரவில்லை. படுக்கையில் எழுந்து உட்கார்ந்து கொண்டான். கட்டில் இலேசாக அசைந்தபோது எழுந்தமெல்லிய 'கிரீச்' சொலியில் ஜோதி தூக்கம் கலைந்து எழுந்து விட்டாள்.

நீல விளக்கின் ஒளியில் பூமியிலிருந்து யாரோ ஒரு நாக கன்னிகை வருவது போல் அவன் அருகே வந்தாள்.

"என்ன செய்கிறது உங்களுக்கு......? ஏன் இன்னும் தூங்காமல் இருக்கிறீர்கள்?" கட்டிலின் விளிம்பில் கைகளை ஊன்றிக் கொண்டு அவனையே பார்த்தவாறு அவள் பேசுகையில், நாகநாதன் அவள் பேசுவதைக் கேட்கவில்லை. சதா புன்னகை மணம் வீசும் அந்த அழகிய உதடுகளின் அசைவைத்தான் அவன் பார்த்துக் கொண்டிருந்தான்.

"ஜோதீ...ஜோதீ......!"

அவளது இரண்டு கைகளையும் பற்றிக் கொண்டு ஆசை வெறியுடன் அவளைப் பார்த்தான் அவன். ஜுர வேகத்தில் அவன் உடம்பு ஏனோ நடுங்கியது.

"வெளியே பனியடிக்கிறது. ஜன்னல் கதவைத் திறந்து வைத்துக் கொண்டிருந்தால்....... !"

அவளுக்கு அவன் நிலை புரிந்துவிட்டது.

"தூக்கம் விழித்தால் உடம்பு என்னத்துக்காகும்? பேசாமல் படுத்துத் தூங்குங்கள்......!" குழந்தையைப் படுக்க வைப்பது போல் அவனைப் படுக்க வைத்து விட்டுப் போய் ஜன்னல் கதவுகளைச் சாத்தி விட்டு வந்தாள்.

"இப்படித் தூக்கம் விழித்து மனசைக் கெடுத்துக் கொண்டு கஷ்டப்பட்டால்

உடம்பு எப்படிக் குணமாகும்...? எனக்காகவாவது உங்கள் உடம்பைக் கவனித்துக் கொள்ள வேண்டாமா?''

பக்கத்திலே உட்கார்ந்து தாயின் பரிவுடன் அவன் தலையை வருடிக் கொண்டே அவள் பேசினாள்.

அவளைப் பார்க்க அவனுக்குத் தெம்பில்லை. தூக்கம் வந்ததோ இல்லையோ, கண்களை இறுக மூடிக்கொண்டான். மூடிய இமைகளுக்குள்ளும் ஜோதியின் முகம் அவனுக்குத் தெரிந்தது.

★

காலையில் அவன் கண் விழிக்கும் போது அவனுக்கு ஒரு செய்தி காத்துக் கொண்டிருந்தது.

"புனாவிலிருந்து உங்கள் சிநேகிதர் ஜானகிராமன் வந்திருக்கிறார்!'' என்று அவன் அருகே குனிந்து மெதுவாகக் கூறிவிட்டுப் போனாள் ஜோதி.

மெல்ல எழுந்து உட்கார்ந்தான் நாகநாதன்.

"என்ன நாகு இது......?'' நடையிலே பூட்ஸைக் கழற்றிப் போட்டு விட்டு ஜானகிராமன் உள்ளே வந்தான்.

"இரண்டு வருஷங்களாக உடல்நிலை சரியில்லையாமே? எனக்கு ஒரு வரி எழுதியிருக்கக் கூடாதா? நேற்று எல்லா விஷயங்களையும் மதராஸில் ராஜு சொன்னான். உடனே புறப்பட்டு வந்தேன். என்ன ஆளப்பா நீ! இன்றே என்னுடன் புறப்பட்டு வா. என் சிநேகிதர் ஒருவர் டி. பி. ஸ்பெஷலிஸ்டு. வீட்டிலேதான் அவர் வைத்தியம் பார்க்கிறார். வீட்டையே ஒரு ஸானிடோரியம் போல் ஆக்கி விட்டார். கொஞ்ச காலம் அங்கே இருந்தால் பூரண குணம் காணலாம்!'' என்று கூற நினைத்ததைக் கூறிய பின்னரே மூச்சுவிட்டான்.

நாகநாதன் வெளியே சிரித்துக்கொண்டாலும், அவனுள் யோசனை தீவிரமாக ஓடிக் கொண்டிருந்தது.

ஜோதியுடன் ஒரே வீட்டில் இருந்து கொண்டு இனியும் இப்படிப் பிரும்மசரிய வாழ்க்கை நடத்த முடியும் என்று அவனுக்குத் தோன்றவில்லை. ஆகவே ஜானகிராமனுடன் புனாவுக்குப் புறப்படுவது என்று தீர்மானித்து விட்டான்.

ரயிலடியில் ரயில் புறப்படுகையில், ஜன்னலுக்கு வெளியே விம்மி விம்மி அழுது கொண்டிருந்த ஜோதியின் முகம் நாகநாதனைச் சித்திரவதை செய்தது.

★

காலம் ஓடி விட்டது. ஒரு வருடம் புனாவில் கழிந்து விட்டது. வாரம் தவறாமல் வரும் ஜோதியின் கடிதத்தில் அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டே ஐம்பத்திரண்டு வாரங்களைப் புனாவில் கழித்து விட்டான் அவன்.

அவளைப் பிரிந்திருந்தது எவ்வளவோ நல்லதாகப் போயிற்று.

அவன்தான் இப்போது எப்படி ஆகி விட்டான்! கண்ணாடியின் முன்னால் நின்று தன்னை ஒருமுறை பார்த்துக் கொண்டான் நாகநாதன்.

டாக்டர், ஊருக்குத் திரும்ப அவனுக்கு அனுமதி கொடுத்து விட்டார். தான் புறப்பட்டு வரப் போவதாக ஜோதிக்கு அவன் தெரிவிக்கவில்லை. 'திட்டத்-திடும்' என்று போய் அவள் முன்னால் நின்று கொண்டு அவளைத் திகைக்க வைத்துவிட வேண்டும் என்பது அவன் நினைப்பு.

இனிய நண்பனை ஜானகிராமனிடம் விடைபெற்றுக் கொண்டு ரயில் ஏறும் பொழுது நாகநாதனின் கண்கள் இலேசாகக் கலங்கின.

ஊரை அவன் அடையும் போது, பொழுது நன்றாகப் புலரவில்லை. கீழ் வானில் மேகங்கள் செம்மையொளி பூசிக் கொண்டிருந்தன. நிலவொளி இன்னும் மாறவில்லை. தெருவிலே அங்கங்கே சில வீடுகளில் வாசல் தெளித்துக் கொண்டிருந்தார்கள்.

அதோ...! வீடு வந்து விட்டது.

அவன் உள்ளத்தில் குதூகலம் பொங்கிக் கொண்டிருந்தது.

அவன் வாசலை நெருங்குவதற்கும் கதவு திறப்பதற்கும் சரியாக இருந்தது.

"யாரு...? நீங்களா...?''

"ஜோதியா...?''—நாகநாதன் அவளை விழித்த கண் இமையாமல் சற்று நேரம் பார்த்துக் கொண்டு நின்றான்.

ஒடிந்து விழுவது போன்ற உடலுடன் கன்னச் செழுமையெல்லாம் வற்றிப் போய் ஏக்கத்தின் பெண்ணுருவொன்று 'ஜோதி'யாய் அவனை வரவேற்றது.

"உள்ளே வாருங்களேன்!'' மகிழ்ச்சியைத் தாங்கக் கூட வலுவில்லாத அவளுடைய புன்னகையில் பழைய மணம் எங்கே?

"என்ன ஜோதி இது? உனக்கு உடம்புக்கு என்ன?''—நாகநாதன் கேட்டான்.

"நேற்று டாக்டரிடம் போய்ப் பார்த்தோம். எனக்கு டி. பி. ஆரம்பமாம். மதனப்பள்ளிக்குப் போகச் சொல்கிறார் டாக்டர். நாளைக்கு அப்பாவும் நானும் மதனப்பள்ளிக்குப் புறப்படுகிறோம்!'' என்று அவள் கூறினாள்.

கிழக்கே ஆணழகாய் ஜோதிஸ்வரூபமாய் ஆதவன் படியேறிக் கொண்டிருந்தான். அழகழிந்த வைகறைநிலவு அவனை வெளிறிய புன்னகையுடன் வரவேற்றது!

கல்கி
மாவட்டச் சிறுகதைப்போட்டி

முதற் பரிசு ரூ. 200. இரண்டாவது பரிசு ரூ 100

✲

★ ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு மாவட்டத்தை இலக்காகக்கொண்டு இந்தச் சிறுகதைப் போட்டி நடத்தப்படும். ஒவ்வொரு மாதமும் தேர்ந்தெடுக்கப்படும் கதைகளில் இரண்டு கதைகளுக்குப் பரிசு வழங்கப்படும்.

★ தமிழ் நாட்டின் மாவட்டங்களான கன்யாகுமரி, திருநெல்வேலி, மதுரை, ராமநாதபுரம், திருச்சி, தஞ்சை, தென் ஆற்காடு, செங்கற்பட்டு, வட ஆற்காடு, சென்னை, சேலம், கோயமுத்தூர், நீலகிரி ஆகிய பதின்மூன்று மாவட்டங்கள் இந்தப் போட்டியில் இடம் பெறும்.

★ எல்லா மாவட்டங்களைப் பற்றிய கதைப் போட்டிகளிலும் எல்லாத் தமிழ் எழுத்தாளர்களும் கலந்து கொள்ளலாம்.

★ கதைகள் பண்பட்ட தமிழ் நடையில் அந்தந்த மாவட்டத்தைப் பின்புலமாகக் கொண்டு, முழுவதும் அந்தப் பிரதேச மணம் கமழ்வதாக இருப்பதோடு சொந்தக் கற்பனையாகவும் இருக்க வேண்டும்.

முதற் போட்டி

தஞ்சை மாவட்டம்

விதிகள்

1. கதைகள் தஞ்சை மாவட்டத்தின் சூழ்நிலை எல்லா வகையிலும் அமையுமாறு எழுதப்பட வேண்டும். தஞ்சைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள், பழக்க வழக்கம், தொழில், காவிரிக்கரை வாழ்வு போன்றவற்றைச் சித்திரிக்கும் கதைகளே இப் போட்டியில் இடம் பெறும்.

2. கதைகள் 'கல்கி' இதழின் ஐந்து பக்கங்களுக்குக் குறையாமல் ஏழு பக்கங்களுக்கு மேற்போகாமல் இருக்க வேண்டும்.

3. ஒரு எழுத்தாளரே ஒன்றுக்கு மேற்பட்டும் கதைகள் அனுப்பலாம்.

4. பரிசுக்கதைகளைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் 'கல்கி' ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

5. பரிசுபெறாத கதைகளில் பிரசுரிக்கத் தகுதியுடையவை, உரிய சன்மானம் அளித்துக் 'கல்கி'யில் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

6. பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படாத கதைகளைத் திரும்பப் பெற விரும்புவோர் கதைகளோடு உரிய தபால் பில்லைகள் இணைக்க வேண்டும்.

7. கதைகள் சம்பந்தமாக எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்வதற்கில்லை.

8. தஞ்சை மாவட்டப் போட்டிக்கான கதைகள் மார்ச்சு மாதம் 31-ந் தேதிக்குள் 'கல்கி' காரியாலயத்துக்கு வந்து சேர வேண்டும்.

9. போட்டி முடிவு ஏப்ரல் மாத இறுதிக்குள் அறிவிக்கப்படும்.

10. கதைகளின் உறைகளிலும், கதைகளின் தலைப்புக்களிலும் "கல்கி தஞ்சை மாவட்டச் சிறுகதைப் போட்டி" என்று குறிப்பிட வேண்டும்.

குறிப்பு:—தஞ்சை மாவட்டத்தின் சிறுகதைப் போட்டி முடிவு வெளியாகும் இதழிலேயே அடுத்த மாவட்டச் சிறுகதைப் போட்டிக்குரிய விவரங்கள் அறிவிக்கப்படும்.

ஆசிரியர், கல்கி

தனிப்பெருந் தலைவன்

சுவை நயமும், கதாபாத்திரங்களின் குணசித்திர அமைப்பும் கொண்ட சிறந்த நாடகங்கள் தமிழ் மொழியில் மிகுதியாக இல்லை. பிரஞ்சு மொழியிலும் ஏனைய மேலை நாட்டு மொழிகளிலும் நிகரற்று வளர்ந்துள்ள நாடகத்துறை எதிர்காலத்தில் தமிழிலும் அப்படி வளரலாம் என்பதற்குரிய நம்பிக்கை இருக்கிறது. மெத்த வளர்ந்திருக்கும் அத்தகைய மேன்மைக் கலைகள் தமிழில் இல்லையே என்ற குறை நீங்க வேண்டுமானால், வளர்ச்சியடைந்துள்ள மொழிகளின் நாடகங்கள் தமிழில் வந்து, படிப்பவர்களுக்கும் எழுதுபவர்களுக்கும் புதிய சுவையின் பழக்கத்தை உண்டாக்க வேண்டும். விறுவிறுப்பான சம்பவங்களும், விரைவான கதைப் போக்குமுள்ள கற்பனைகளையே அதிகமாகப் படித்துப் பழகிய தமிழர்களுக்குச் சுவையையும், குணசித்திர வரையறையையுமே முக்கியமாகக்கொண்ட இந்த நாடகங்கள் புதுமையாக இருக்கலாம். ஆனால் புதிய துறையில் அழகும், இலக்கியமும் வளர்க்க விரும்பும் நாம் புதுமையைக் கற்பதிலும் அந்த விருப்பத்தைத் தளர விட்டுவிடலாகாது. சுவை நோக்கும் திறமையான பாத்திர அமைப்புமுள்ள இந்தப் பிரஞ்சு நாடகத்தை நமது நேயர்கள் படித்து மகிழ வேண்டும் என்று விரும்புகிறோம்.

இதன் மூலமொழியான பிரஞ்சில் கவிதை நடையில் ஒரு சிறுகாவியமாக இயற்றப் பட்டிருக்கிறது இந்நாடகம். துன்பியல், இன்பியல் இரண்டும் விரவிய ஒரு சரித்திர நாடகம் இது. படித்து முடித்தாலோ முழுதும் துன்பியலாகவே தோன்றும். உணர்ச்சி மயமான உள்ளங்களை இந்த நாடகத்தில் சந்திக்க முடிகிறது. இந்த நாடகத்தின் தலைவனான ரோடரிகோ வீரர்கள் பெறும் இணையற்ற பட்டமான 'தனிப்பெருந் தலைவன்' என்ற பட்டத்தைப் பெறுகிறான். அதுவே இந்நாடகத்தின் தலைப்பாகிறது.

''பதினொன்றாம் நூற்றாண்டில் ஸ்பெயின் நாடு ஆப்பிரிக்காவிலிருந்து படையெடுத்து வந்த மோரர்களால் கைப்பற்றி ஆளப் பட்டு வந்தது. பின்பு படிப்படியாகக் கிறிஸ்தவர்கள் அந்த நாட்டை மோரர்களிடமிருந்து மீட்க முடிந்த பகுதி 'காஸ்டில்'



என்ற பிரதேசமே ஆகும். அவ்வாறு கிறிஸ்தவர்களால் மீட்கப்பட்ட முதல் பகுதியான காஸ்டில் பிரதேசத்துக்குப் பெர்ணந்தோ அரசனாக இருந்தான்.''

மேற்கண்ட சரித்திரச் சூழ்நிலையில் தொடங்குகிறது இந்த நாடகம்.

தமிழ் நாட்டு வாசகர்களும் எழுத்தாளர்களும் உயர்ந்த பாத்திரங்களோடு கூடிய சுவையான நாடகத்தைப் படிக்க வேண்டுமென்று சொல்லுவதற்கு முன் மாதிரியாகக் கொள்ளத்தக்க நாடகம் இது.

அங்கம் 1

பாத்திரங்கள் :

பெர்ணந்தோ—காஸ்டில் தேசத்துஅரசன்.
உராகா—அரசகுமாரி.
டியேகோ—ரோடரிகோவின் தந்தை. (பிரபு)
கோமேக—ஷிமேனுவின் தந்தை. (பிரபு)
ரோடரிகோ—கதாநாயகன், ஷிமேனுவின் காதலன். (பிரபு)
சாஞ்சோ—ஷிமேனு மேல் காதல் கொண்டவன். (பிரபு)
அரியாசோ, அலான்சோ—பிரபுக்கள்.
ஷிமேனு—கதாநாயகி, கோமேசின் புத்திரி.
லேயனேரா—அரசகுமாரியின் தாதி.
எல்வீரா—ஷிமேனுவின் தாதி.

காட்சி 1

(கோமேக பிரபுவின் புதல்வி ஷிமேனுவும் அவள் தோழி எல்வீராவும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.)

ஷிமேனு : மனப்பூர்வமாக என்னிடம் எல்லாம் சொல்லி விட்டாயா, எல்வீரா? என் தந்தை கூறியதில் ஒன்றையும் மறைக்கவில்லையே?

எல்வீரா : இல்லை. அவர் சொன்னதைக் கேட்டு நானும் மகிழ்ச்சியினால் பூரித்திருக்கிறேன். ரோடரிகோ மேல் உங்களுக்கு எவ்வளவு ஆசையோ, அவ்வளவு அபிமானம் அவருக்கும் உண்டு. அவர் மனத்தை நான் புரிந்துகொண்ட வரையில் ரோடரிகோவின் காதலுக்கு உங்களை இணங்கும்படி உத்தரவிடுவார் என்றே தோன்றுகிறது.

ஷிமேனு : இன்னும் ஒரு தரம் நீ சொல்லத்தான் வேண்டும். நான் வரிக்கும் ரோடரிகோவை அவர் ஒப்புக் கொள்வார் என்பதை நீ எப்படித் தெரிந்து கொண்டாய்? எனக்கு நம்பிக்கை கொடுக்கும் அந்த வரலாற்றை மறுபடியும் கேட்க ஆசையாயிருக்கிறது. அதை எவ்வளவு தரம் கேட்டாலும் தெவிட்டாது. எங்கள் காதலைப் பகிரங்கப்படுத்துவதற்குச் சந்தர்ப்பம் வருவதை எவ்வளவு தரம் சொன்னாலும் மிகையாகாது. சாஞ்சோ, ரோடரிகோ இருவரும் உன் மூலம் எனக்கு அவர்கள் காதலைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்களே, நீ அதை என் தந்தைக்குத் தெரிவித்தபோது அவர் என்ன சொன்னார்? அவர்களில் ஒருவர் மேலேயே என் மனம் சார்ந்திருப்பதைக்கூட நீயே காட்டி விட்டாயோ என்னவோ?

எல்வீரா : இல்லை. நான் சொன்னது: இருவரையும் பொதுநோக்குடனேயே பார்க்கிறீர்கள். அவர்களுக்கு நம்பிக்கையைக் கொடுப்பதும் இல்லை; கெடுப்பதும் இல்லை; அருவருப்புக் காண்பிப்பதும் இல்லை; அனுராகம் காண்பிப்பதுமில்லை: வரனைத் தேர்ந்தெடுப்பதற்குத் தந்தையின் உத்தரவையே எதிர்நோக்கிக் காத்திருக்கிறீர்கள். அந்த மரியாதையால் அவருக்கு அளவில்லாத மகிழ்ச்சி ஏற்பட்டது என்பது அவர் முகத்திலிருந்தும் பேச்சிலிருந்தும் உடனே தெரிந்தது.

அவர் பேசினதைத்தான் நீங்கள் மறுபடியும் கேட்கவேண்டும் என்கிறீர்களே! அவர் சொன்னார்: 'அவன் கடமை தெரிந்தவன். அவர்கள் இருவரும் அவளுக்குத் தகுந்தவர்கள். இருவரும் நல்ல இளமையும் நேர்மையும் வீரமும் உள்ளவர்கள். உயர்ந்த வம்சத்தில் வந்தவர்கள். புகழ் பெற்ற அம் முன்னோர்களின் தீரமெல்லாம் அவர்கள் கண்களில் ஒளிர்கின்றன. அதிலும், ரோடரிகோவின் முகம் உதாரத்தின் பிரதிபிம்பமாகவே இருக்கிறது. அவன் வெற்றி வாகையுடனேயே பிறந்தான் என்று சொல்லும்படி அவன் வம்சத்தில் அவ்வளவு யுத்த வீரர்கள் இருந்திருக்கிறார்கள். அவன் தந்தை தம் பருவ காலத்தில் உடல்சக்தி இருந்தவரைக்கும், ஒப்புயர்வற்று அற்புதமாய் விளங்கியவர். இப்பொழுது அவர் முகத்தில் முதுமையின் சுருக்கங்கள் அவரது அதிசயச் செயல்களின் பதிவுகளாய் அவைகளை எடுத்துக் கூறுவன போலவே இருக்கின்றன. தந்தையிடம் கண்ட பெருமை புதல்வனிடம் ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை. மேலே பேசுவானேன்? என் குமாரி அவனை நேசித்தால் எனக்கு மிகவும் திருப்தியாயிருக்கும்.'' இன்னும் விரிவாகப் பேசுவதற்குத் தடை ஏற்பட்டுவிட்டது. அவர் அரசரின் ஆராய்ச்சி மண்டபத்துக்குப் போக வேண்டிய சமயம் நெருங்கி வந்தது. ஆனால் சொல்லி முடித்ததிலிருந்தே இருவரில் யாரைத் தூக்கி வைத்திருக்கிறார் என்பது விளங்கவில்லையா? அவர் அரசசபைக்குச் சென்றது, அரசன் தன் குமாரனுக்கு ஓர் போதகாசிரியரைத் தேர்ந்தெடுக்கும் விஷயமாகத்தான். அந்தக் கௌரவம் அவருக்கேதான் உரியது. அவர் பராக்கிரமத்தையும் தீரச் செயல்களையும் உத்தேசித்தால் அதில் அவருக்குப் போட்டியிருக்க இடமில்லை. தமக்கே அது வரும் என்று அவர் எதிர்பார்ப்பது நியாயம்தான். சபை முடிந்ததும் ரோடரிகோ தம் தந்தையிடம் உன் விஷயத்தைப் பற்றிப் பிரஸ்தாபிக்க உத்தேசித்திருக்கிறார்; அதனால் அது சீக்கிரமே கைகூடி உன் விருப்பம் நிறைவேறிவிடும்.

ஷிமேனு : நிறைவேறுமா? என் மனத்தில் ஏதோ கவலை தட்டுகிறது. விதி ஒரு

ரிபிஷத்தில் காரியங்களைச் சிதற அடிக்கு மில்லையா? எனக்குள்ள பெரு மகிழ்ச்சி யில் ஏதாவது பெரிய விபத்து வருமோ என்ற பயமும் கலந்திருக்கிறதே!

எல்: அந்தப் பயம் அநாவசியமென்று சீக்கிரமே தெரியும், பாருங்கள்.

ஷிமே: சரி! என்ன ஏற்படுகிறதோ பார்ப்போம்.

காட்சி 2.

[அரசகுமாரி உரசகா, லேய ஷோரா, சேவகன்]

அர: சேவகா! ஷிமோனு விடம் சென்று நான் சொன்னதாய்ச் சொல்லு. இன்று என்னைக் காண வருவதில் கால தாமதமாகி விட்டது. அன்பு முறையிலேயே அப்படிக் கனி மயக்கத்தோடு சோம்பி இருப்பதைக் கண்டிக்கிறேனென்று சொல்லு.

[சேவகன் போகிறான்]



லே: அம்மணி! பிரதி தினமும் இதே ஆசையாயிருக்கிறதே உங்களுக்கு! திரும்பத் திரும்ப அவன் காதலனைப் பற்றியே கேட்டுக் கொண்டிருக்கிறீர்களே.

அர: அதில் விஷயம் இல்லாமலில்லை. அவனைத் துன்புறுத்தும் மன்மத பாணத்தை நான்தான் அங்கே திருப்புவித்தேன் என்றே சொல்லலாம். அவன் காதலிக்கும் ரோடரிகோவைப் பெறுவதற்கு என் உதவி வேண்டும். என்னால்தான் ரோடரிகோவும் தன் உதாசீனத்தை விட்டான். நான் ஏற்படுத்திய இந்தப் பிணைப்பைப் பூர்த்தி செய்து கொள்வதில் நான் சிறிதாவது அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டாமா?

லே: ஆனாலும், அம்மணி! அவர்கள் நேசம் வளர்ந்து வருவதில் உங்களுக்கு ஓர் அருவருப்பும் வளர்ந்து வருவதாகவே தெரிகிறதே. அவர்களுக்கு மகிழ்ச்சி பொங்கிக் கொண்டிருக்க, அவர்கள் மேல் அக்கறையுள்ள உங்களுக்கு ஓர் நிராசை ஏற்படுவது ஏனோ......? ஆனால் இப்படி நான் கேட்பது என் தகுதிக்கு மேல் பட்டதோ என்னவோ?

அர: ஒளிப்பதில் என்ன பயன்? அது வருத்தத்தை இரட்டிக்கவே செய்கிறது. என் மனோநிலையை விடாமல், நான் எதிர்த்துப் போராடிக் கொண்டேதான் இருக்கிறேன். ஆனால் காதல் என்ற சர்வாதிகாரி யாரை விட்டு வைத்தான்? ஷிமோனுவுக்கு ஒப்பிக்க வேண்டும் என்று நான் எண்ணியிருக்கும் இந்த இளம் வீரன்...அவனை ...நான் காதலிக்கிறேன்.

லே: நீங்களா? அவரையா?

அர: என் இதயத்தில் கைவைத்துப் பார்-இது எப்படித் தன்னை வென்றவனின் பேர் சொன்ன மாத்திரத்தில் அவனைத் தெரிந்து கொண்டு படபடக்கிறதென்று!......

லே : மன்னிக்க வேண்டும், அம்மணி! மரியாதை மீறியானாலும் நான் இதைக் கண்டித்தே தீரவேண்டும். வெறும் போர் வீரனுக்குத் தன் இதயத்தில் இடம் கொடுக்கும் தாரம் ஓர் உன்னத அரசகுமாரி தன்னை மறந்து விடுவதா? அரசர் இதற்கு என்ன சொல்லுவார்? காஸ்தில் தேசம் என்ன சொல்லும்? நீங்கள் யாருடைய புதல்வி என்பது உங்களுக்குக் கொஞ்சமாவது ஞாபகம் இருக்கிறதா?

அர : மறக்கவில்லை; என் பதவிக்கு இழிவு ஏற்படுவதைவிட என் இரத்தத்தைப் பெருக விடுவேன் என்ற உறுதி எனக்குண்டு. உனக்கு இன்னொரு பதிலும் சொல்லக் கூடும். தூய மனத்தூய அன்பை வளர்ப்பதற்குத் தகுதி ஒன்றே போதும். இன்னும் என் நிலைமைக்கு உத்தரவாதம் செய்வதென்றால் ஆயிரம் உதாரணங்களைச் சொல்லக்கூடும். ஆனால் என் கௌரவத்துக்குக் குறைவேற்படும் மார்க்கத்தில் செல்ல எனக்குச் சற்றும் விருப்பமில்லை. அரசகுமாரியா யிருப்பதினால் ஓர் அரசனுக்குக் குறைந்தவன் எவனும் எனக்குத் தகுதியில்லை என்பதை நானே எனக்கு எப்பொழுதும் ஞாபகமூட்டிக் கொண்டிருக்கிறேன். என் மனம் தடுமாறுமோ என்று எனக்குத் தோன்றியபோது, நான் எடுத்துக்கொள்ளக் கூடாத பொருளை இன்னொருவருக்குக் கொடுக்கத் தீர்மானித்தேன். எனக்குப் பதிலாக ஷிமேனாவை அவன் அன்பில் கட்டுவித்தேன். என் கொதிப்பைத் தணிப்பதற்கு அவர்கள் கொதிப்பை மூட்டுவித்தேன். இனி, எனக்கு வருத்தமானாலும், அவர்கள் மணந்து கொள்வதை ஆவலுடன் நான் எதிர்பார்த்திருப்பதில் ஆச்சர்யம் என்ன? அது ஏற்பட்டால்தான் எனக்கும் நிம்மதி வரும். நம்பிக்கை என்ற ஆகாரம் நின்று விட்டால் காதல் என்ற தீ அணைந்துவிடும். ரோடரிகோ ஷிமேனாவுக்கே உரித்தாகி விட்டால் எனது நம்பிக்கைக்கு இடம் அற்றுப் போகும். என் மனத்துக்குச் சாந்தி ஏற்படும். ஆனால் அது நடக்கும்வரை எனக்கு அளவில்லாத கஷ்டமாய்த்தான் இருக்கிறது. ரோடரிகோ என் அன்புக்கு உரியவனாகவே இருந்து கொண்டிருக்கிறான். அவனை இழக்கவே முயல்கிறேன். ஆனால் இழந்தாலும் வருத்தம். அதுதான் என் நிலைசத்தின் ரகசியம். உதாசீனம் காட்ட வேண்டிய இடத்தில் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கிறேனே என்று எனக்கே அருவருப்பாய் இருக்கிறது. என் மனோ இடம் ஒரு புறம் ஓங்கி நிற்கிறது. மற்றொரு புறம் என் அன்பு கொழுந்து விடுகிறது. அவ்விருவரும் மணந்து கொள்வது எனக்கு இறுதி போன்றது. அதற்காகப் பயப்படுகிறேன்; ஆனால் அதையே விரும்புகிறேன். அதிலிருந்து திருப்தியேற்படும், ஆனால் அரைகுறைத் திருப்திதான். கௌரவம் ஒரு பக்கமும் அன்பு ஒரு பக்கமும் சம வசீகரமாய் இருக்கின்றன; அவர்கள் மணந்தாலும் இறப்பேன், மணந்து கொள்ளாவிட்டாலும், இறப்பேன்.



லே : அம்மணி, இதைக் கேட்ட பிறகு, நான் உங்களுடன் உங்கள் கஷ்டத்துக்காகப் பெருமூச்சு விடுகிறேன் என்பதைத் தவிரச் சொல்வதற்கு வேறொன்றும் இல்லை. உங்களைக் கண்டித்தேன் : இப்

பொழுது அநுதாபமே உரியது என்று தெரிகிறது. இன்பமும் துன்பமும் கலந்த இந்த நிலைமையில் உங்கள் மனோநிடத் திறனிலேயே உங்களைப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறீர்கள். அதுவே உங்களை நிலைநிற்கச் செய்யும். அந்தப் பலத்தையே நம்பி யிருங்கள். காலமும் உங்களுக்கு ஆறுதலைக் கொடுக்கும். எல்லாவற்றுக்கும் மேல் கடவுளை நம்பி யிருங்கள்; தூய மனமுள்ளவர்களை அவர் கஷ்டத்தில் நீடித்து வைத்திருக்க மாட்டார்.

அர: மேலான நம்பிக்கை, என் அன்பு கைகூடும் என்ற நம்பிக்கை அற்றுப் போக வேண்டும் என்பதுதானே.

(சேவகன் பிரவேசம்)

சே: உங்கள் உத்தரவுப்படி ஷிமேனு வந்து கொண்டிருக்கிறார்.

அர: அடுத்த அறைக்கு அழைத்துக் கொண்டு போ.

(சேவகன் போகிறான்)

லே: கொஞ்ச நேரம் சிந்தனையில் இருக்கப் போகிறீர்களா?

அர: அப்படியில்லை, வருத்தத்தை மறந்து முகத்தைத் திருத்திக் கொண்டு, சில நிமிஷங்களில் வந்து விடுகிறேன்.

(லேயனோரா போகிறாள்)

லே: ஈசனே! நீதான் மருந்து. என் கஷ்டத்துக்கு ஒரு எல்லை வை. எனக்குச் சாந்தியைக் கொடு. என் கௌரவத்தையும் நிலைநிறுத்து. அவ்விருவர் மகிழ்ச்சியில் தான் என் மகிழ்ச்சியைத் தேடுகிறேன். அந்தத் திருமணம் எங்கள் மூவருக்கும் முக்கியம். அதன் பலனைச் சீக்கிரமாய்க் கைகூட்டு. அல்லது என் மனத்துக்கு இன்னும் திடத்தைக் கொடு. அவ்விருவரும் இணைந்து விட்டால் என் தலை அறுபடும். என் கஷ்டம் நிவர்த்தியாகும். தாமதமாகி விட்டது. ஷிமேனுவைப் போய்ப் பார்த்து அவனுடன் பேசிக் கொஞ்சம் ஆறுதலை அடைகிறேன்.

காட்சி 3

[கோமேக, தியேகோ]

கோ: கடைசியில் அதை நீங்களே அடைந்து விட்டீர்கள். அரசர் தம் குமாரனுக்கு உங்களையே ஆசிரியராக நியமித்து விட்டார். எனக்கே உரித்தாயிருந்த பதவிக்கு அரசனின் அனுமதியானது உங்களையே தூக்கிவைத்து விட்டது.

தியே: எங்கள் குடும்பத்துக்கு அரசர் இந்தக் கௌரவத்தைக் கொடுத்தது. அவர் நியாயம் தெரிந்தவர், முன் ஆற்றிய சேவைக்கு வெகுமதி கொடுக்கத் தெரிந்தவர் என்பதைத்தானே காண்பிக்கிறது.

கோ: அரசர்கள் எவ்வளவு பெரியவர்களாயிருந்தாலும், நம் போன்றவர்களையும் ஒத்துத்தான் இருக்கிறார்கள். அவ்வப்போது சாதாரண மனிதர்களைப்போலவே ஏமாந்து தவறு செய்து விடுகிறார்கள். நிகழ்காலச் சேவைக்கு மதிப்பு வைக்கத் தெரியாதவர் என்று அரசர் இதன் மூலம் சபைக்கெல்லாம் காட்டி விட்டார்.

தியே: உங்களுக்கு அதில் மன வருத்தம் இருந்தால் பேச்சை விட்டு விடுவோமே!

✲ அருள் வாக்கு ✲

பசுவினுடைய தூளி மிகவும் விசேஷமானது. உடுப்பியில் சமாராதனை நடந்தபின் அந்த இடத்தைச் சுத்தம் செய்யப் பசு மாட்டை ஓட்டி விடுவார்கள்.

வைத்திய சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட காயசித்தி முறைகள் பலவற்றில் மாட்டுமந்தையில் இருந்து கொண்டு செய்தால் விசேஷ பலன் உண்டு என்று சொல்லப்பட்டிருக்கிறது. புருஷர்களைவிட ஸ்திரீகளுக்கு அநுகூலங்கள் அதிகம். அவர்களுக்குக் கண்ணுக்குத் தெரிந்த தெய்வமாகக் கணவன் இருக்கிறார். கணவன் மூலமாக ஸ்வாமியை வணங்குகிறார்கள். பெண்களுக்குப் புருஷர்களைப் பின்பற்றுதல் மிகவும் புண்ணியமான காரியம். சிஷ்யர்களுக்குக் குருவினிடத்தில் ஈசுவரன் இருக்கிறான். மாட்டுப் பூஜை செய்வதன் காரணம் அதற்குள்ளே ஈசுவரன் குடி கொண்டிருக்கிறான் என்பதுதான்; மாடு கறுப்பு. அதன் கொம்பு கோணல் என்ற குறைகளை நாம் பாராட்ட மாட்டோம். அது போல் பதியின் குணதோஷங்களைப் பாராட்டாமல் உண்மையாக சேவிக்க வேண்டும்.

—ஸ்ரீ சங்கராச்சாரியார், காஞ்சி காமகோடி பீடம்

என் தகுதியைவிட அரசர் தகுதி பெரிதாயிருந்ததென்றே வைத்துக்கொள்வோமே. ஆனால் அரசர் கட்டளையிட்ட பிறகு, அதைப் பரிசீலனைசெய்யக் கூடாதென்பது தளிநாயகத்துக்கேற்ற மரியாதையல்லவா? அதிருக்கட்டும். அரசர் கொடுத்த கௌரவத்துக்குத் துணையாக நீங்களும் எனக்கு ஒரு கௌரவம் கொடுக்க வேண்டுமென்று கோரிக் கொள்கிறேன். நம் இரு குடும்பங்களுக்கும் சம்பந்தம் ஏற்பட வேண்டும். உங்களுக்கு ஒரே புத்திரி. எனக்கும் ஒரே புத்திரன். அவர்கள் விவாகம் மூலம் நாம் நண்பர்களாகமட்டும் இல்லாமல் சம்பந்திகளாவோம். நீங்கள் கிருபை செய்து என் குமாரனை மருமகனாய் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

கோ: ஹாம். இதைவிட எவ்வளவோ மேலான சம்பந்தங்களை அவன் இப்பொழுது எதிர்பார்க்கலாமே! உங்கள் புது அந்தஸ்துக்கு ஏற்ப அவன் மனம் இன்னும் உயரே நோக்க வேண்டாமா? உங்கள் அந்தஸ்தைச் செலுத்துங்கள். அரசகுமாரருக்குப் போதனை செய்யுங்கள். ஒரு பிராந்தியத்தை எப்படிப் பரிபாலனம் செய்ய வேண்டும்; மக்களைத் தண்ட நீதியில் எப்படி அடக்கி வைக்க வேண்டும்; எப்படி துஷ்ட நிக்ரகம் சிஷ்ட பரிபாலனம் செய்ய வேண்டும். இதை

யெல்லாம் கற்பியுங்கள். சேனுநாயகனுக வும் இருக்கக் கற்பியுங்கள். கஷ்டங்களைச் சகிக்கும் மன உறுதி. போர்க் கலையில் இணையற்றவனுப் ஆக்கிக் கொள்வது; தன் தனி வீரத்தினுலேயே வெற்றி பெறுவது-இவற்றை யெல்லாம் கற்பியுங்கள். ஆனுல் இவையெல்லாம் செய்கை யளவில் உதாரணமாகக் காட்டினுல் அல்லவா பக்குவமடையும்?

டியே: உங்கள் கொடுமை ஒரு புறம் இருக்கட்டும். செய்கை உதாரணத்துக்கு என் சுய சரித்திரத்தை வாசித்தாலே போதும் என்று நினைக்கிறேன். அதில் போற்றத்தக்க செயல்கள் சில அடங்கி யிருக்கின்றன. தேசங்களை ஆதிபத்யத்துக் குள்ளாக்குவது. கோட்டைகளைத் தாக்கு வது. சேனையை யுத்த சன்னத்தமாகச் செய் வது. வீரச் செயல்களால் புகழ் பெறு வது இவையெல்லாம் போதுமான அளவு தெரிந்து கொள்ளலாம்.

கோ: இறந்த உதாரணங்களைவிட ஜீவ னுள்ள உதாரணங்களாய் இருந்தால் உப யோகமாயிருக்கும். புத்தகத்தி லிருந்து மாத்திரம் ஓர் அரசகுமாரன் தன் கடமை களைக் கற்றுக் கொள்வது துர்லபம். அது கிடக்கட்டும். இவ்வளவு வருஷக்கணக் காய் நீங்கள் செய்ததை யெல்லாம் நான் ஒருநாட் பொழுதில் செய்ய வல்லவன் என்று அறியுங்கள். நீங்கள் ஒரு காலத்தில் தீரராய் இருந்திருக்கலாம்; ஆனுல் இப் பொழுது தீரனுய் இருந்துகொண்டிருப் பவன் நான்தான். இந்தத் தோள்வலிமை யிலேயே இந்த அரசாங்கம் நிலைத்து நிற் கிறது. இந்தக் கத்தி ஒளி வீசினுல் க்ர னாடாவென்ன, அரகான் என்ன, எல்லா அரசாங்கங்களும் நடுங்கும். என் பெயரே இந்தக் காஸ்டில் தேசத்துக்கெல்லாம் அரண். நான் இல்லாவிட்டால் நீங்கள் எல்லோரும் மற்றவர்களால் கைப்பற்றப் படுவீர்கள். உங்கள் பகைவர்கள் அரசர் களாவார்கள். ஆனுல் நானே என் புகழை வளர்ப்பதற்குப் பிரதி தினமும், பிரதி நிமிஷமும் வெற்றியைத் தேடிக் கொண்டிருக்கிறேன், வெற்றி மாலையைச் சூடிக் கொண்டிருக்கிறேன். என்போதனை யிருந்தால் அரசகுமாரர் நான் போர் செய்யும்பொழுது என் அருகிலேயே நிற் பார். என் தோள்களின் அணைப்பிலேயே தம் தைரியத்தைப் பரிசோதித்துக் கொள்வார், என் செய்கைகளைப் பார்த்து வெற்றி பெறக் கற்றுக் கொள்வார். அவர் உயர்ந்த குணத்துக்கேற்ற பெரு மையை அவர் காண்பார்.

டியே: எனக்குத் தெரியாததன்று. நீங்கள் அரசருக்கு உரித்தான சேவை செய்து கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் போர் புரிவதையும், சாயகம் செலுத்து வதையும் நானும் பார்த்திருக் கிறேன் — என் சேனுதிபத்யத்தின் கீழ் நீங்கள் தொண்டு செய்து கொண்டிருக் கும் பொழுது. வயதினுல் என் சக்திகள் தளர்ந்தபிறகு என் பதவியை உங்க ளுடைய அரிய பராக்கிரமத்தால் தகுதி யுடன் வகித்து வருகிறீர்கள் என்பதும் தெரியும். இந்தப் பேச்சை அதிகம் பார்ப் பானேன். நான் முன்னர் எவ்வாறு இருந் தேனே, அவ்வாறு நீங்கள் இப்பொழுது இருக்கிறீர்கள்; ஆனுல் நம் இருவரில் தார தம்மியம் பார்த்ததில் அரசர் கொஞ்சம் வித்தியாசம் கண்டிருக்கிறுர் என்பது வெளிப்படையல்லவா?

கோ: எனக்கு உரித்தானதை நீங்கள் தட்டிக்கொண்டு போய் விட்டீர்கள்.

டியே: ஜயித்தவன் அதற்கு அதிக அருகதையுள்ளவன் என்று வைத்துக் கொள்ளலாமே.

கோ: யாருக்கு அதை நிர்வகிக்க] அதிக சக்தியுள்ளதோ அவனுக்குத்தான் அதிக அருகதை.

டியே: ஆனுல் அது மறுதலிக்கப் பட்டது நல்ல சின்னமாகத் தோன்ற வில்லையே.

கோ: கெஞ்சுவதே நெடும் பழக்கமாவ தால், அரசரை மன்றாடி அதை அடைந்து விட்டீர்கள்.

டியே: எனக்காக மன்றாடினவை என் பராக்கிரமச் செயல்களைத்தவிர வேறில்லை.

கோ: அதைவிட, அரசர் உங்கள் வய துக்கே கௌரவம் கொடுத்தார் என்று சொல்லலாமே.

டியே: அரசர் அப்படிச் செய்தால், தீரத்தையும் அளவிட்டு நோக்கியே செய்திருப்பார்.

கோ: அப்படி நோக்கினுல் அந்தக் கௌரவம் என் தோள் வலிமைக்கே உரியதல்லவா?

டியே: யாருக்கு அது பொருந்தவில் லையோ, அதற்கு அவருக்குத் தகுதியில்லை.

கோ: தகுதி இல்லையா? எனக்கா?

டியே: ஆம். உங்களுக்கேதான்!

கோ: துணிச்சலுள்ள கிழமே! உன் அடுக்குத்தனத்துக்கு இந்தா வெகுமானம்!
(கன்னத்தில் அறைகிறுன்)

டியே: (கத்தியை உருவிக் கொண்டு) என் பரம்பரையில் முதன்முதலாய் முகம் நாணத்தால் சிவக்க ஏற்பட்ட இந்த அவ மானத்துக்குப் பிறகு-வா! ஒரு முடிவு கட்டுவோம். என் உயிர் போனுலும் சரி...

கோ: ஆடி விழும் கிழத்தனத்தினுல் நீ என்ன சாதித்து விடுவதாக உத்தேசம்?
(டியேகோவின் கத்தியைத் தட்டிக் கீழே தள்ளுகிறுன்)

டியே: ஐயோ, தெய்வமே! என்னை விட்டு இழந்துபோன சக்தி என்னை முற்றி லும் கைவிட்டுவிட்டதே!

கோ: உன் கத்தி என் வைவசமாகி யிருக்க வேண்டியது ஆனுல் அதை என் கையால் தொடுவதே உன் தகுதிக்கு மேற்பட்ட கௌரவம் கொடுத்ததாகும். விடைபெற்றுக் கொள். என் கொடுமை ஒருபுறமிருக்க, அரசகுமாரருக்குக் கற்பிப் பதற்காக உன் வாழ்க்கை வரலாறு முழு வதையும் வாசித்துக்காட்டு; இன்று உன் அதிகப் பிரசங்கத்துக்குத் தகுந்த தண்டனை நீ அடைந்ததும் அதில் ஓர் மணியான அம்சமா யிருக்கும். (தொடரும்)


PEARS
Midland
PINEAPPLE SLICES

'கூ' என்ற சத்தத்தையடுத்துக் 'குப், குப்' என்று பெருமூச்சுடன் வண்டி அசைய ஆரம்பித்துத் தன் பிரயாணத்தைத் தெரிவித்தது மற்றவர்களுக்கு. பரபரப்பாக ஓடி வந்த இருவரிடம் இருந்த சாமான்களோ ஏழெட்டு இருக்கும். முதலிலிருந்து கடைசி வரை பார்த்துக் கொண்டு வந்தவர்கள் ஒவ்வொரு பெட்டியும் நிரம்பி வழிவதைக் கண்டார்கள். வண்டி அசைய ஆரம்பித்த போது, "ஏறு பத்மா, ஏறு!" என்று துரிதப்படுத்திய சேஷாசலம் அவளைப் பெண்கள் வண்டியில் பலவந்தப்படுத்தித் திணித்தான். ஜன்னல் வழியாகச் சாமான்கள் மனிதர்களின் தலைமேல் வந்து விழுந்தன.

வேறொரு பெட்டியில் தொத்திக் கொண்ட சேஷாசலம் நிம்மதியாகப் பெருமூச்சு விட்டான். ஒரு மணி நேரத்துக்கு முன் தான் தந்தி வந்தது. உடனே புறப்பட்டிருந்தால் சாவகாசமாக இடம் பிடித்திருக்கலாம். சாமான் கட்டும் போது கடிகாரம் செய்துவிட்ட சதி தெரியவில்லை. வண்டி புறப்பட நேரம் இருக்கிறது என்று எண்ணிவிட்டான். கடிகாரம் நின்று தொலைத்த விஷயம் பின்புதான் அவனுக்குத் தெரிந்தது. போட்டது போட்டபடியே போட்டுவிட்டுப் பறந்து வந்தார்கள் பத்மாவும், சேஷாசலமும். எப்படியோ வண்டியைப் பிடித்தும் ஆகிவிட்டது.



சேஷாசலத்தின் அண்ணா சென்னையில் இருந்தான். அவனுடைய பெற்றோர்கள் குழந்தைகுட்டிக்காரனை அவனுக்கு உதவியாக அங்கே தங்கியிருந்தார்கள். அதற்காக மட்டும்தானா அவர்கள் தங்கியிருந்தார்கள்? 'இல்லை' என்று மறுத்தது மனம். அம்மாவுக்கு உடல் நலம் சரியில்லை என்று இரண்டு நாட்களுக்கு முன் கடிதம் வந்திருந்தது. இன்று தந்தியே வந்து விட்டது. பெற்ற பாசமும் பிள்ளைப் பாசமும் ஒன்றையொன்று போட்டியிட்டுக் கொண்டு தந்தி கொடுக்கவும், தந்தியைக் கண்டதும் பறந்தோடும்படியும் செய்தன. எந்தப் பத்மாவுக்காக அவன் தாய் தந்தையரைப் பிரிவதற்குத் தயங்கவில்லையோ, எந்தப் பத்மாவோடு மனம் ஒன்றியதனால் அவன் தன் பெற்றவர்களைப் பொருட்படுத்தவில்லையோ, இன்று அவள் வேறு அவன் வேறாகப் பிரயாணம் செய்துகொண்டிருந்தார்கள்.

★

தந்தம் போன்ற உடலும் ரோஜாவின் மென்மையும் கூடியவள் பத்மா. பெற்றோருக்கு ஒரே பெண். கல்லூரியில் படித்து வந்தாள். பெண்ணுக்கு மணம் செய்து கொடுத்துத் தங்களுடனேயே மாப்பிள்ளையையும் வைத்துக் கொள்ள வேண்டும் என்று பத்மாவின் பெற்றோர்கள் விரும்பியதில் வியப்பில்லைதான். அதனால் அவர்கள் வெளியிடத்தில் வரன் தேட முயலவில்லை. பத்மாவின் மாமா பிள்ளை ரங்கநாதன் வீட்டோடு இல்லாமற் போனாலும் உள்ளூருக்குள்ளேயே இருந்தான். பெற்றோர் இல்லாதவன். ஹாஸ்டலில் சேர்ந்து படித்துவந்தான். அவனுக்குப் பத்மாவை மனைவியாக்கி விடுவது என்று திட்டமிட்டிருந்தனர் அவளுடைய தாய்தந்தையர்.


பத்மாவின் உள்ளம் சிறு வயது முதலே அவனிடம் ஈடுபட்டிருந்தாலும் அதைக்

காதல் என்று சொல்ல முடியாது. மாடப் புறுவைப் போல் சிறகடித்துப் பறந்த அவள் கற்பனைக்கு அவனை ஏற்றவனைச் சொல்ல முடியாது. ஆனால் ரங்கநாதன்..? பெண் மனத்தைப் புரிந்து கொள்ளும் பக்குவம் வேண்டாமா? பத்மாவையும் தன்னையும் நினைத்துக் கொண்டு அவன் பல கற்பனைகள் கட்டிக் கொண்டிருந்தான்.

★

படித்து விட்டுப் பல இடங்களுக்கும் வேலைக்காக மனுச் செய்திருந்த சேஷாசலத்துக்குத் திருநெல்வேலியில் வேலை கிடைத்தது விந்தையல்ல. அவன் பத்மாவின் வீட்டு மாடியில் அறை எடுத்துக் கொண்டு தங்கியதுதான் விந்தை. அதோடு அழகி பத்மாவிடம் அவன் மனத்தைப் பறி கொடுத்தது அதிசயமல்ல. ஆடவரை அலட்சியமாக நோக்கும் பத்மா சேஷாசலத்தின் பார்வைக்கு நாணித் தலை கவிழ்ந்ததுதான் அதிசயம்.

பெண்ணின் போக்கைப் புரிந்து கொள்ளாத தாயார் உண்டா? இனி தாமதம் கூடாது. அவள் ஆசையை முளையிலே கிள்ளி விடவேண்டும் என்று எண்ணிய தாயார் கணவனிடம் கலந்து பேசிக் கல்யாணத்தை உடனே முடிப்பதற்குத் திட்டம் போட்டு விட்டாள்.



பத்மாவின் நெஞ்சம் பற்றி எரிந்தது. ரங்கநாதனிடம் நேரிலேயே சொல்லலாமா? அவன் சொல்லும் பதில் என்னவாக இருக்கும் என்பது அவளுக்குத் தெரிந்ததுதானே? 'பெரியவர் செய்ய வேண்டிய காரியத்தில் நாம் குறுக்கிடுவானேன்?' முறுக்கைக் கடிப்பதுபோன்ற ஓசை கேட்டது. பத்மாதான் பல்லைக் கடித்துக் கொண்டாள்.

அன்று அம்மாவும் அப்பாவும் கடைக்குப் போயிருந்தார்கள். தனித்திருந்த பத்மாவிடம் ரங்கநாதன் ஏதோ சொல்ல வந்து, சூடாக வாங்கிக் கட்டிக் கொண்டு போனான். கல்யாணத்துக்கு வேண்டிய சில சாமான்களுடன் தாயாரும் தந்தையும் வீடு வந்தபோது, மகள் முகம் சிவக்க விம்மிக் கொண்டிருப்பதைக் கண்டார். தற்கொலை முயற்சிக்குக் கூட அவள் துணிந்திருக்கிறாள் என்பதை விளக்குக் கம்பி மாட்டும் கொக்கியில் தொங்கிய கயிறு காட்டியது. தந்தை ரகுநாதன் பதறிப் போனார். வெகு நேரக் கெஞ்சுதலுக்குப் பின்தான் பத்மா விஷயத்தைக் கூறினாள்.

பெற்றோர் இல்லாத வேளையில் வந்து ரங்கநாதன் தன்னிடம் தவறாக நடந்து கொள்ள முயன்றதாகச் சொன்னாள்.

தாயார் மகளின் பேச்சைப் பூரணமாக நம்பவில்லை. அவனுக்கென்று முடிவாகிவிட்ட உடைமையிடம் வேடிக்கையாகப் பேசி விளையாடினது தவறில்லை என்பது அவள் அபிப்பிராயம். ஆனால் தந்தையோ அவ்வளவு ஆத்திரக்காரனுக்குப் பெண்ணைக் கொடுப்பதில்லை என்று ஒற்றைக்காலில் நிற்பதற்குத் தொடங்கி விட்டார்.


மறுநாள் வழக்கம்போல் வந்த ரங்கநாதன் அடைந்த அவமானம் இவ்வளவு அவ்வளவல்ல. கூச்சலுக்கும், சண்டைக்கும், குழப்பத்துக்குமிடையே அவன் ஒருவாறு விஷயத்தைப் புரிந்து கொண்டான். தன்மீது அபாண்டப் பழி சுமத்தப்படுவதை அவனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

'ஒருநாள் இல்லாவிட்டால் ஒருநாள் என்மேல் நீ சுமத்தியது வீண் பழி என்பதை உன் மனமே உனக்கு இடித்துக் காட்டும். ஆனால் இதேமாதிரியான ஒரு சம்பவம் நடக்க வேண்டும். அதற்காக நீ மனம் வருந்த வேண்டும். அதைக் கண்ட பின்னரே நான் மன நிம்மதியுடன் மடிய வேண்டும்!' என்று ஆத்திரக் கனலைக் கக்கி விட்டு அன்று போனவன்தான் மறுபடியும் வரவே இல்லை.

குறிப்பிட்ட முகூர்த்தத்திலேயே சேஷாசலத்துக்கும் பத்மாவுக்கும் கல்யாணமாயிற்று. சேஷாசலத்தின் பெற்றோருக்குச் சம்மதமில்லைதான். சிறிது நேரத்தில் உணர்ச்சி வசப்பட்டுச் செய்து கொள்ளும் மணம் வெகு காலத்துக்கு நீடித்த அன்போடு இருக்குமா? என்பது அவர்கள் எண்ணம். மகளின் பிடிவாதத்தை மறுக்க முடியவில்லை. மூன்றாம் மனிதர்கள் போல் கல்யாணத்துக்கு வந்து விட்டுப் போனார்கள்.

★

மாலை அவர்களைச் சுமந்துகொண்டு வந்த வண்டி மதுரை வரும்போது இரவு


தைப்பதில் உன்னத மகிழ்ச்சி !
எவரஸ்ட்
தையல் மிஷின்கள்
ஷாரதா மெஷினரி கார்ப்பொரேஷன், 11, பூஸாரோடு, புது தில்லி-5
சென்னை ஏஜெண்டுகள் :
முஹம்மது இப்ராஹிம் & கோ. பிரைவேட் லிட்., விக்டர் ஹவுஸ், 7/8, மவுண்ட் ரோடு, சென்னை - 2


இருமல்!
இருமலிக்கும்
நிரந்தரமான குணத்திற்கு
COUGH
SYRUP
பி. ஐ. காப் ஸிரப்
பெங்கால் இம்யூனிட்டி

மணி ஒன்பதாகி விட்டது. பெருமூச்சுடன் தன் பிரயாணிகளின் களைப்பையும் போக்கிக் கொள்வதற்காக நின்றது ரயில்.

"பத்மா...பத்மா!... பத்மா!" சேஷாசலத்தின் வாயிலிருந்து பல முறை ஒலித்த குரல் கற்பனை உலகிலிருந்து அவளை இழுத்து வந்தது.

"ஏன்?" என்று பதற்றத்துடன் கேட்டாள் அவள்.

"உட்கார்ந்து கொண்டே தூங்குகிறாயா, என்ன?"

"இல்லை; ஏதோ எண்ணங்கள்!"

"எண்ணங்களா? என்ன எண்ணங்கள்? இந்தச் சேஷாசலத்தைக் கட்டிக்கொண்டு கஷ்டப்பட வேண்டியிருக்கிறதே என்று?"

"போங்கள், உங்களுக்கு எப்பொழுதும் பரிகாசம்தான்!"

"நான் இப்பொழுது என்ன பரிகாசம் செய்து விட்டேன்?"

"ஏதடா ஒருத்தி இப்படித் தனியாக உட்கார்ந்திருக்கிறாளே என்று உங்களுக்குத் துளியாவது தோன்றுகிறதா?"

"நிறையத் தோன்றுகிறது. உன்னை அழைத்துப் போய்ப் பக்கத்தில் உட்கார வைத்துக் கொள்ளுவோமா? அல்லது மடியிலேயே உட்கார வைத்துக்கொண்டு விடுவோமா என்று யோசிக்கிறேன்."

"மடியில் உட்கார வைத்துக் கொள்வானேன்? தலையில் தூக்கி வைத்துக் கொண்டுதான் கூத்தாடுங்களேன்! இப்படிப் பேசுவதற்கு உங்களுக்கு வெட்கமாயில்லை?"


"வெட்கம் என்ன, வெட்கம்? அப்போ ஒண்ணு சொல்லட்டுமா? இந்தப் பெட்டிக்கு வந்து விடட்டுமா?"

"பெண்பிள்ளை வண்டிக்கா?"

"ஏன்? உன்னிடம் இருக்கும் ஒரு புடவையை யெடுத்து நான் கட்டிக் கொண்டால் போயிற்று!"

"இங்கேயும் நெரிசல் தாளவில்லையே!"

"அதனாலே நீ சொல்வது என்னவென்றால் இங்கே வந்து தொந்தரவு கொடுக்காதே என்கிறாய். சும்மா வரவில்லை. இந்தா! இதைக் கொடுக்கத்தான் வந்தேன்!" என்று சொன்னவன்,



"பார்த்தீங்களா இந்தப் பழமொழியை, நமக்காகத் தான் எழுதி யிருக்காங்க. நாமெல்லாம் நோயில்லாமல் வாழணும்னு டி. டி. டி. பிளிட் முதலியவைகள கிட்டப் போகவே கூடாது!"

"கழுத்திலே போட்டிருக்கிற நெக்லேஸ் நன்றாகத்தான் இருக்கிறது. இரவு வேளைகளிலும் 'டால்' அடிக்கிறது. படக்கூடாதவர் கண்ணில் பட்டால்..." என்றான்.

அதைக் கேட்டது தான் தாமதம்; பத்மாவின் கண்கள் எங்கோ நோக்கி வெறித்துப் பார்த்தன.

"என்ன பத்மா?"

பத்மா திக்கித் திணறி மெல்ல விஷயத்தைச் சொன்னாள். "ரயில் நிற்கும் இடமெல்லாம் ஒருவன் இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் போகிறான். அதோ பாருங்கள்! அவன்தான்" என்று சுட்டிக் காட்டி, "என்னை விழுங்குவது போல் பார்க்கிறான்!" என்றாள் பத்மா.

சேஷாசலம் பெருமையுடன் சிரித்துக் கொண்டே, "அழகான பொருளை எல்லாரும்தான் பார்ப்பார்கள். அவனுக்கு வேண்டிய உறவுப்பெண் யாராவது இந்தப் பெட்டியில் இருக்கிறாளோ என்னவோ?" என்றான்.

"என் எதிரில் ஒருத்தி உட்கார்ந்திருக்கிறாளே, அவளுடன் வந்து அடிக்கடி பேசுகிறான்!" என்று கணவனுக்குமட்டும் காதில்படும்படியாகக் கூறினாள் பத்மா.

பேச்சு சுவாரசியத்தில் மணி ஆகி விட்டது தெரியவில்லை. வண்டி கூக்குர லிட்டு நகரத் தொடங்கியது. "சீக்கிரம் போய்ப் பெட்டியில் ஏறிக் கொள்ளுங்கள்!" என்று துரிதப்படுத்தினாள் பத்மா. கணவனுடைய உருவம் மறைந்தது; ரயில் வேகம் எடுத்துக்கொண்டது.

கொஞ்ச நேரத்துக் கெல்லாம் கொடைக்கானல் ரோடு வந்து விட்டது. ஸ்டேஷனும் சிறியது. மலைப் பழம் வாங்குவதில் முனைந்திருந்தார்கள் பிரயாணிகள். அதிக ஜன சந்தடியில்லை. கழுத்தை எக்கி எக்கிப் பார்த்துக்கொண்டிருந்த பத்மாவை நோக்கி ரயில்வே அதிகாரி ஒருவர் வந்தார்.

"இங்கே பத்மா யார்?"

தூக்கி வாரிப் போட்டது பத்மாவுக்கு. "ஏன், நான்தான்!" என்றாள்.

"உங்கள் கணவர்தானே சேஷாசலம்?" என்று கேட்டார் அதிகாரி.

"ஆமாம்" என்றாள் பத்மா.

"மதுரையில் புறப்பட்ட இந்த வண்டியில் தங்கள் கணவர் ஏற முடியவில்லை. இங்கே இறங்கிக் காத்திருந்தால் உங்களுடன் அவர் சேர்ந்துகொள்வாராம்." மதுரை ஸ்டேஷனிலிருந்து கொடைக்கானல் ரோடு ஸ்டேஷனுக்கு வந்த தந்தியின் சாரம் அது. ரயில் தன் பயணத்தைத் தொடர ஆரம்பிக்கையில் பத்மா சாமான்களுடன் வண்டியிலிருந்து இறங்கிக் கொண்டாள். ரயில் போனதும் மலைப் பழ வியாபாரிகளும் போய் விட்டார்கள். கொடைக்கானல் ரோடு வெறிச்சோடிக் கிடந்தது. மனத்தைப் பயம் கௌவியது. பிரயாணிகள் காத்திருக்கும் அறையில் பத்மாவையும் சாமான்களையும் சேர்த்து விட்டு அதிகாரி போய் விட்டார்.

நிமிஷங்கள் ஓடிக் கொண்டிருந்தன. நகைகளை யெல்லாம் கழற்றிப் பெட்டியில் வைத்துப் பூட்டிய பத்மா கணவனுக்காகக் காத்திருந்தாள். ஸ்டேஷனுக்கு வெளியே ஒரு கார் வந்து நின்றது. காரை ஓட்டி வந்தவன் அதிகாரிகளுடன் பேசி விட்டுப் பத்மா இருக்குமிடத்துக்கு வந்தான். அவன் அறிந்த செய்தியானது:

'ரயிலில் ஏற முயன்ற சேஷாசலம் கீழே விழுந்து விட்டான். கணுக்கால் பிசகி வீங்கி யிருக்கிறது. அதிர்ச்சியில் ஜுரம் வேறு வந்துவிட்டது. வாடகை மோட்டார் அமர்த்திக் கொண்டு வந்து விட்டானாம். அதிலேயே பத்மாவுடன் திண்டுக்கல் வரை போய்ச் சேர்ந்து விட்டால் சௌகரியம் என்ற எண்ணமாம்.'

சாமான்களுடன் பாய்ந்து ஸ்டேஷனுக்கு வெளியே வந்தாள் பத்மா. பளபளத்த அந்தக் கார் ஒதுக்கமாக நின்றது. "ஐயோ! உங்களுக்கு என்ன, சோதனைக்குமேல் சோதனையா?" என்று புலம்பிக் கொண்டே போர்த்து மூடிக் கொண்டு பின் ஆசனத்திலிருந்த உருவத்தின் மேல் கை வைத்தாள். இதற்குள் சாமான்களை எடுத்து வண்டியில் போட்ட கார் ஓட்டி காரைக் கிளப்பிவிட்டான். கூஜாவும், பிளாஸ்கும் பிரயாணிகள் காத்திருக்கும் அறையிலேயே கிடந்தன. அதிகாரிகள் அருகில் வருவதற்கு முன் கார் பறந்தது.

அதற்குமேல்தான் பத்மா எதிர்பாராதது அடுக்கடுக்காய் நடந்தது. மூடிப் படுத்திருந்தவன் அவள் கணவனல்ல. ரயிலில் எதிர்பெஞ்சில் பத்மாவைக் கண்காணித்த பெண்ணும், அவளை உறுத்து உறுத்துப் பார்த்தவனும் வண்டியில் இருந்தார்கள். தான் ஏமாற்றப் பட்டு விட்டோம் என்பதை உணர்ந்தாள் பத்மா. அவள் கண்களில் தெரிந்த அந்தத் தோற்றம்; ரங்கநாதனா? கடைசியாக அவளிடம் கூறிவிட்டுப்போன அதே தோற்றத்தைப் போல் இருந்தது. இது எல்லாமே ரங்கநாதன் செய்த சூழ்ச்சியா? அவள் பணத்துக்காக, அழகுக்காக அவர்கள் அவளை என்ன வேண்டுமானாலும் செய்வார்கள். அவளை நெருங்கி வந்தான் அவன். அவள் கதறினாள். சுய நினைவு இழந்தாள் பத்மா.

தாமரை இதழ் போன்ற கண்களைப் பத்மா திறந்தபோது ஜன சந்தடி நிறைந்தஇடத்தில் இருப்பதைத் தெரிந்து கொண்டாள். சேஷாசலம் அவள் தலையை வருடிக் கொண்டிருந்தான்.

"கடைசியில் ரங்கநாதன் தன் எண்ணத்தைச் செயல்படுத்த முனைந்து விட்டான். பார்த்தீர்களா...?" என்ற மனைவியின் வாயைப் பொத்தினான் சேஷாசலம்.

போக்கிடம் இல்லாதவனுக்கு வேலை கிடைப்பது எளிதா? பல இடங்களில் அலைந்து அலுத்துப் போன ரங்கநாதன் போலீசில் சேர்ந்தான்.

ரயிலில் போகிறவர்களைப் பல தந்திரங்களைக் கையாண்டு கொள்ளையடிக்கும் ஒரு கூட்டத்தைக் கண்டுபிடிக்க அவன் பாடுபட்டிருக்கிறான்.

அவர்கள் வலையில் சிக்கப் போகிறவள் பத்மாதான் என்பதை மாறு உடையில் அதே ரயிலில் பிரயாணம் செய்த ரங்கநாதன் தெரிந்துகொண்டபோது உள்ளம் துள்ளியது. ஆனால் ஒரு நிமிஷம் தான். அடுத்த கணம் மனிதத் தன்மையும், கடமையும் தலை தூக்கின.

பகலில் பக்கம் பார்த்துப் பேச வேண்டும், இரவில் அதுவும் கூடாது என்ற வார்த்தை பொய்யல்ல. மனைவியிடம் சேஷாசலம் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டுக் கொண்டிருந்த அவர்கள் பெயர் முதலிய விவரங்களோடு மதுரையிலிருந்து தந்தி கொடுத்து விட்டு, மதுரை ஸ்டேஷனிலேயே இறங்கிக் காரில் வந்திருக்கிறார்கள். இங்கே வந்து கதை கட்டிப் பத்மாவையும் கடத்தப் பார்த்திருக்கிறார்கள். அவர்களைப் பின் தொடர்ந்து வந்த ரங்கநாதன் சரியான சமயத்தில் பத்மாவைக் காப்பாற்றினான்.

கொடைக்கானல் ஸ்டேஷனிலிருந்தே திண்டுக்கல் ஸ்டேஷன் மாஸ்டருடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டான் ரங்கநாதன். ரயிலில் தூங்கிக்கொண்டே சென்ற சேஷாசலத்தை ஸ்டேஷன் மாஸ்டர் முயற்சியால் கண்டுபிடித்து இறக்கி இங்கே திரும்பச் செய்தவனும் அவன்தான். டாக்டரின் சிகிச்சையால் சீக்கிரமே எழுந்து உட்கார்ந்த பத்மாவுக்கு இது எல்லாம் தெரிய வந்தபோது, ரங்கநாதனின் முகத்தைப் பார்க்கக் கண்கள் கூசின.

பாங்க் ஆப் மதுரை

லிமிடெட்

தோற்றம் : 1943

மதுரை

சென்னைக் கிளை : 10, பிராட்வே

தலைவர் : ஸ்ரீ கருமுத்து தியாகராசன்

நீங்கள் எங்கள் வங்கியில் "சேவிங்ஸ் கணக்கு" திறப்பதினால் உண்டாகும் நான்கு பெரும் நன்மைகள் :

1. ரூ. 5/- முதல் மேற்படி கணக்கில் ஏற்றுக்கொள்ளப் படுகிறது.
2. தினசரி இருப்புக்கு 3% வட்டி கிடைக்கிறது.
3. பாங்க் வழங்கும் "செக்குகள்" மூலம் பணம் திரும்பப் பெறலாம்.
4. முன் அறிவிப்பு எதுவுமின்றி வாரம் ஒன்றுக்கு அதிக பக்ஷம் ரூ. 1,000/- ஒரு மொத்தமாகவோ, பல தடவை களிலோ கணக்கிலிருந்து எடுத்துக் கொள்ளலாம்.

பி. எஸ். விஸ்வநாதன்.
காரியதரிசி.

வியக்கத்தக்க நீளமான செழிப்பான கூந்தல்



ரோமா

கூந்தல் வளர்க்கும் டானிக்

ரோமாவைக் கொண்டு உங்கள் ஜூகத் வேண்டிய கூந்தல் அபி விருத்தி தைலத்தைத் தயாரித் துக் கொள்ளலாம். தங்களின் என்று, தங்கள் கோட்டுதல், அரிப்பு எதை ஆயிலத்தைத் தடுப்பதற்காக விஞ்ஞான சரக்குகளிலிருந்து வடிக்கப் பட்ட சத்துப்பொருள் இது. கூந்தல் கோசங்களைப் பலப்படுத்தி அடர்த்தியான, நீண்ட பள பளப்பான கூந்தல் வளரும்படி இது அமைக்கிறது.

தயாரிப்பாளர்கள்:
காஷ்மீர் ஸ்நோ அண்டு
பியூட்டி எய்ட்ஸ்
உற்பத்தியாளர்கள்



நூதன

காஸ்மிகா

டால்கம் பவுடர்

அதன் வாடாமலர்ப் புதுமையும் நீடித்துக் கமழும் நறுமணத் துடன் அடக்கமிடப்பட்டுள்ள தன்மையும், உங்களை நாள்முழுதும் கலகலப்புடனும் மலர்ச்சியான வனப்புடனும் மிளிரச் செய்யும்.



ஏஸ்மிகா — பாலிவழகுக்குப் ர்த்தியழகு


இது எங்கும் கிடைக்கும்.

இந்தியாவில் தயாரிப்போர் :

காஸ்மிகா காஸ்மெடிக்ஸ் பிரைவேட் லிட்.
283, டாக்டர் தாதாபாய் நவுரோஜி ரோடு, பம்பாய்-1

ஏகபோக விநியோகஸ்தர்கள்:

சென்னை, கேரளம், மைசூர் & ஆந்திர ராஜ்யங்களுக்கு
பெஸ்ட்டோ இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா)
நியூபாடவாடி, பம்பாய்-4


பெர்க்லி முந்துகிறது !
எல்லா இடங்களிலும் பெர்க்லி சிகரெட்டுகள் முன்னேறுவதில் ஆச்சரியமில்லை. இந்த அதிசய சிகரெட்டுகள் தனி ஆனந்தத்தை அளிக்கின்றன. எவ்விடங்களிலும் மேலும் மேலும் தனிப்பட்ட மக்கள் பெர்க்லிக்கு மாறுகிறார்கள்.
பெர்க்லி
சிகரெட்டுகள்
Issued by The Imperial Tobacco Company of India Limited

சோக்ரதர் சம்வாதங்கள்

க. சந்தானம்

10. தத்துவ ஞானியும் - விதண்டாவாதியும்

(சோக்ரதர், ஆதிமந்தோஸ், கனக்லோஸ் முதலியவர்கள்)

ஆதி: சோக்ரதரே! உமது முடிவுக்கு ஆட்சேபனை செய்வது சாத்தியமில்லை. ஆனால் நீங்கள் இவ்விதம் பேசும்பொழுது கேட்போர் மனதில் ஓர் அதிசய உணர்ச்சி உதிக்கிறது. விளக்கத்தின் ஒவ்வோர் அடியிலும் சிறிதளவு வழி தவறிச் செல்லுவதாகவும், அதை எடுத்துக் காட்டுவதற்குத் தங்களுக்குப் போதிய புத்தி சாதுர்யம் இல்லாததாகவும் உணர்கின்றனர். சிறிதான இந்தத் தவறுகள் பல சேர்ந்து முடிவில் தங்களுடைய பழைய கொள்கைகளெல்லாம் தலைகீழாகக் கவிழ்க்கப்படுவதைக் காண்கின்றனர். சதுரங்கத்தில் ஒவ்வோர் காய் மாற்றத்திலும் சிறிது கட்டுக் குலைந்து முடிவில் தோல்வியடைவது போலிருக்கிறது. வாதத்தில் உமக்கு எதிராக எதுவும் சொல்ல முடியாவிட்டாலும், தத்துவ ஞானத்தையே தங்கள் வாழ்க்கையின் நோக்காகப் பின்பற்றுவோர் ஓர் பயங்கரப் பிரகிருதிகளாகவும், அடிக்கடி மோசக்காரர்களாகவும் இருக்கிறார்கள். நீங்கள் போற்றும் ஞானத்தால் அவர்கள் இவ்வுலகுக்கு முற்றிலும் உபயோகமற்றவர்களாகி விடுகிறார்களே?

சோக்: அது முற்றிலும் உண்மை.

ஆதி: அப்படியானால் தத்துவ ஞானிகள் அரசாளும் வரையில் ராஜ்யத்தின் தீமைகள் தீரமாட்டா என்று தாங்கள் கூறுவது எவ்வாறு பொருந்தும்?

சோக்: நீ ஓர் கேள்வி கேட்கிறாய். அதற்கு ஓர் நீதிக் கதை மூலம் பதில் கூறலாமா?

ஆதி: உமக்கு அது வழக்கமில்லை போலும்!

சோக்: எனது வாதத்தின் போக்குப் பரிகசிக்கத் தக்கதென்று எண்ணுகிறீர்கள். என் கதையைக் கேட்டு எனது கற்பனை அதைவிட மோசமென்று எளனம் செய்வீர்கள். ஒவ்வோர் ராஜ்யத்திலும் அதன் உத்தம புருஷர்கள் கேவலமாக நடத்தப்படுவதை நேரில் வர்ணிக்க முடியாது. ஓர் கப்பலில் அதன் தலைவன் மற்ற மாலுமிகளை விட உயரமாகவும் பலசாலியாகவும் இருக்கிறான் என்று நினைத்துக் கொள்ளுங்கள். ஆனால் அவனுக்குக் காது சிறிது மந்தம், கண்ணும் சரியாகத் தெரியாது. கப்பலோட்டும் கலையிலும் தேர்ச்சியில்லை. இதர மாலுமிகள் கப்பல் ஓட்டும் முறையைப் பற்றித் தமக்குள் சண்டை செய்கிறார்கள். அதைப் பற்றிப் பயிற்சி பெறாவிடினும், ஒவ்வொருவனும் கப்பல் ஓட்டுவது தனது உரிமை என்று பிடிவாதம் செய்கிறான். அதோடு, கப்பல் ஓட்டுவது ஓர் தனிக் கலையல்லவென்றும், அதற்காக விசேஷக் கல்வியும் பயிற்சியும் அவசியமில்லை என்றும், இதை எதிர்த்துப் பேசுவோரைக் கொன்று போடுவோம் என்றும் அனைவரும் கூச்சலிடுகின்றனர். தலைவனைச் சூழ்ந்து கொண்டு தங்களிடம் கப்பலை ஒப்புவிக்கும்படி நிர்ப்பந்தம் செய்கின்றனர். அவர்களில் யாரையாவது தலைவன் நியமித்தால், மற்றவர்கள் கூடி அவனைக் கொன்று விடுகின்றனர். தலைவனுக்கு மயக்க மருந்தைக் கொடுத்து விட்டுக் கலகம் செய்து கப்பலைக் கைப்பற்றி அதன் உக்கிராணத்தைச் சூறையாடுகின்றனர். தம் விருப்பப்படி உண்டும் குடித்தும் கப்பல் போகிற திக்கில் போகின்றனர். தங்கள் செயல்களை ஆமோதிப்பவர்களைச் சிறந்த மாலுமி என்றும், கப்பலோட்டி என்றும் போற்றுகின்றனர். கப்பலை ஓட்டும் சூட்சமங்களை நன்கு கற்றவனை மூடன் என்று நிராகரிக்கின்றனர். உண்மையான கப்பலோட்டி காலத்தையும், காற்றின் போக்கையும், வானத்தையும், நட்சத்திரங்களையும் நன்கறிந்து அதன்படி கப்பலை ஓட்ட வேண்டுமென்பதை அவர்கள் அலட்சியம் செய்கின்றனர். அவைகளைப் பற்றிச் சிந்திப்பவனை வானம் பார்க்கும் மூடன் என்று பரிகசிக்க மாட்டார்களா?

ஆதி: அதற்கு என்ன சந்தேகம்?

சோக்: இந்தக் கதையின் நீதியை நீயே உணர்ந்திருப்பாய். தற்காலத்து ராஜ்யங்களுக்கும் தத்துவ ஞானிகளுக்கும் உள்ள தொடர்பு இவ்விதமே.

ஆதி: அதென்ன? சற்று விளக்க வேண்டும்.

சோக்: தத்துவ ஞானிகள் இப்போது பிரயோசனமில்லை என்பது உண்மையே. ஆனால் அது அவர்களுடைய தவறு அல்ல. அவர்களை உபயோகப் படுத்தாதவர்களின் குற்றமாகும். கப்பலோட்டி சாதாரண மாலுமிகளிடம் சென்று தலைவனாக இருப்பதற்குக் கெஞ்ச மாட்டான். அவ்விதமே தத்துவ ஞானியும் பணக்காரர்களிடம்

போய் நிற்க மாட்டான். நோய்வாய்ப் பட்டவன், ஏழையாக இருப்பினும் வைத்தியனைத் தேடிப் போக வேண்டும். அவ்வாறே செங்கோல் வேண்டும் என்போர்கள் தத்துவ ஞானியைத் தேடிச் செல்ல வேண்டும். ஆளத் திறமையுள்ளவன் பிரஜைகளிடம் போய்க் கெஞ்சுதல் தகாது. தற்காலத்திய ஆளும் கூட்டத்தாரைக் கலகம் செய்யும் மாலுமிகளுக்கு ஒப்பிடலாம். உண்மையான நீதிமான்களை அவர்கள் வானம் பார்க்கும் மூடரென்று இகழ்வது சகஜம்.

ஆதி: அப்படியே.

சோக்: இந்தக் காரணங்களால், மனித வாழ்க்கையின் உத்தம சாதனமான ஞானத்தை மதிப்பாரில்லை. ஆனால் ஞானத்துக்கு அதிகமான தீங்குசெய்வோர் அதன் எதிரிகள் அல்ல, அதை நாடுவதாகப் பாசாங்கு செய்யும் போலி புருஷர்களே. இவர்களைத்தான் போக்கிரிகள் என்றும் உபயோகமற்றவர் என்றும் நீ கூறினாய் போலும்!

ஆதி: ஆமாம்.

சோக்: ஞானிகள் என்று வேஷம் போடுவோர்களில் பெரும்பாலோர் அயோக்கியர்களாவதைத் தடுக்க முடியாது. அதை ஞானத்தின் குற்றமாகக் கருத முடியாது. இது ஏன் என்று ஆராய்வோமா?

ஆதி: நிச்சயமாக.

சோக்: உத்தமர்களின் உயர்ந்த குணங்களின் மூலத்தை மறக்கலாகாது. அது சத்தியமே. ஞானி எப்பொழுதும், எல்லாக் காரியங்களிலும் சத்தியத்தையே நாடி நிற்பான். அவ்வாறு செய்யாதவன் உண்மையான ஞானி அல்ல, வெறும் வேஷக்காரன்.

ஆதி: இதை முன்னமேயே ஒப்புக் கொண்டோம்.

சோ: ஆதலால் உலகிலுள்ள எல்லாப் பொருள்களிலும் மறைந்து கிடக்கும் சத்தியத்தைத் தேடுவது ஞானியின் இயற்கை. பன்மையின் மாயையால் அவன் மயங்க மாட்டான். அனைத்திலும் உள்ள தனது ஆத்மாவின் சொரூபத்தைப் போன்ற பரம தத்துவத்தை அறியும் வரையில் அவன் ஆவல் தணியாது.

ஆதி: முற்றிலும் உண்மை.

சோ: அவ்வித ஞானி எவ்வித அசத்தியத்தையும் வெறுப்பான் அல்லவா?

ஆதி: வெறுப்பான்.

சோக்: சத்தியம் தலைமை வகிக்கும் பொழுது, எவ்விதத் தீமையும் அணுகாதன்றோ?

ஆதி: முடியாது.

சோ: ஞானியின் இதர குணங்களை வர்ணிக்க வேண்டியதில்லை. தைரியம், தாராள சிந்தை, நல்லுணர்ச்சி, ஞாபகம் இவை அனைத்தும் அவனுடைய பிறவிக் குணங்களாவன. இந்தக் குணங்கள் படைத்தவர்களில் பெரும்பாலோர் தன்மை திரிவதன் காரணத்தைத் தேடுகிறோமல்லவா?

ஆதி: அதைத்தான் ஆராய்கிறோம்.

சோக்: ஞானிக்கு வேண்டிய குணங்கள் பெற்றவர் அரிது அன்றோ?

ஆதி: மிகவும் அரிது என்றே நான் கூறுவேன்.

சோக்: முதன் முதலாக ஆரம்பத்தில் அவர்களின் பிறவிக் குணங்களாகிய தைரியம், தன்னடக்கம் முதலிய சற்குணங்களே தங்கள் ஆத்மாவை ஞானத்தை நோக்கிச் செல்லாமல் தடை செய்கின்றன.

ஆதி: இதென்ன விபரீதம்?

சோக்: பிறகு வாழ்க்கையின் சாதாரண மேன்மைகள், அழகு, செல்வம், தேக பலம், அந்தஸ்து, செல்வாக்குள்ள பந்துக்கள் — இவையெல்லாம் அவனைக் கெடுத்து மனத்தைக் கலைக்கின்றன.

ஆதி: மேலும் விளங்கக் கூற வேண்டும்.

சோக்: எல்லா விதைகளும், ஜீவ சந்துக்களும் தங்களுக்குத் தகுந்த பூமிவளமும், சூழ்நிலையும் இல்லாவிட்டால் கெட்டுப் போய் விடுகின்றன. புல்லுக்கும், களைக்கும், கொசுவுக்கும், விஷப்பூச்சிகளுக்கும் எச்சூழ்நிலையும் சாதகமாக இருக்கும். நன்மைக்கே தீமை நிரா விரோதியன்றோ?

ஆதி. அப்படியே.

சோக்: ஆதலால் கெட்ட சூழ்நிலையால் உயர்ந்த சுபாவமுள்ளவர்களுக்கு அதிகத் தீங்கு ஏற்படுகிறது. மிகவும் புத்திசாலிகளுக்குச் சரியான கல்வி இல்லாவிடில் அவர்கள் துஷ்டர்களில் சிறந்தவர்களாகி விடுகின்றனர். இவ்வுலகில் பெரும் குற்றங்களும் கொடுமைகளும் இயற்கையால் பெரிய வரம் பெற்று, தீய பயிற்சியால் பாழடைந்தவர்களால் செய்யப்படுகின்றன. பிறவியில் மந்தமானவர்களால் நன்மை, தீமை எதிலும் மகத்தான காரியம் செய்ய இயலாது.

ஆதி: நீங்கள் கூறுவது பொருத்தமாக இருக்கிறது.

சோக்: நமது தத்துவ ஞானிகளும் அப்படியே. நல்ல சூழ்நிலையில் இனிய கனிகளை வழங்கக் கூடிய மரம் தீய மண்ணில் கசப்புக் காய்களைத்தாங்கும் விருக்ஷமாவது போல், உயர் குணத்தோனாவதற்குப் பதிலாகத் தீயவனாகிறான். ஏதாவதொரு தெய்வ சக்தியால் பாதுகாக்கப் பட்ட பொழுதே இக் கதியிலிருந்து தப்புகிறான். நமது யௌவனம் விதண்டாவாதிகளால் பாழாக்கப் பட்டது என்று பொது மக்கள் கூறுவது உண்மையா? அல்லது பொது மக்களே இந்த விதண்டாவாதிகளை உருவாக்குகிறார்களா? விதண்டாவாதிகள் பொது மக்களின் விருப்பப் படியே ஆண் பெண்களுக்குப் பயிற்சி அளிக்கிறார்களன்றோ?

ஆதி: அதெப்படிச் செய்கின்றனர்?

சோக்: ஜனங்கள் சபைகளிலும், நியாயாலயங்களிலும், நாடகக் கொட்டகைகளிலும், மற்றக் கூட்டங்களிலும் கூடும் பொழுது, சில விஷயங்களைப் போற்றுகின்றனர், தூற்றுகின்றனர், கைகொட்டி



மீன் உவை

புசித்துப் பாருங்கள்

¾ பவுண்டு வேக வைத்த மீன், ½ பைண்ட் பால், 3 தேக்கரண்டியளவு ப்ரௌன் அண்டு போல்ஸன் பேட்டன்ட் கார்ன் ப்ளவர், ஒரு அவுன்ஸ் வெண்ணெய், ஒரு மேஜைகரண்டி நறுக்கிய பார்ஸ்லி, வேக வைத்து பிசைந்த உருளைக் கிழங்கு, எலுமிச்சம் பழச்சாறு.

மீனின் தோலையும், முள்ளையும் களைந்துவிட்டு, லேசான தணலில் வேக வைக்கவும். ஒரு பாத்திரத்தில் வெண்ணெயை உருக்கி, ப்ரௌன் அண்டு போல்ஸன் பேட்டன்ட் கார்ன்ப்ளவரை சேர்த்து நன்ருகக் கிளறவும். தணலிலிருந்து எடுத்துவிட்டு பாலைக் கலந்து நன்ருகக் கலக்கவும். திரும்பவும் அடுப்பில் வைத்து கொதிக்கும் வரை கிளறிவிட்டு, பிறகு 3 நிமிட நேரம் திரும்பவும் கொதிக்க வைக்கவும். மீன், பார்ஸ்லி, எலுமிச்சம் பழச்சாறு இவைகளைச் சேர்த்து கவனமாகப் பக்குவப்படுத்தவும். சூடு வெளியேருத பாத்திரத்தில் இதை வைத்து, பிசைந்து வைத்த உருளைக் கிழங்கை மேலே பரப்பி, கொஞ்சம் மார்கரெயினையும் தூவி மூடி விடவும். பின்பு சாதாரண தணலில் 20 நிமிட நேரம் பக்குவமாக தயார் செய்துகொள்ளவும்.

ப்ரௌன் அண்டு போல்ஸன் கார்ன்ப்ளவர் பேட்டன்ட் ஆக அங்கீகரிக்கப்பட்டது.

இதன் பரிசுத்தத் தன்மைக்கு
இப்பரிசோதனையைச் செய்து பாருங்கள் :-

இரண்டு மேஜைக் கரண்டியளவு ப்ரௌன் அண்டு போல்ஸன் பேட்டன்ட் கார்ன்ப்ளவரை கொதித்து ஆற வைத்து குளிர்ந்த ஜலத்தில் நன்ருகக் கலக்குங்கள். 24 மணி நேரம் இவ்விதம் வைத்த பிறபாடுங்கூட கெட்ட வாசனை உண்டாகாமல், மாசற்றதாகவும், பெக்டீரியா முதலிய அசுத்த அணுக்களால் சேதப்படாமலும் இருப்பதைக் காண்பீர்கள். மற்ற ப்ரௌன் அண்டு போல்ஸனின் உயர்தர சாதனங்கள் என்னவென்ருல்: ரெய்ஸ்லி, கஸ்டர்ட் பௌடர், ப்லேவர்ட் கார்ன் ப்ளவர்.

இங்கிலீஷ், ஹிந்தி, அல்லது தமிழ் பாஷைகளில் பிரசுரிக்கப்பட்ட அழ்கான சமையல் புஸ்தகம் இலவசமாக வேண்டுவோர் இங்குள்ள கூப்பனை பூர்த்தி செய்து அனுப்பவும். (வேண்டாத பாஷையை அடித்து விடவும்)



தபால் செலவிற்காக 15 நயா பைசா விலையுள்ள தபால் ஸ்டாம்பு நான் இதோடு அனுப்புகிறேன்.

ஸ்ரீ/ஸ்ரீமதி/செல......................................

....

விலாசம்..

டிப்பார்ட்மெண்ட் :- KLK 12

கார்ன் ப்ராடெக்ட்ஸ் கோ.
(இந்தியா) ப்ரைவேட் லிமிடெட்
தபால்பெட்டி : 994, பம்பாய் 1

கார்ன் ப்ராடக்ட்ஸ் கோ.(இந்தியா)ப்ரைவேட் லிட்.
இந்தியாவில் ஏஜெண்டுகள் : பாரி அண்டு கோ, லிட்.

உங்கள் வீட்டிற்கெனவே ...

இணையற்ற தூள் தேயிலை

வீட்டு உபயோகத்திற்கு, நித்தமும் உத்தமமானதையே விரும்பும், உங்களுக்காகவே உருவாக்கிய உயர்ந்த ப்ருக் பாண்ட் ஏ-ஒன் தூள் தேயிலை, மெத்தவும் சிக்கனமானது! ஒரு பவுண்டு தூளுக்கு அதிக கோப்பைகள் சிறந்த தேநீர் அளிக்கவல்லது.



ஆரவாரம் செய்கின்றனர். இந்த ஆரவாரத்தைப் பாறைகள் எதிரொலிக்கின்றன. அப்பொழுது இளைஞனின் இதயம் பொங்கி எழுமன்றோ? பொதுஜன அபிப்பிராயத்தை எதிர்த்து எத்தகைய ஆசிரியர்கள் போதிக்க ஆற்றல் படைத்திருப்பார்? நன்மை, தீமை பற்றிய எண்ணங்களெல்லாம் அதை அனுசரித்தே இருக்குமல்லவா?

ஆதி: அப்படித்தான் இருக்கும்.

சோக்: அதை விடக் கூட அதிக நிர்ப்பந்தமுண்டு.

ஆதி: அதென்ன?

சோக்: மாறுகப் போதிப்பவர்கள் மீது குற்றம் சாட்டி அவர்களைக் கொன்று விடுவார்கள். இதை எவ்வாறு எதிர்க்கமுடியும்?


ஆதி: முடியாது!

சோக்: அப்படி எதிர்க்க முயற்சி செய்வதுகூடச் சாதாரண மனித முயற்சியால் சாத்தியப்படாது. பொதுஜன அபிப்பிராயத்துக்கு எதிராக, ஏதாவது நன்மையிருக்க வேண்டுமானால், அது ஈசன் சக்தியென்றே நிச்சயிக்கலாம்.

ஆதி: நான் ஆமோதிக்கிறேன்.

சோக்: பணத்துக்காகப் போதிக்கும் வித்வான்டாவாதிகள் பொது ஜனங்களின் மனத்தின்படியே பயிற்சி அளிக்கின்றனர். ஓர் மகத்தான மிருகத்தின் குணங்களையும் போக்குகளையும் ஒருவன் ஆராய்கிறான் என்று வைத்துக் கொள்ளுவோம். அதனிடம் எப்படி,எப்பொழுது நெருங்கலாம், எக்காலங்களில் அது அபாயமாகவிருக்கும். அதன் கர்ஜனைகளின் அர்த்தமென்ன, என்ன சத்தங்களால் அதைச் சாந்தப்படுத்தலாம் என்று கவனித்து முடிவில் அம்மிருகத்தின் சுபாவத்தைப் பற்றிய நிபுணன் ஆகிறான். இதை ஓர் ஞானமாகக் கொண்டு, அம் மிருகத்தைத் திருப்தி செய்வதே நன்மை யென்றும், அதிருப்தி செய்வது தீமையென்றும் போதிக்கிறான். அதற்கு மாறுகக் கூறுவோர்களைப் பலாத்காரத்தால் அடக்குகிறான். அவ்வித மனிதன் ஓர் அதிசய ஆசிரியனுவான் அன்றோ?

ஆதி: அதற்கென்ன சந்தேகம்?



சோக்: மூட மக்களின் ஆசாபாசங்களை அறிவதே விவேகம் என்று எண்ணும் கலைஞனுக்கும் அரசியல் தலைவனுக்கும் நான் மேற்கூறிய மனிதனுக்கும் வித்தியாசம் உண்டோ? ஓர் கவிஞனே, கலைஞனே தனது கவிதையையும், ஓவியத்தையும் பாமர மக்களிடம் தெரிவித்து, ஆதரவைத் தேடுவதானால், அவர்களுக்கு விருப்பமானபடி கவி பாட வேண்டாமா, ஓவியம் வரைய வேண்டாமா? அரசியலிலும் அவ்வாறே யன்றோ? இதை விட மூடத்தனமும் உண்டோ?

ஆதி: இருப்பது துர்லபம்.

சோக்: தத்துவஞானியாகக் கூடியவன் இயற்கையில் மேலான குணங்கள் பெற்றவன் என்று நாம் முதலில் ஒப்புக் கொண்டோமல்லவா?

ஆதி: ஆமாம்!

சோக்: அவனுடைய உறவினரும், தோழர்களும் அவனைத் தமது லாபத்துக்குப் பயன்படுத்த விரும்புவார்களன்றோ?

ஆதி: சந்தேகமில்லாமல்.

சோக்: அவனைப் போற்றி, முகஸ்துதி செய்து தம் வசப்படுத்திப் பிற்காலத்தில் அவன் பெறும் செல்வாக்கைத் தமது சொத்தாக்க முயற்சி செய்வார்கள் அல்லவா?

ஆதி: அப்படியே அடிக்கடி நடக்கிறது!

சோக்: ஓர் பெரிய ராஜ்யத்தின் பிரஜையாக இருந்து, உயர்குலமும், அழகும் செல்வமும், செல்வாக்கும்சேர்ந்த ஓர் இளைஞனின் போக்கு எப்படியிருக்கும்? அவனது ஆசைகள் வானமளாவி நிற்குமல்லவா? தனது ராஜ்யத்தையும், மற்ற ராஜ்யங்களையும் தான் ஒருவனே ஆளவல்லவன் என்ற அகங்காரத்தால் மதிமயங்கி, அதற்கு வேண்டிய ஆடம்பரத்திலும், கர்வத்திலும் மூழ்கி விடுவான் அன்றோ?

ஆதி: நிச்சயம் மூழ்கி விடுவான்.

சோக்: இத்தருணத்தில், ஒருவர் வந்து 'நீ ஒன்றும் அறியாதவன். விவேகம் பெற வேண்டும். பாடுபட்டுப் பணி செய்து

அதனை அடைய வேண்டும்' என்று உபதேசித்தால், அதை எளிதில் ஏற்பானா?

ஆதி : ஒருகாலும் மாட்டான்.

சோக் : எதிர்பாராத விதத்தில், தனது உயர் குணத்தின் காரணமாக அவன் தனது மூடத்தனத்தை உணர்ந்து ஞானத்தை கூடினாலும் அவனுடைய தோழர்கள் அவனையும் அவனால் கிடைக்கக் கூடிய லாபத்தையும் இழந்துவிடச் சம்மதிப்பார்களா? எப்படியாவது சூழ்ச்சி செய்து, பயமுறுத்தி அவனுடைய உயர் குணத்தைக் கெடுத்து விட மாட்டார்களா?

ஆதி : நிச்சயமாக.

சோக் : இந்தச் சூழ்நிலையில் எவன் தத்துவஞானியாக முடியும்? ஞானத்துக்கு உரிய அவனது சிறிய குணங்களே அவனுக்கு எதிரிகளாகுமென்று நான் கூறியது சரியென்று இப்பொழுது புலப்படுகிறதா? அதோடு செல்வம், செல்வாக்கு இவற்றின் ஆசைகளும் சேர்ந்து விட்டால், அதன் பலனைக் கூறவும் வேண்டுமா? ஆதலால் ஞானிகளாவதற்கு வேண்டிய குணங்களை இயற்கையில் பெறுவது அபூர்வம். அவர்கள் சரியாக வளர்ந்தால் ராஜ்யத்துக்கு அளவிடக் கூடாத நன்மை புரியக் கூடியவர், தன்மை திரிந்தால் கணக்கில்லாத தீமையும் செய்யவல்லவராகின்றனர்.

ஆதி : உண்மையே!

சோக் : ஆதலால் தத்துவ ஞான தேவதை துக்கத்தில் ஆழ்ந்து கிடக்கிறாள். அவளுக்குரிய காதலர் அவளைத் துறந்து தீய வாழ்க்கை புரிந்து வருகின்றனர். அவளுக்கு வேறு உற்றார் உறவினர் இல்லாதது கண்டு அயோக்கியர் அவளைச் சூழ்ந்து அவமானம் செய்கின்றனர். அவள் மீது பொய்க் குற்றங்கள் சாட்டி, அவளுடன் உறவு வைப்போர் உதவாதவர்கள் என்றும் தண்டனைக்குரிய போக்கிரிகள் என்றும் பறைசாற்றுகின்றனர்.

ஆதி : ஜனங்கள் கூறுவது அங்ஙனமே.

சோக் : சிறையில் அடைக்கப்பட்ட கைதிகள் தப்பித் தேவாலயத்தில் புகுந்து புரோகிதராவது போல், தங்களுக்குரிய இதர ஈனத் தொழில்களைத் துறந்து அற்ப மனிதர் தத்துவஞானாசிரியர்களானால் வேறு என்ன பலன் கிடைக்கும்? தீயவர்களின் கைகளில் சிக்கிய போதும், வேறு கலைகளில் காண முடியாத காம்பீர்யம் தத்துவ ஞானத்தில் பிரகாசிக்கிறது. தகுதியற்றவர்கள் அந்த காந்தியால் கவரப்படுவதும் இயல்பன்றோ? இதை எவ்வாறு தடுக்க முடியும்?

ஆதி : கஷ்டமே!

சோக் : ஓர் மாளிகையில் வேலைசெய்து வந்த வழுக்கைத் தலைக்கொத்தன் திடீரென்று கொஞ்சம் பணம் பெற்று, நீராடிப் பட்டாடை உடுத்தி, அம்மாளிகையின் எஜமானர் இறந்த தருணம் பார்த்து அவருடைய குலமகளை மணம் புரிய விரும்புவது போலல்லவா இது?

ஆதி : சிறந்த உவமை.

சோக் : அந்த விவாகத்தின் பலன் என்னவாகும்? நீழ்த்தர மக்கள் தானே?

ஆதி : நிச்சயமாக.

சோக் : ஞானத்துக்குத் தகுதியற்றவர் அதற்கு ஆசைப் பட்டால், அந்தச் சேர்க்கையால் உதிக்கும் கருத்துக்களும், சிந்தனைகளும் எவ்வாறு இருக்கும்? உண்மையற்ற, விதண்டாவாதங்களாக இருக்குமல்லவா?

ஆதி : சந்தேகமன்றி.

சோக் : ஆதலால் ஆதிமந்தோஸ! உண்மையான தத்துவஞானிகள் வெகு சிலரே இருப்பவர். உயர் குணத்தாலும், நல்ல பயிற்சியாலும் பக்குவமடைந்த ஒருவன் ஞானத்தைத் தேடி, காடு துறந்து துஷ்டர்களிடம் சிக்காமல் தப்பி அவளோடு தீராத காதல் கொண்டிருப்பான். அல்லது அற்ப ராஜ்யத்தில் பிறந்த பெரியான் அதன் தீய அரசியலிலிருந்து விலகி நிற்கையில் இதர கலைகளை விடுத்து, சில புத்திசாலிகள் அவளை நாடுவர்; ஒருவேளை நோய்வாய்ப்பட்டு ஞானத்திலிருந்து பிரிக்க விரும்புவோரிடமிருந்து தப்பி விடுவான். எனக்குள் ஓர் அசரீரி வாக்கு இருந்ததால் நான் தப்பினேன். ஆனால் மற்றவர்க்கும் அவ்வாக்கு உதிக்குமென்று எதிர்பார்க்க முடியாது. இவ்விதம் அதிர்ஷ்ட வசத்தால் ஞானத்தை விடாது பற்றி நிற்கும் அபூர்வமான ஞானிகள் ஞானத்தின் பெருமையைக் கண்டு பூரிப்பர், பாமர மக்களின் மதி மயக்கத்தால் மயங்கார். அரசியல்வாதிகள் அனைவரும் அயோக்கியர்களென்றும், நீதிக்காகப் போர் புரிய அவர்கள் விரும்ப மாட்டார்களென்றும் அறிவார். அவ்வித ஞானியைக் காட்டு மிருகங்களுக்கு மத்தியில் அகப்பட்ட மனிதனுக்கு ஒப்பிடலாம். அவன் காட்டு மிருகங்களின் கொடிய செய்கைகளில் சேரமாட்டான், அவற்றைத் தடுக்கவும் இயலாது. ஆதலால் தனது ராஜ்யத்துக்கோ, தோழர்களுக்கோ உண்மையான சேவை செய்ய முடியாதென்று கண்டு, விலகித் தன் வழி செல்வான். புழுதியும், பனிக்கட்டியும் பொழிந்து வரும் புயற்காற்றிலிருந்து ஓர் சுவரோரமாகத் தங்குவோன் போல, தனது வாழ்க்கையைத் தூய்மையுடன் வாழ்ந்து, மற்றவர்களின் தீமைகளில் சேராது தனது பக்தி குன்றாமல் உலகை நீப்பதே நலமென்று சாந்தியும் கருணையும் நிறைந்து நிற்பவனே ஞானியாவான்.


ஆதி : அது கூட மகத்தான சேவையாகும்.

சோக் : ஆம்! தனக்குத் தகுந்த ராஜ்யம் கிடைக்கும் வரையில் இதுவே அவன் செய்யக் கூடிய உத்தம சேவையாகும். ஆனால் அவனைத் தலைவனாகக் கொள்ளும் ராஜ்யம் இருக்குமாகில், அவனுடைய மகிமை ஓங்கித் தனக்கு மட்டுமின்றித் தனது நாட்டுக்கும் ரட்சகனாவான்.

ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்(கு)
ஆழி எனப்படு வார்.
--திருக்குறள்


RPY-4
பினிக்ஸ் அழகுக்கென தயாரித்த
அலங்கார ஆடைகளில் சதா
பகட்டுடன் தோன்றுங்கள்.
ரூயா துணிகள்
தனிப்பட்ட அருமையான நெசவு
வேலைப்பாட்டிற்கும், பினிக்ஸ் பிரின்ட்ஸ்,
வாயில்கள், மற்றும் விரேனையும்
விட சேர்த்தியான துணிகள்
வேறொன்றுமில்லை. இத்துணிகளை
நாள் முழுதும் அணிந்திருந்தாலும்
அவைகளின் புதுமையும், மொரு
மொருப்பும் அப்படியே இருக்கிறது.
பினிக்ஸ் மில்ஸ் லிமிடெட்
லோயர் பரேல், பம்பாய்-13

ஜாக்பாட் புன்னகை



பட்ஜெட் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படு முன்னரே அதன் நகலை பம்பாயில் பணம் கொடுத்து வாங்க முடிந்தது என்ற குற்றச்சாட்டை உள்நாட்டு மந்திரி சபை ஆராய்ந்து வருகிறது. விற்கப்பட்ட பட்ஜெட் நகலுக்கும் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்பட்ட பட்ஜெட்டுக்கும் வார்த்தைக்கு வார்த்தை ஒற்றுமை யிருந்ததாகக் கூறப்படுகிறது.

—மார்ச் 3உ. 1956.

பட்ஜெட் விவரங்கள் வெளியாகிவிட்டதை மூடி மழுப்ப முற்படவில்லை என்கிறார் நிதி மந்திரி. உரிமைக் கமிட்டி பரிசீலனை செய்யவேண்டும் என்று எதிர்க் கட்சியினர் வாதம். —மார்ச் 7உ. 1956.

பம்பாயைச் சேர்ந்த மூன்று பெரிய வியாபாரிகள் ராஷ்டிரபதிபவன் பிரஸின் போர்மனுக்கு லஞ்சம் கொடுத்து, பட்ஜெட் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படு முன்னரே அதன் நகலைப் பெற்றுச் சென்றார்கள் என்பதாகக் குற்றம் சாட்டப்பட்டு நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர். போலீஸார் தீவிரமாகப் புலன் விசாரணை செய்தபோது அனைவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளார்கள்.

— மார்ச் 10உ. 1956.

1

என்னுடைய மேலதிகாரி என்னைக் கூப்பிட்டு அனுப்புகிறார். எனக்கு அவர் கொடுக்கப் போகும் வேலை சுவாரஸ்யமாயிருக்கும் என்றுநான் எதிர்பார்க்கவில்லை. வழக்கம் போல வெளிநாட்டிலிருந்து பெரிய மனிதன் எவனாவது வந்திருப்பான். அவனைப் பாதுகாப்பதற்காகப் பையில் துப்பாக்கி கனக்க வால் பிடிக்க வேண்டியிருக்கும். இல்லா விட்டால் புது டெல்லிக்குத் தினந்தோறும் வரும் அயல் நாட்டுப் பிரஜைகளில் எவனாவது ஏமாந்தவன் இருந்திருப்பான். பணத்தைப் பறி கொடுத்து விட்டு நிற்பான். அவனிடமிருந்து அதைத் தட்டிக்கொண்டு போன கெட்டிக்காரக் கேடியைத் தேடிக் கொண்டு பழைய டெல்லியின் சந்து பொந்துகளில் அலைய வேண்டியிருக்கும்.

இந்த வாழ்க்கை எனக்கு அலுத்து விட்டது. போங்கள். இப்போது கூட வெறுப்பைக் கொட்டிக் கொண்டுதான் என்னுடைய மேலதிகாரியின் தனி அறைக்குள் நுழைகிறேன்.

அவர் தம் எதிரேயிருந்த காகிதங்களைப் படித்து முடித்து விட்டு, என்னை நிமிர்ந்து பார்க்கச் சில நிமிஷங்கள் ஆகின்றன. என்னை உட்காரச் சொல்லிவிட்டு ஒரு சிகரெட்டைப் பற்ற வைக்கிறார் அவர். என் பக்கமாக அதை நீட்டியபோது நான் மரியாதையாக மறுதலிக்கிறேன்.

அவர் நாற்காலியில் நன்றாகச் சாய்ந்து கொண்டு சௌகரியமாக உட்கார்ந்து கொள்ளுகிறார்.

"சில வருஷங்களுக்கு முன்னால் பட்ஜெட் ரகசியம் வெளியாகி விட்டதே தெரியுமோ உனக்கு?"

"ஆமாம், ஞாபகம் இருக்கிறது. ராஷ்டிரபதி பவன் பிரஸ் போர்மென் ஒருவரையும் பம்பாயைச் சேர்ந்த மூன்று பெரிய வியாபாரிகளையும் அது சம்பந்தமாகக் கைது செய்தோம்."

"பேஷ்! நன்றாக ஞாபகம் வைத்துக் கொண்டிருக்கிறாயே. அதே நிலைமை மறுபடியும் இப்போது நேரவிருக்கிறது."

நான் வாயைப் பிளக்கிறேன். "நிஜமாகவா?" என்று கேட்கிறேன்.

"நிதி மந்திரி இன்னும் சில நாட்களுக்குள் பட்ஜெட்டைப் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப் போகிறார். அதற்கு முன்னால் அதைப் பற்றி அறிந்து கொள்வதற்குப் பம்பாயைச் சேர்ந்த சில பெரிய வர்த்தகர்கள் முயல்கிறார்கள் என்றும் பிரேம்சந்த் என்பவன் அவர்களில் ஒருவன் என்றும் சந்தேகம் எழுந்திருக்கிறது. வெறும் சந்தேகம்தான்" என்று கடைசி வார்த்தைக்கு அழுத்தம் கொடுக்கிறார்.

நான் தலையை ஆட்டுகிறேன். "பட்ஜெட்டைப் பற்றி முன்கூட்டியே தெரிந்து கொள்வதில் பிரேம்சந்துக்கோ மற்றவர்களுக்கோ என்னலாபம் இருக்கிறது?"

"சரிதான். விஷயத்தின் அடிப்படையையே புரிந்து கொள்ளவில்லை. லட்சக்கணக்கில் லாபமோ நஷ்டமோ ஏற்படக் கூடும். விலைவாசிகள் கிறுகிறுவென்று ஏறலாம். அல்லது தடதட வென்று இறங்கலாம். பங்கு மார்க்கெட் நிலவரங்களில் பட்ஜெட்டுக்குப் பின் திடீர் மாறுதல்கள் ஏற்படும். பிரேம்சந்த் போன்ற

கி. ராஜேந்திரன்



பெரிய வியாபாரி பட்ஜெட்டைப் பற்றி முன்னாலேயே தெரிந்து கொண்டால் மார்க்கெட் நிலவரங்களில் ஏற்படக்கூடிய மாறுதல்களை ஊகித்து அறிந்து அதற்குத் தகுந்த மாதிரி நடந்துகொண்டு கோடிக் கணக்கில் லாபம் சம்பாதிக்க முடியும். என்ன புதிய வரிகள் விதிக்கப் போகிறார்கள் என்பது அவர்களுக்குக் கண்டிப்பாகத் தெரிந்திருக்க வேண்டும்.''

''இன்னமும் புதிய வரிகள் என்ன பாக்கியிருக்கின்றன? கதாசிரியர்களை நிதி மந்திரிகளாகப் போட்டால் ஏதாவது கற்பனை செய்து சொல்வார்கள்!'' என்று சொல்லி விட்டு என்னுடைய ஹாஸ்யத்தை ரசித்து நானே பெரிதாகச் சிரிக்கிறேன்.

என் மேலதிகாரி சிரிக்கவில்லை. தொண்டையைக் கனைத்துக் கொள்கிறார். என்னுடைய சிரிப்பு இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடுகிறது. ''சாமர்த்தியமாகப் பேசுவதாக நினைத்துக் கொணடு நீ பேசுவது கிடக்கட்டும். காரியத்தைக் கவனிப்போம்'' என்கிறார்.

''நான் என்ன செய்ய வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?''

''பிரேம்சந்த் மீது சந்தேகம் இருக்கிறது. ஆனால் சந்தேகத்தை வைத்துக் கொண்டு அவனைக் கோர்ட்டுக்கு இழுக்கடிக்க முடியாது. நிர்மானமான சாட்சியங்கள் வேண்டும். கடைசி வரையில் பொறுத்திருந்து தக்க சமயத்தில் பிடிக்க வேண்டும். புரிகிறதா?''

''நன்றாகப் புரிகிறது'' என்று சொல்லி விடைபெற்றுக் கொள்கிறேன். கதவைத் தாண்டி வெளியே காலை எடுத்து வைத்தவன் மறுபடியும் உள்ளே நுழைகிறேன். ''ஸார்! என்னுடைய குடும்ப பட்ஜெட்டில் கூடத் துண்டு விழுகிறது. ஸார்! கொஞ்சம் கவனியுங்கள்!'' என்கிறேன். அவர் முகத்தில் புன்னகையின் சாயல் தெரிகிறது. அதுவே எனக்குத் திருப்தியளிக்கிறது.

2

இதற்குள்ளாக நான் யார் என்பதை ஒருவாறு புரிந்து கொண்டிருப்பீர்கள். ஆம், மத்திய சர்க்காரின் உள்நாட்டு மந்திரி சபையில் துப்பறியும் இலாக்காவைச் சேர்ந்தவன்தான். இதோ கதவைத் தட்டியதும் வந்து திறக்கிறாளே, இவள்தான் என் மனைவி. ஓடி வந்து காலைக் கட்டிக் கொள்ளும் இந்தப் போக்கிரி என்னுடைய பையன். இருவரிடமும் நான் பம்பாய் போக வேண்டியிருப்பதைச் சொல்கிறேன். எதற்காக என்று மட்டும் கூறவில்லை. என் மனைவி மட்டும் பையனுக்குக் கேட்காதவாறு, ''ஜாக்கிரதை! ஜாக்கிரதை!'' என்று மந்திரிக்கிறாள். மூட்டை கட்டிக் கொண்டு கிளம்பி விடுகிறேன் நான்.

பம்பாயில் என்னையும் ஒரு வியாபாரியாகச் சொல்லிக்கொண்டு 'படா படா' வர்த்தகர்களிடம் நெருங்கிப் பழக முயலுகிறேன். நாங்கள் சந்தேகப்பட்டதெல்லாம் உண்மைதான் என்று தெரிய வருகிறது. பிரேம்சந்த் இந்த விஷயத்தில் முன்னணியில் நிற்கிறான் என்பதையும் சந்தேகத்துக்கிடமின்றித் தெரிந்து கொள்கிறேன். ஆனால் எப்படி இந்தக் காரியத்தைச் சாதிக்கப் போகிறார்கள் என்பது புரியாத புதிராகவே இருக்கிறது.



பிரேம்சந்திடம் பேச்சுக் கொடுத்துப் பார்க்கிறேன். ஒன்றுமே பிரயோசனப் படவில்லை. ஆள் ரொம்ப அழுக்கம். அவன் அறியாமலே அவனுக்கு வால் பிடிப்பது என்று தீர்மானிக்கிறேன். அவன் போன இடத்துக்கெல்லாம் நானும் போகிறேன். உபயோகமாக ஒன்றும் தெரியவில்லை. இரண்டு நாட்கள் இப்படி அலைந்த பிறகு அவன் சிவப்பு விளக்குப் பிரதேசத்துக்குப் போகிறான்.

பம்பாயில் சிவப்பு விளக்குப் பிரதேசம் என்றால் உங்களுக்குத் தெரியுமோ? நீங்கள் சிரிக்கிறீர்கள்! உங்களுக்கா தெரியாது! அதனால் அதைப்பற்றி நான் விவரித்துச் சொல்ல வேண்டாம். சொன்னாலும் நன்றாயிராது. விட்டு விடுகிறேன்.

இந்த இடத்துக்குப் பிரேம்சந்த் போகிறான். உண்மையில் என் முகம் சிவந்து விடுகிறது. மனத்துக்குள் சிரிப்பு. 'இங்கேயுமா இவனைப் பின்பற்றிப் போக வேண்டும்?' என்று நினைக்கிறேன். திரும்பி விடலாமா என்று கூட யோசிக்கிறேன். ஆனால் பாருங்கள்! இந்தத் தொழிலில் எதிர்பாராத இடங்களில் எதிர்பாராத சமயங்களில்தான் எதிர்பாராத விஷயங்களும் நடக்கின்றன. தொடர்ந்து பிரேம்சந்துக்கு வால் பிடிக்கிறேன்.

ஒரு வீட்டுக்கு முன்னால் தான் ஓட்டிக்கொண்டு வந்த மோட்டார் வண்டியை நிறுத்திவிட்டு பிரேம்சந்த் உள்ளே போகிறான். அவனைத் தொடர்ந்து டாக்ஸியில் வந்து கொண்டிருக்கும் நான் கீழே இறங்கி டாக்ஸியை அனுப்பி விடுகிறேன். அந்த வீட்டின் வாசலிலேயே தவம் இருக்கிறேன்.

சற்று நேரத்துக்கெல்லாம் பிரேம்சந்த் வெளியே வந்து விடுகிறான். அவன் என்னைப் பார்த்து விடாமல் இருக்க ஒரு சிகரெட்டைப் பற்ற வைக்கிறேன். நெருப்பு அணையாமல் இருக்கக் கரங்களைக் குவிப்பது போன்ற பாவனையில் என் முகத்தை மறைத்துக் கொள்கிறேன். பிரேம்சந்த் போய் விடுகிறான்.

இப்போது நான் என்ன செய்வது? நீங்களே சொல்லுங்கள்! அவனைப் பின் தொடர்ந்து போவதா? அல்லது இந்த வீட்டுக்குள் நுழைவதா? நான் ஒரு நிமிஷம் யோசிக்கிறேன். சிவப்பு விளக்குப் பிரதேசத்தில் ஒரு வீட்டுக்குள் நுழைந்து விட்டு இவ்வளவு



சீக்கிரமாக அவன் திரும்பி வந்துவிட்டது எனக்கு மிகுந்த சந்தேகத்தை வளிக்கிறது. அதற்கு எப்படி மனம் வரும்?

ஒரு தீர்மானத்துக்கு வந்தவனாக அந்த வீட்டின் முன்வாசல் கதவைத் தட்டுகிறேன். கதவைத் திறந்தவர்கள் யாரோ முன்பின் தெரியாதவர் வாசலில் நிற்பதைப் பார்த்து விட்டு மறுபடியும் அதைத் தாளிட்டு விடாமல் இருக்கத் தோன்றுல் கதவை ஒரு தள்ளுத் தள்ளிவிட்டுள்ளே நுழைகிறேன். அந்த வேகத்தில் கதவைத் திறந்த நபர் தடுமாறிக் கொண்டே பின்னுல் நகருவதை நான் உணருகிறேன்.

"இன்னும் கொஞ்சம் மரியாதையாக நடந்து கொள்ளலாம். இவ்வளவு முரட்டுத் தனம் உங்களுக்கு உதவாது" என்ற குரலைக் கேட்டு நிமிர்ந்து பார்க்கிறேன்.

3

நீங்கள் நம்பினுல் நம்புங்கள், நம்பா விட்டால் போங்கள். என் எதிரே நிற்கிறுளே இந்தப் பெண், இவளைப் போன்ற ஒரு அழகியை என் வாழ்நாட்களில் நான் பார்த்ததே கிடையாது! என் வாழ் நாட்கள் இன்னும் முடிந்து விடவில்லையே என்கிறீர்களோ? அது எனக்குத் தெரியும், சுவாமி! தெரிந்து தான் சொல்கிறேன். மேலே நான் சொன்னது ஒரு நாளும் பொய்யாகாது. இவளைப்போல் ஒரு பெண்ணை இதுவரையிலும் நான் பார்த்ததில்லை. இனி மேலும் பார்க்கப் போவ தில்லை. இந்தப் பெண் சிவப்பு விளக்குப் பிரதேசத்தைச் சேர்ந்தவள் என்று என்னுல் நம்பவே முடிய வில்லை. கனவில்கூட அப்



படி நினைக்க முடியாது என்று எண்ணுகிறேன். நான் மூக்கைத் தடவியபடியே இன்னொரு முறை இவளை நன்ருகப் பார்க்கிறேன். இவ ளிடம் அழகு இருக்கிறது. ஆனுல் இந்தப் பிரதேசத்தில் சாதாரணமாகக் காணப்படும் ஆபாசத்தைக் காணும். அலங்கரித்துக் கொண்டிருக்கிறுள். அருவருக்கத்தக்க முறையில் அல்ல. தங்க முலாம் பூசியதுபோல் உடலின் நிறம். கவர்ச்சிகரமான அந்த மேனி யைச் சுற்றியிருக்க மெல்லிய சேலையை இவள் அணிந்திருக்கும் விதத்திலே ஒரு நயம் இருக் கிறது. அலை அலையாகச் சுருண்ட கேசத்தை வாரி எடுத்து நாகரீகமான முறையில் கொண்டை போட்டிருக்கிறுள். அதிலிருந்து இரண்டு மல்லிகைச் சரங்கள் கீழே இறங்கி வனப்பு மிக்க தோள்களில் தவழ்கின்றன. வட்டக் கருவிழிகளைத் தெளிவாக எடுத்துக் காட்டுமாறு புருவங்கள் நெளிய அந்த அகன்ற கண்கள் மேலும் அகன்று விரிகின்றன. இலே சாகச் சாயம் தீட்டப் பெற்ற அந்த அதரங் களில் ஒரு மோகனப்புன்னகை குடிகொண் டிருக்கிறது. அவை இப்போது அசைகின்றன.

"என்ன வேண்டும்?" என்று என்னை நேருக்கு நேராகப் பார்த்துக் கேட்கிறுள்.

நான் வந்த விஷயத்தை மறந்து ஏதேதோ உளறுகிறேன். "உன்னைப் பார்த்தால் ரொம்ப நல்லவளாகத் தோன்றுகிறதே. இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவளாக நினைக்க முடியவில்லையே. உன்னை இங்கே விட்டு வைக்க மாட்டேன்" என்கிறேன்.

அவள் குறும்புத்தனமாக என்னைப் பார்த்துச் சிரிக்கிறுள். "உபதேசமா செய்ய வந்தீர்கள்? பெரிய மகான்" என்கிறுள்.

அவள் சிரித்திருக்காவிட்டாலும் அந்த வார்த்தைகள் என் மனத்தைப் புண்படுத்தி யிருக்கும். உபதேசம் செய்யும் எண்ணத்தை விட்டு விட்டு, "சற்று முன் இங்கு ஒருவர் வந்தாரே எதற்கு?" என்று கேட்கிறேன்.

ஒரே ஒரு கணம் அவள் திடுக்கிட்டவளாகக் காணப்படுகிறுள். மலர மலர அந்தக் கண்கள் விழிக்கின்றன. அடுத்தகணம் தன்னைத்தானே சமாளித்துக் கொண்டு பக்கவாட்டில் திரும்பிக் கடைக்கண்ணுல் என்னைப் பார்த்துக் குறும்புச் சிரிப்புடன் "எதற்கு வருவார்கள்?" என்கிறுள்.

வெட்கமாகப் போய் விடுகிறது எனக்கு. பனியனுக்குள் யாரோ ஒரு போக்கிரிப் பயல் பெரிய 'ஐஸ்' கட்டி ஒன்றைப் போட்டு விட்டது போல் உடலை நெளிக்கிறேன்.

மீண்டும் நேராக நிற்க முடிந்ததும், "அவன் எதற்கு வந்தான் என்று நான் நம்ப வேண்டும் என்று நீ நினைக்கிருயோ; அவன் அதற்காக வரவில்லை என்றும் வேறு ஒரு காரியத்துக்காகத்தான் வந்தான் என்றும் எனக்குத் தெரியும் என்பது உனக்கும் நன்ருகத் தெரிந்தும் தெரியாத மாதிரி நடிக்கிருய்" என்கிறேன்.

அவள் கையைநீட்டி நிறுத்துமாறு சமிக்ஞை செய்கிறுள். "கொஞ்சம் மூச்சு விடுங்கள். ஒன்றும் புரியவில்லை" என்று கூறிச் சிரிக்கிறுள்.

எதற்கெடுத்தாலும் இப்படிச் சிரித்து மழுப் பும் ஒரு பெண்ணிடம் நானே அல்லது நீங்களோ தான் என்ன செய்ய முடியும்? இருந் தாலும் தோல்வியை நான் சுலபத்தில் ஒப்புக் கொள்வதாக இல்லை.

"பிரேம்சந்த் பட்ஜெட் சம்பந்தமாகத் தானே வந்தார்?" என்று கேட்கிறேன்.

"எப்படித் தெரிந்தது?" என்று ஆச்சரியத் துடன் கேட்கிறுள் அவள்.

அதற்குப் பதில் சொல்லாமல், "எனக்கு நீ உதவ வேண்டும்" என்கிறேன்.

"இல்லா விட்டால்...?"

"வேண்டியதைச் சாதித்துக் கொள்ள வேறு வழிகள் தெரியும் எனக்கு."

"உதவி சும்மா வராது."

"எவ்வளவு?"

"எனக்கு ஆயிரமும் ராஷ்டிரபதி பவன் பிரஸில் வேலையாக இருக்கும் மஜூம்தாருக்கு ஆயிரமும் பிரேம்சந்த் கொடுத்தார்."


வாழ்க்கையில் நீங்கள் பெறுவதென்ன?
விளங்கும் வீரியமா
அல்லது
வாழ்க்கையின் சந்தோஷத்தை கவலை, தெம்பின்மை, சிரமம் முதலியன கெடுக்காமல் காத்துக்கொள்ளுங்கள். வாழ்க்கையில் உண்மை வெற்றி தெம்பினால்தான் ஏற்படும்—ஸனடோஜன் புதுபலம் அளித்து, உடல்வலிமை மனசக்தி அதிகரிக்கச் செய்கிறது. 25,000 த்துக்கு மேற்பட்ட வைத்தியர்கள் அதன் அபூர்வ சக்தியளிக்கும் குணத்திற்கு அத்தாட்சி அளிக்கிறார்கள்.
ஸனடோஜன்
மிக்க உயர்ந்த பால் டானிக்

''கொடுத்தாரா, கொடுக்கப் போகிறாரா?''

'' மஜும்தாருக்கு உரிய ஆயிரத்தைக் கொடுத்து விட்டார் என்னிடம். காரியம் முடிந்தபிறகு என்னுடைய ஆயிரத்தைத் தருவதாகச் சொன்னார்.''

''இதற்கு நீ மஜும்தாரிடம் போவானேன்? பிரேம்சந்தே போவதுதானே?''

''பணமும் பிரேம்சந்தும் மட்டும் காரியத்தை முடிக்க முடியாது என்ற எண்ணம்.'' இப்போது இவன் சிரிக்கவில்லை. நான் புரிந்து கொண்டு கழுத்தைச் சொறிகிறேன். பின்னர், ''ஆயிரத்து ஐந்நூறு தருகிறேன். மஜும்தார் உன்னிடம் கொடுக்கும் பட்ஜெட் தகவலை என்னிடம் அப்படியே தந்துவிடு'' என்கிறேன்.

அவன் கூரையைப் பார்த்து யோசித்து விட்டு, என் பக்கம் கையை நீட்டுகிறான். ''மொத்தம் இரண்டாயிரத்து ஐந்நூறு'' என்றபடியே.

'கணக்கில் புலிதான்' என்று நினைத்துக் கொண்டே எழுநூற்று ஐம்பது ரூபாய் எண்ணி வைக்கிறேன். ''காரியம் முடிந்ததும் பாக்கித் தொகை தரப்படும்'' என்கிறேன்.

4

டில்லிக்கு நானும் பின்னோடு வருவதை அவன் ரசிக்கவில்லை. அவனுடனேயே ஒரே ஓட்டலில் தங்குவதைக் கொஞ்சம்கூட விரும்பவில்லை. எங்கு போனாலும் நிழல்போல் தொடருவது அவனுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. அதற்காக நான் கடமையிலிருந்து பிறழ முடியுமா என்ன? அப்புறம் நீங்கள் எனக்கு முட்டாள் பட்டம் கட்ட மாட்டீர்களா? ''நீ என்ன கோபித்துக் கொண்டும் பிரயோசனமில்லை. நீ விரும்பியோ விரும்பாமலோ இப்படித்தான் நடக்தாக வேண்டும். வேறு வழியில்லை'' என்று தெளிவாகச் சொல்லி விடுகிறேன் அவனிடம். ''அப்பா! பெரிய சந்தேகப் பிராணி!'' என்று என்னைச் சபிக்கிறான் அவன்.

மஜும்தார் ஒண்டிக் கட்டை. முதல்நாளே அவனைச் சுண்டுவிரலால் ஆட்டுவிக்கிறான் அவன். நான் அவனுக்குத் தெரியாமல் பின்னணியிலேயே இருந்து கவனிக்கிறேன். இரண்டாவது நாள் அவன் கண்களில் விரலைக் கொடுத்து ஆட்டுமளவுக்கு வந்து விட்டது. ''இனிமேலும் காத்திருக்க வேண்டாம்'' என்று அவனுக்கு யோசனை கூறுகிறேன் நான்.

இப்போதுதான் அவன் ஒரு அணுகுண்டைத் தூக்கிப் போடுகிறான். மஜும்தாரைக் காதலிப்பதாகப் பாவனை செய்யப் போக நிஜமாகவே அவர்களிடையே காதல் மலர்ந்து விட்டதாம். கல்யாணம் செய்துகொள்ளப் போகிறார்களாம்! ''பிரேம்சந்தும் நீங்களும் பட்ஜெட்டும் எக்கேடாவது கெட்டுப் போங்கள்'' என்கிறான்.

எப்படி இருக்கிறது கதை? இந்த லட்சணத்தில் நான் எப்படி பிரேம்சந்த் மீது குற்றத்தை திருப்புவது? மஜும்தார் யோக்கியமானவரு இல்லையா என்று எப்படிக் கண்டுபிடிப்பது? நீங்கள் இந்த இக்கட்டான நிலையில் இருந்தால் என்ன செய்வீர்கள்? உதட்டைப் பிதுக்கிக் கொண்டு வீட்டுக்குப் போய்ச் சேருவீர்கள். அல்லது அவனிடம் மஜும்தாரைக் காதலிக்க வேண்டாமென்று மன்றாடுவீர்கள். இல்லையா?

நான் இப்படியெல்லாம் செய்யப் போவதில்லை. அவன் காதல் அசைக்க முடியாதது என்பதைப் புரிந்து கொள்கிறேன். ஆனால் மஜும்தாரின் மனத்தை மாற்றி விட முடியும் என்று நம்புகிறேன். அவனுக்கு ஒரு கடிதம், மொட்டைக் கடிதம் எழுதுகிறேன். அதில் அவனுடைய காதலி யார், எங்கிருந்து வருகிறாள், எதற்காக, யாரால் அனுப்பப்பட்டு வருகிறாள் என்பதை யெல்லாம் குறிப்பிட்டு ஏமாற வேண்டாம் என்றும் எச்சரிக்கிறேன். தபாலில் கடிதத்தைச் சேர்த்து விட்டு நிம்மதியாக உட்கார்ந்து கொண்டிருக்கிறேன்.

மறுநாள் மாலை மஜும்தார் வீட்டுக்கு இவன் போகிறான். வழக்கம் போல் நான் சற்றுத் தூரத்தில் மறைவாக அவன் திரும்பி வருவதற்குக் காத்திருக்கிறேன்.



இந்த நிமிஷங்களில் அவன் திரும்பி விடுகிறான். அவன் கண்களில் தாரை தாரையாகக் கண்ணீர் பெருக்கெடுத்துக் கன்னங்களில் வழிகிறது. பதைபதைப்பதுபோல் பாவனை செய்து ''என்ன, என்ன நடந்தது?'' என்று ஒன்றும் தெரியாதவன் போலக்கேட்கிறேன்.

அவன் சொல்கிறான்: நான் கதவைத் தட்டியதுமே அவர் திறந்து, ''இதற்காகத் தானே மூன்று நாட்களாக என்னிடம் குழைந்து கொண்டிருந்தாய்?'' என்று கேட்டபடியே ஒரு உறையை என் முகத்தில் அடித்தார். அது அங்கிருந்து என் கையில் விழுந்தது. நான் விஷயம் என்ன என்று புரிந்துகொண்டு பதில் பேசுவதற்கு முன்னால் கதவைப் 'படார்' என்று சாத்தி விட்டார். எனக்கு ரோசம் பொத்துக் கொண்டு வந்தது. ஓங்கிக் கதவைத் தட்டினேன். கதவைத் திறந்த அவர், ''உன்னோடு பேசுவதற்கு ஒன்றுமில்லை. நீ போகலாம்'' என்றார். ''பேசுவதற்காகக் கதவைத் தட்டவில்லை'' என்று சொல்லிப் பிரேம்சந்த் கொடுத்த பணம் நிறைந்த உறையை அவர் மீது எறிந்துவிட்டு நான் வேகமாக வெளியே வந்து விட்டேன்.

அவன் கைகளில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்முகிறான். நான் கைக்குட்டையை எடுத்துக் கொடுத்து, ''கண்களைத் துடைத்துக் கொள். தெருவில் போவோர் வருவோரெல்லாம் பார்க்கிறார்கள்'' என்கிறேன்.

மஜூம்தாரிடம் கோபமாகப் பணத்தை வீசியெறிந்து விட்டு, இங்கே வந்து அழுது என்ன பயன்? நல்ல வேடிக்கை என்று நினைக்கிறேன். என் யுக்தி பலித்து விட்டது. எனக்கு மகிழ்ச்சியளித்த போதிலும் அவளுடைய விம்மலும் 'அழுகையும் என் இருதயத்தைக் கசக்கிப் பிழிகின்றன. அந்த வேதனை குறைய வேண்டுமானால் அவளிடம் உண்மையைச் சொல்லிவிட வேண்டியதுதான் என்று தீர்மானிக்கிறேன். எல்லாவற்றையும் கேட்டு விட்டு அவள் சொல்கிறாள்: "என் வாழ்வில் தோன்றிய ஒரே ஒளிச் சுடரையும் அவித்து விட்டீர்கள். மற்றப் பெண்களைப் போல் குடும்பம் நடத்த என் உள்ளம் துடிப்பதை நீங்கள் எப்படி உணர முடியும்?"

இந்த வார்த்தைகள் எத்தனையோ விஷயங்களை எனக்குச் சொல்கின்றன. விதி வசத்தால் அவள் அத்தகைய சூழ்நிலையில் பிறந்து வளர்ந்து விட்டாலும் அவள் தூய்மையானவள் என்பதை அறிந்து கொள்கிறேன்.

"எல்லாமே ஒரு விதத்துக்கு நல்லதுதான். கல்யாணம் செய்து கொண்ட பின்னர் அவனுக்கு உன்னைப் பற்றித் தெரியவந்தால் வாழ்க்கையே நரகமாகி விடும். முன் கூட்டியே தெரிந்து கொண்டும் மனமுவந்து ஏற்றுக் கொண்டால் கவலையில்லை. அவன் கோபம் அடங்கியதும் அப்படி நடக்கவும் போகிறது" என்கிறேன் நான்.

"வெறும்குருட்டுக் கற்பனை. அதற்கெல்லாம் நான் கொடுத்து வைக்காதவள். மேலே ஆகவேண்டியதைக் கவனியுங்கள்!" என்று சொல்லுகிறாள் அந்த மோகனப் பெண்.

5


மஜூம்தாரிடமிருந்து கிடைத்த பட்ஜெட் நகலைக் கொண்ட உறை மீது அது கிடைத்த விதம், தேதி, நேரம் எல்லாவற்றையும் குறிப்பிட்டுக் கையெழுத்துப் போடுகிறேன். அவளையும் கையெழுத்துப் போடச் சொல்கிறேன். பின்னால் இதுவே சாட்சியாகும். நாளைக் காலையில் இதை எடுத்துக் கொண்டு போய் என் மேலதிகாரியிடம் கொடுக்க வேண்டும் என்று தீர்மானிக்கிறேன். 'மஜூம்தார் பட்ஜெட் நகலைப் பணத்துக்காகக் கொடுத்து விட்டான், அவனைக் கைது செய்யலாம்' என்று அவரிடம் தெரியப்படுத்தி விடலாம். அவள் காதலனைப் பற்றி இப்படிக் குற்றம் சாட்ட யோசிப்பது எனக்குக் கஷ்டமாகத் தான் இருக்கிறது. ஆனால் இந்தத் தொழிலில் மனம் இரும்பாக இருந்தால்தான் காரியங்கள் நடைபெற முடியும்.

பம்பாய் திரும்பியபிறகு இவன் பிரேம்சந்திடம் கையைவிரிக்கக் கூடாதல்லவா! ஆகவே நான் ஏற்கனவே தயாரித்து வைத்திருக்கும் பொய் பட்ஜெட் நகலை ஒரு உறையிலிட்டு அவளிடம் தருகிறேன். "இதைப் பிரேம்சந்திடம் கொடுத்து விடு" என்கிறேன். எப்படி என்னுடைய யோசனை?

மறுநாள் காலையில் அவளைக் காணோம்!

மேஜையின் மீது நான் வைத்திருந்த மஜும்தாரிடமிருந்து கைப்பற்றிய பட்ஜெட் நகல் அடங்கிய உறையையும் காணோம். அதற்குப் பதிலாக நான் பிரேம்சந்திடம் கொடுக்கச் சொல்லி அவளிடம் தந்த போய் பட்ஜெட் அடங்கிய உறைதான் இருக்கிறது. அதன் மீது முத்து முத்தான எழுத்தில் 'பழிக்குப் பழி' என்று எழுதியிருக்கிறது. எனக்கு எப்படி யிருக்கும் என்று யோசித்துப் பாருங்கள். வெண்ணெய் திரளுகிற சமயத்தில்......

அவளுடைய காதலைக் கெடுத்ததற்குப் பழி வாங்கி விட்டாள். எனக்குத் தெரியாமல் உறைகளை மாற்றி எடுத்துக் கொண்டு போய்விட்டாள். அசல் பட்ஜெட் நகலைப் பிரேம்சந்திடம் கொடுத்து விடுவாள்.



தோல்வியின் எல்லையில் நான் நிற்கிறேன். ஆனால் நான் தலையில் கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விடவில்லை. மூளை துரிதமாக வேலை செய்கிறது. ஓட்டல் மானேஜரைக் கேட்டு, அவள் இரவு விமானத்தில் பம்பாய் போய் விட்டாள் என்று அறிகிறேன். அடுத்த விமானத்திலேயே நானும் பம்பாய்க்குப் புறப்படுகிறேன்.

என்னைப் பார்த்ததும் அவள் பழையபடி குறும்புச் சிரிப்புடனும் கேலிப் பார்வையுடனும் வரவேற்கிறாள். ஆனால் அந்த வெளித்தோற்றத்துக்குள்ளே ஒரு சோகம் இருப்பதை நான் உணருகிறேன். பிரேம்சந்திடம் அந்த உறையைக் கொடுத்து விட்டாள் என்று தெரிகிறது. கையை நீட்டி, "எழுநூற்றைம்பது பாக்கி" என்கிறாள்.

"நீதான் என்னை ஏமாற்றி விட்டாயே?" என்கிறேன் நான்.

"இல்லவேயில்லை. மஜும்தாரிடமிருந்து கிடைக்கும் பட்ஜெட் நகலை உங்களுக்குத் தருவதாகச் சொன்னேன். தந்து விட்டேன். அதன் பிறகு நடந்ததையெல்லாம் நடக்காது என்று சொல்லவில்லையே? உங்களிடம் கொடுக்கப் பட்டதைப் பாதுகாத்துக் கொள்ள முடியவில்லையானால் அதற்கு நானா பொறுப்பு?"

தோல்வியை ஒப்புக்கொண்டு எழுநூற்றைம்பதை எண்ணி வைக்கிறேன். "இரண்டாயிரத்து ஐந்நூறு லாபம்" என்றபடியே.

"இல்லை மூவாயிரம்."

நான் புருவங்களை நெரிக்கிறேன்.

"மஜும்தாரிடம் பிரேம்சந்த் கொடுத்த ஆயிரத்தையும் தரவில்லை. ஐந்நூறுதான் கொடுத்தேன்" என்று கூறிச் சிரிக்கிறாள்.

"பழிக்குப் பழி வாங்கி விட்டாய், என் வேலை போய் விடும். திருப்திதானே? இனி மேலாவது என்னை மன்னிப்பாயா?"

"நீங்கள் ரொம்ப ரொம்ப நல்லவர்" என்கிறாள் அவள். மனத்தால் உணர்ந்து பேசுகிறாள் அப்படி; வெளி வேஷமல்ல.

நான் அங்கிருந்து கம்பி நீட்டுகிறேன்.

6

"பணத்துக்குப் பணம் விரயம்; காரியமும் தோல்வி. பட்ஜெட்டின் நகல் பிரேம்சந்திடம் போய் விட்டது. அவனையோ அல்லது மஜும்தாரையோ தண்டிக்கச் சாட்சியமோ, ஆதாரமோ இல்லை. நான் ராஜினாமா செய்கிறேன்" என்று என் மேலதிகாரியிடம் ஒரு குரல் அழுகிறேன்.

ராஜினாமாக் கடிதத்தை அவர் கிழித்துப் போடுகிறார். "பிரேம்சந்திடம் உண்மை பட்ஜெட் நகல் போகவில்லை" என்கிறார்.

எனக்குத் தூக்கிவாரிப் போடுகிறது. "என்ன? ஏது? எப்படி?" என்று குளறுகிறேன்.

"மஜும்தாரிடம் நீ கைப்பற்றியது உண்மையான பட்ஜெட் நகல் அல்ல. அவளே ஒரு போய் பட்ஜெட் தயாரித்துக் கொடுத்திருக்கிறாள், தன்னை ஏமாற்ற வந்தவனிடம். கூடவே போலீஸுக்குத் தகவலும் கொடுத்துவிட்டாள், தன்னை ஏமாற்ற ஒரு பெண் முயன்றதாக. அவள் தயாரித்துக் கொடுத்த போய் பட்ஜெட்தான் பிரேம்சந்திடம் போய்ச் சேர்ந்திருக்கிறது."

நான் அப்படியே மயங்கிக் கீழே விழுந்து விடுவேன் என்றுதானே நினைக்கிறீர்கள். அது தான் நடக்காது! எனக்குத் தெரியும் எப்போதுமே அதிர்ஷ்டம் என் பக்கத்தில்தான்.

என்ன? என்ன கேட்கிறீர்கள்? 'அது சரி, அந்தப் பெண்ணின் கதி என்ன' என்றா? அவளைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். அவள் மீது எப்படிக் குற்றம் சுமத்த முடியும்? அவள் இந்தக் காரியத்தைச் செய்யப் போலீஸாராகிய நாங்களே உடந்தையாக இருந்திருக்கிறோமே? ஆகவே அவள் தப்பித்து விடுவாள். பிரேம்சந்த் தான் நன்றாக மாட்டிக் கொள்வான்.

நானேக்கு மறுபடியும் மஜும்தாரைப் பார்த்து. அவளைப் பற்றித் தவறான அபிப்பிராயம் கொண்டிருக்கிறான் என்பதையும், அவள் தன்னைச் சந்தேகித்து விட்டாள் என்று அறிந்ததும் விம்மி விம்மி அழுத அந்தப் பரிசுத்தமான உள்ளத்தைப் பற்றியும் அந்தக் களிமண் மண்டையில் புகுத்தி விட்டேனானால் என் மனமும் நிம்மதி யடைந்து விடும்! நான் என்ன சொல்லியும் அவன் மூளையில் ஏறவில்லையானால் அவளையே கூட்டி வந்து அந்த மோகனப் புன்னகையைக் கொஞ்சம் அள்ளி வீசச் சொன்னால் போகிறது!


மழமழப்பான
சுகமான
க்ஷவரத்திற்கு...
வாழ்வில் வெற்றி கண்டவர்கள் வேறெந்த தயாரிப்பையும்
நாடாமல்
பாமாலிவ்
ஷேவிங் கிரீமைத்தான் உபயோகிக்கிறார்கள்
PALMOLIVE
BRUSHLESS
PALMOLIVE
LATHER
நுரையுடனோ அல்லது பிரஷ் இல்லாமையோ நீங்களே தேர்ந்தெடுங்கள்
பாமாலிவ் என்றாலே உயர்ந்த ரகம்!


கால்கேட்டின்
துப்புரவாக சுத்தம் செய்யும்
வன்மை உங்களது
பற்களையும் ஈறுகளையும்
பாதுகாக்கிறது!
சாஸ்திரீயமாக அமைக்கப்பட்ட கால்கேட் டூத் பிரஷ் உங்கள் பற்களின் இடுக்குகளில் சுலபமாக நுழைகிறது ... உட்புறத்தையும், வெளிப்புறத்தையும் துப்புரவாக சுத்தம் செய்கிறது ... பல் ஈறுகளை மிருதுவாகத்தடவி உறுதிப்படுத்துகிறது! உங்கள் பற்களையும், ஈறுகளையும் கால்கேட் டூத் பிரஷ்ஷால் பாதுகாத்துக்கொள்ளுங்கள்.
4 வகைகள்: ★ அடல்ட் ★ ஜூனியர் ★ சைல்ட் ★ பேபி
★ ஹார்ட் ★ மீடியம் ★ ஸாப்ட்
டீலக்ஸ் சுகாதார பிளாஸ்டிக் குழாயில் கிடைக்கும். ரெகுலரும் கிடைக்கிறது.
அழகான பிளாஸ்டிக் பிடிகளில் உறுதியாகப் பொருத்தப்பட்ட ஸ்டரிலைஸ் செய்யப்பட்ட நைலான் பிரிஸல்கள்
COLGATE
Nylon TOOTH BRUSH
இந்தியாவில் சிறந்த டூத்பேஸ்ட் செய்பவர்களால் தயாரிக்கப்படுகிறது!



Shilpi S.O.M. No. 367 D

அத்தியாயம் 36

பழைய நினைவுகள்

"சக்கசேனாபதி! மனத்தையும் கண்களையும் திறந்து வைத்துக் கொண்டு எழிலுணர்ச்சியோடு பார்க்கிறவனுக்கு உலகம் எவ்வளவு அழகாயிருக்கிறது பார்த்தீர்களா?"

கையில் வலம்புரிச் சங்கும், உடலில் கடற் காய்ச்சலுமாகக் கப்பல் மேல் தளத்தில் நின்று கொண்டிருந்த இராசசிம்மன் தன் பக்கத்தில் நின்று கொண்டிருந்த சக்க சேனாதிபதியை நோக்கி இப்படிக் கேட்டான்.

"பார்த்தேன், இளவரசே! நன்றாகப் பார்த்தேன். இந்த அழகின் தூண்டுதலால் நீங்கள் சற்று முன் கவிதையே பாடி விட்டீர்களே! உங்கள் கவிதையின் இனிய ஒலியிலிருந்து என் செவிகள் இன்னும் விடுபடவில்லை; அதைக் கேட்ட வியப்பிலேயே இன்னும் ஆழ்ந்து போய் நின்று கொண்டிருக்கிறேன் நான்."


"என்னவோ மனத்தில் தோன்றியது. நாவில் வார்த்தைகள் கூடித் திரண்டு வந்து எங்களை முறைப் படுத்தி வெளியிடு என்று துடித்தன. பாடினேன்."

"இப்படி ஏதாவது தத்துவம்பேசிக் குமார பாண்டியர் என்னை இவ்வளவு எளிதாக ஏமாற்றிவிட முடியாது. உங்களைக் கவிஞராக மாற்றிய கவினும் அழகின் வனப்பு நீங்கள் கப்பலில் நின்று பார்க்கும் இந்தக் கடலிலும், வானத்திலும் மட்டும் இல்லை."

"வேறு எங்கு இருக்கிறதாம்?"

"எனக்குத் தெரியும்! கேற்று உறக்கத்தில் எத்தனை முறை அந்தப் பெயரைப் பிதற்றினீர்கள்! உங்களைக் கவியாக மாற்றிப் பாட வைக்கும் அழகு செம்பவழத்தீவில் இருக்கிறது. அந்த அழகுக்குப் பெயர் மதிவதனா."

சக்கசேனாபதி மேற்கண்டவாறு உண்மையைக் கூறியதும், 'இந்த வயதான மனிதர் நம் மனத்தை உள்ளபடி சொல்லி விட்டாரே!' என்று வெட்கமடைந்தான் இராசசிம்மன்.





"ஏன் வெட்கப்படுகிறீர்கள், இளவரசே! நான் உள்ளதைத்தானே கூறினேன்? சில மலைகள் சில நதிகளுக்குத் தொடர்ந்து தண்ணீரை அளித்துப் பல நிலங்களைக் காப்பதுபோல் இயற்கை சிலபேருக்கு அளவிட முடியாத அழகைக் கொடுத்துப் பல கவிகளை உண்டாக்கி விடுகிறது. பெண்களின் வனப்பும் மலைகளின் வளமும், மலர்களின் மணமும், கடலின் பரப்பும் இல்லாமலிருந்தால் இந்த உலகத்தில் கவிதையே உண்டாகியிருக்காது. செம்பவழத் தீவில் சந்தித்த அந்தப் பெண்ணின் அழகு உங்களைக் கவியாக்கியிருக்கிறது."

"உங்கள் புகழ்ச்சியை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். நீங்கள் சொல்வது போல் நான் கவியில்லை."

"நீங்கள் இல்லையென்று சொன்னால் எனக்கென்ன? என்னுடைய கருத்தின்படி அழகை உணரும் நெஞ்சின் மலர்ச்சி இருந்தாலே அவன் மூக்கால் கவியாகி விடுகிறான். நீங்களோ அந்த மலர்ச்சியை வார்த்தைகளாக்கி வெளிப்படுத்தி விட்டீர்கள்" என்று சக்கசேனாபதி தம்முடைய அபிப்பிராயத்தை வற்புறுத்தினார்.

அவருக்குப் பதில் சொல்லாமல் கையில் வைத்திருந்த வலம்புரிச் சங்கை மேலும் கீழுமாகத் திருப்பிப் புரட்டி வலது கை விரல்களால் மெல்ல வருடிக் கொண்டிருந்தான் இராசசிம்மன். ஒன்றிரண்டுமுறை விளையாட்டுப் பிள்ளை ஆர்வத்தோடு செய்வது போல் அந்தச் சங்கை ஊதி ஒலி முழக்கினான்.

"போதும்! நன்றாக இருட்டி விட்டது. இவ்வளவு நேரம் காய்ச்சல் உடம்போடு கடற்காற்றுப் படும்படி இங்கு நின்றாகி விட்டது. உங்கள் பிடிவாதம் பொறுக்க முடியாமல்தான் இங்கே அழைத்துக் கொண்டு வந்தேன். இனிமேலும் இப்படி நிற்பது ஆகாது. வாருங்கள், கீழே போய் விடலாம்' என்று இங்கிதமாகச் சொல்லி அவனைக் கீழ்த் தளத்துக்கு அழைத்துக் கொண்டு போய் விட்டார் அவர்.

சிறு சிறு தீபங்கள் எரிந்து கொண்டிருந்தாலும் கப்பலின் மேல்த் தளத்தில் இருளே மிகுதியாக இருக்-

தது. சக்கசேனபதியின் வற்புறுத்தலுக்காகச் சிறிது 'உணவு உட்கொண்டோம்' என்று பேர் செய்து விட்டுப் படுத்துக்கொண்டான் இராசசிம்மன்.

பசித்தவன் பழங் கணக்குப் பார்ப்பது போல் முன் நினைவுகள் அவனை மொய்த்துக் கொண்டன. இருந்தாற் போலிருந்து, "நான் யார்? எங்கே பிறந்தேன்? எதற்காகப் பிறந்தேன்? ஏன் இப்படி நிலையில்லாமல் அலைந்து திரிந்து கொண்டிருக்கிறேன்? இப்போது எங்கே போய்க் கொண்டிருக்கிறேன்? ஏன் போய்க் கொண்டிருக்கிறேன்? என்பது போல் தன் நிலை மறந்த, தன் நினைப் பற்ற வினாக்கள் அவன் மனத்தில் எழுந்தன. சோர்ந்த



மன நிலையும் தன் மேல் தனக்கே வெறுப்பும் உண்டாகிற சில சமயங்களில் சில மனிதர்களுக்கு இத்தகைய கேள்விகள் நினைவுக் குமிழிகளாய் மனத்தில் முகிழ்த்து மனத்திலேயே அழியும். வளர்ச்சியும் தளர்ச்சியும் இன்பமும், துன்பமும் நிறைந்த தன் வாழ்க்கையின் நாட்களை விலகி நின்று எண்ணிப் பார்க்கும்போது சோகத்தின் வேதனை கலந்த ஒரு வகை மகிழ்ச்சி அவனுக்கு ஏற்பட்டது. அந்த இருளில் காய்ச்சலோடு படுக்கையில் கிடந்தவாறே மனத்தின் நினைவுகளைப் பின்னோக்கிச் செலுத்தினான் அவன். வெற்றிப் பெருமிதத்தோடு வாழ்ந்த பழைய நாட்களை இப்போதையத் தோல்வி நிலையில் எண்ணிப் பார்க்கும் போது வேதனையாகத்தான் இருந்தது.

நுனியில் தொடங்கிச் சாப்பிட்டுக் கொண்டு போகிற கரும்பு முடிவில் உப்புக் கரிக்கிற மாதிரிச் செல்வத்தோடும், செல்வாக்கோடும் அரச குடும்பத்து வாழ்க்கை வாழ்ந்து விட்டு இன்றைய நிலையில் அந்தப் பழைய சிறப்பை நினைக்கிறபோது வெறுப்பளிக்கிறது. பழகப் பழக, அனுபவிக்க அனுபவிக்கவெறுப்பைக் கொடுக்கிறது என்ற காரணத்தால் தானோ என்னவோ தமிழ் மொழியில் செல்வத்துக்கு 'வெறுக்கை' என்று ஒரு பெயர் ஏற்பட்டுவிட்டது. அனுபவிக்கிறவன் ஞானமுள்ளவனாக இருந்தால் செல்வத்தின் சுகங்களை வெறுத்து விட்டு அதைவிடப் பெரியதைத் தேடிக் கொண்டு ஓடும் நிலை ஒரு நாள் வந்துதான் தீரும்.

இராசசிம்மன் நினைத்துப் பார்த்தான். பேரரசராகிய சடையவர்ம பராந்தக பாண்டியருக்கும், பேரரசியாகிய வானவன்மாதேவிக்கும் புதல்வனாகப் பிறந்து மதுரை மாநகரத்து அரண்மனையில் தவழ்ந்த நாட்களை நினைத்தான். தந்தையின் தோள் வலிமையும், வாள் வலிமையும், ஆள் வலிமையும் அன்றையப் பாண்டிய நாட்டைப் பெரும் பரப்புள்ளதாகச் செய்திருந்தன. அப்போது மதுரை கோநகரமாக இருந்தது. அவன் சிறுவனாக இருந்தபோது அரச குல வீர வழக்கத்தின்படி சங்கு, சக்கரம், வில், வாள், தண்டு என்னும் ஐந்து ஆயுதங்களையும் போல் சிறிதாகப் பொன்னிற்செய் துநாணில்தொடுத்து அவனுடைய கழுத்தில் தம் கையாலேயே கட்டினார் அவனுடைய தந்தை. வீரத்துக்குச் சின்னமாகச் சிறுவர்களுக்கு அரச குலத்தில் கட்டப்படும் 'ஐம்படைத்தாலி' அது. ஒரு

நான் தந்தை பராந்தகரும், தாய் வானவன்மாதேவியும் அருகில் இருக்கும் போது அவன் எதற்காகவோ முரண்டுபிடித்துக் கொண்டே கழுத்தில் கிடந்த ஐம்படைத் தாலியை அறுத்துச் சிதறி விட்டான். அப்போது பராந்தகர் தம் மனைவியை நோக்கி, "மாதேவி! இந்தப் பயல் எதிர்காலத்தில் நாட்டையும், ஆட்சியையும்கூட இப்படித்தான் அறுத்துச் சிதற விட்டுத் திரிந்துகொண்டிருக்கப் போகிறான். எனக்கென்னவோ இவன் என்னைப் போல் இவ்வளவு சீராக ஆளமாட்டான் என்றுதான் தோன்றுகிறது" என்றார். மாதேவிக்கு அதைக் கேட்டதும் தாங்கமுடியாமல் கோபம் வந்து விட்டது.

"நீங்களாகவே வேண்டுமென்று இவனைக் குறைவாக மதிப்பிடுகிறீர்கள். உங்களை விடப் பெரிய வீரனாக எட்டுத் திசையும் வென்று ஆளப் போகிறான் இவன்" என்று கணவனுக்கு மறுமொழி கிடைத்தது வானவன்மாதேவியிடமிருந்து.

இன்னொரு சம்பவம். இராசசிம்மனுக்கு ஆறாண்டுகள் நிறைந்து முடிந்து ஏழாவது ஆண்டின் 'நாண்மங்கலம்' (பிறந்த நாள்) வந்தது. பிறந்த நாளைக் கொண்டாடும் நாண்மங்கல விழாவன்று காலையில் அவனைப் புனித நீராட்டிப் புத்தாடை அணிவித்துப் பொன்முடி சூட்டி வழிவழி வந்த பொற்சிம்மாசனத்தில் உட்கார்த்தி ஒரு கையிலே திருக்குறள் ஏட்டுச் சுவடியையும், மற்றொரு கையிலே வீர வாளையும் கொடுத்தார்கள். சிம்மாசனத்தின் இருபுறமும் பராந்தக பாண்டியரும், வானவன்மாதேவியும் நின்று நாண்மங்கலத் திருக்கோலத்தில் தங்கள் செல்வனை அழகு பார்த்துப் பூரித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது இராசசிம்மன் கை தவறி வாளைக் கீழே போட்டு விட்டான். இசைவு பிசகாகக் கீழே விழுந்த அந்த வாளின் நுனியில் ஒரு சிறு பகுதி உடைந்து விட்டது.

"அபசகுனம் போல் கல்ல நாளும் அதுவுமாக இப்படிச் சிம்மாசனத்தில் உட்கார்ந்ததும் வாளைக் கீழேபோட்டு உடைத்து விட்டானே?" என்று கவலையோடு கூறினார் பராந்தக பாண்டியர். "போதும்! உங்களுக்கு எது நடந்தாலும் அபசகுனமாகத்தான் படுகிறது. சிறு குழந்தை கைதவறிப் போட்டு விட்டான்" என்று மகாராணி கூறிய சமாதானத்தினால்தான் பராந்தகர் திருப்தியடைந்தார்.

தந்தை பராந்தக பாண்டியரின் வீரக்களை பொருந்தியஅந்தமுகத்தைக் கப்பல்தளத்தின் இருட்டில் படுத்துக் கொண்டு நினைத்துப் பார்க்க முயன்றான் இராசசிம்மன். தந்தை உயிரோடிருந்த காலத்தில் அலங்காரத்தோடு கூடிய தன் அன்னையின் 'வாழுங் கோல'த்தை நினைத்துப் பார்த்தான். அன்று தங்களுக்குச் சொந்தமாக இருந்த மதுரைப் பெருநகரத்தைப் பகுதி பகுதியாக நினைத்துப் பார்த்தான். மதுரை நகரத்து அரண்மனையையும் இளமையில் தான் அங்கே கழித்த நாட்களையும் நினைத்தான். கடைசியாகத் தந்தையின் மரணத்துக்குப் பின் நடந்த நிகழ்ச்சிகள் அவன் நினைவைப் பற்றிக் கொண்டு வரிசையாகத் தொடர்ந்து உள்ளத்தில் ஓடின.

தந்தை காலமாகும்போது கோனாட்டின் தென்பகுதியிலிருந்து குமரிவரை பரந்து விரிந்த பாண்டிய நாட்டை எனக்கு வைத்து விட்டுப் போனார். நான் என்ன செய்தேன்? என் கண் காணக் கரவந்தபுரத்திலிருந்து குமரி வரை குறுகி விட்டதே அந்த நாடு? தந்தை காலஞ்சென்ற சிறிது காலத்துக்குப் பின் நானும் வீராவேசமும், உரிமை வேட்கையும் கொண்டு சில போர்களில் வெற்றி பெறத்தான் செய்தேன். உலப்பிலிமங்கலத்தில் நடந்த போரில் இருவர், மூவராகச் சேர்ந்துகொண்டு வந்த வடதிசையரசர்களைக் கூட வென்றேன். அப்போது பாண்டிமண்டலப் பெரும் படை மிகப் பெரிதாகவும், வலுவுள்ளதாகவும் இருந்தது. தஞ்சாவூர்ச் சோழன் வைப்பூரில் நடந்த போரிலும், நாவற்பதியில் நடந்த போரிலும், இரண்டு முறை என் தலைமையில் பாண்டிமண்டலப் படைக்குத் தோற்றோடியிருக்கிறான். இப்போது கொழுத்துப் போய்த் திரியும் இந்தக் கொடும்பாளூர்க்காரனும் ஒரு முறை எனக்குத் தோற்றிருக்கிறான்.

அன்று என் வெற்றிகளைப் புகழ்ந்து மெய்க்கீர்த்திகளையும், பாமாலைகளையும் புலவர்கள் பாடினார்கள். நீளநீளமான சிறப்புப் பெயர்களை எனக்குக் கொடுத்தார்கள். சடையன்மாறன், இராசசிகாமணி, சீகாந்தன், மந்தரகௌரவமேரு, விகடபாடலன் என்றெல்லாம் புகழ்ந்தார்கள். தந்தை தம் காலத்திற் செய்தது போலவே, நானும் அன்னையைக் கலந்தாலோசித்

துக் கொண்டு எண்ணற்ற தேவதானமும் (கோயில்களுக்கு மானியம்) பள்ளிச் சந்தமும் (சமணப்பள்ளிகளுக்கு மானியம்) பிரமதேயமும் (அந்தணர்க்கு மானியம்) அளித்தேன். மதுரை வட்டாரத்தில் இருக்கும் நற்செய்கைப்புத்தூர் என்னும் சின்னமனூர் முழுவதையுமே ஒழுக்கத்திலும், கல்வியிலும் சிறந்த ஒரு அந்தணருக்குப் பிரமதேயமாகக் கொடுத்தேன். அதனால் என் சிறப்புப் பெயரோடு மந்தர கௌரவ மங்கலம் என்றே அவ்வூர் பெயர் பெற்றுவிட்டது. அந்த நாளில்தான் முதன் முதலாக இலங்கைக் காசிப மன்னரின் நட்பு எனக்குக் கிடைத்தது. பின்பு என் போதாத வேளை என் வரலாற்றையே மாற்றி விட்டது. வடக்கே சோழன் வலுவான கூட்டரசர்களைச் சேர்த்துக் கொண்டு நானும் அன்னையும் வடபாண்டி நாட்டை இழக்கச் செய்தான். தென்பாண்டி நாடும் அதன் திறமையான மகாமண்டலேசுவரரும் இல்லையானால் நான் தோற்று ஓடும் போதெல்லாம் அன்னையையும் அழைத்துப் போக வேண்டியதாயிருந்திருக்கும். மகாமண்டலேசுவரரும், கடமையிற் கருத்துள்ள தளபதி வல்லாள தேவனும் அவ்வப்போது அன்னைக்கு ஆதரவாக இருந்திருக்கிறார்கள். வடதிசைப் பகை வலுப்பதற்கு முன் நான் பெற்ற வெற்றிகளையெல்லாம் மறந்து விட்டு இரண்டு மூன்று முறை தோற்று இலங்கைக்கு ஓடியதுமே 'போர்த்திறமும் அனுபவமும் இல்லாத இளைஞன்' என்று என்னைக் கேவலமாகப் பேசத் தொடங்கி விட்டார்களே! பழைய புகழை விடப் புதிய பழியே வேகமாக நிலைத்து விடுகிறது. என்னை எஞ்சியுள்ள தென்பாண்டி நாட்டுக்காவது அரசனாக்கி முடிசூட்டி மணவினை முடிக்கவேண்டுமென்று அன்னைக்கும், மகாமண்டலேசுவரருக்கும் தாங்காத ஆசை. மகாமண்டலேசுவரர் யாருக்குமே தெரியாமல் என்னை இரகசியமாக இலங்கையிலிருந்துவரவழைத்து மாறுவேடத்தில் இடையாற்று மங்கலத்தில் வைத்துக் கொண்டார். நான் அவரிடமும் தங்கவில்லை. நான் தங்காமற் போனது மட்டுமில்லாமல் என் முன்னோர் அரசுரிமைச் சின்னங்களையும் தங்க விடாமல், அவரிடமிருந்து எடுத்துக் கொண்டு கிளம்பி விட்டேன். ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்காமல் எதையெதையோ திடீர் திடீரென்று செய்து பெயரைக் கெடுத்துக் கொண்டு போகிறேன் நான். அருமை அன்னையாரையும், மகாமண்டலேசுவரரையும், தென்பாண்டி நாட்டு மக்களையும், மட்டுமா நான் ஏங்க வைத்து விட்டுப் போகிறேன்? இடையாற்றுமங்கலத்திலும், செம்பவழத் தீவிலுமாக இரண்டு பெண் உள்ளங்களை வேறு ஏங்க வைத்து விட்டுப் போகிறேன். அதே ஏக்கங்களின் மொத்தமான எதிரொலி என் உள்ளத்திலும் உருவெடுத்துப் பேரொலி செய்கிறதே! இடையாற்று மங்கலத்துப் பெண்ணாவது தன்னளவில் அதிகமாக ஏங்கியிருப்பாள். செம்பவழத் தீவின் செல்வியோ என்னையே ஏங்கச் செய்து கொண்டிருக்கிறாள். என் உயிரையே காப்பாற்றி எனக்கு வாழ்வு கொடுத்த பெண் அல்லவா மதிவதனி. சந்திரனுடைய ஒளியில் உலகத்துக்குக் குளிர்ச்சியளித்து மயக்குகின்ற மென்மையைப் போல் மதிவதனியின் சிரிப்பில் மாபெரும் காவியங்களின் அலங்காரங்களையெல்லாம் ஒளித்து வைத்துக் கொண்டிருக்கும் ஏதோ ஒரு கவர்ச்சி இருந்து என்னை மயக்கிக் கொண்டிருக்கிறது. அவளுடைய மோகனச் சிரிப்பு வந்து முடியுமிடத்தில் இதழோரத்தில் அழகாகச் சுழி விழுகிறதே! அந்தச் சுழியில் என் உள்ளம் சுழலுகிறது. நான் செம்பவழத் தீவில் அந்தப் பெண்ணைப் பார்த்த பின் கவியாக மாறி விட்டேனென்று சக்கசேனாபதி கூறியது, எவ்வளவு பொருத்தமான வார்த்தை! அவர் அப்படிச் சொன்னபோது வீம்புக்காக அவரை மறுத்தேனே நான். உண்மைதான்! சில பெண்களின் கண்களும், சிரிப்பும், சில ஆண்களைக் கவியாக்கி விடுகின்றன. தம்மை மோந்து பார்க்கும்போதே மேலான எண்ணங்களை உண்டாக்கும் ஆற்றல் சில பூக்களுக்கு உண்டு. சில பெண்களின் கண்ணியமான அழகுக்கும் இந்த ஆற்றல் உண்டு போலும்."— எண்ண அலைகளின் கொந்தளிப்பில் இராசசிம்மன் நெட்டுயிர்த்தான்.



அழகையும், கவிதையையும், அர சாட்சியையும், போரில் வெற்றி தோல்விகளையும் சேர்த்து நினைத்த போது அவனுக்கு ஒன்று தோன்றியது. "வீரனாகவும், தீரனாகவும், வேந்தனாகவும் வாழ்ந்து செல்வம் பெறுவதை விட விவேகியாகவும், கவிஞனாகவும் வாழ்ந்து ஏழையாகச் செத்துப் போகலாம். பார்க்கப் போனால் எது செல்வம்? எது ஏழைமை? நுண்ணுணர்வும், அறிவும் தான் செல்வம். அவை இல்லாமல் இருப்பதுதான் ஏழைமை!"

இப்படி எதை எதையோ எண்ணிக் குழறிக் கொண்டு அந்த இரவின் பெரும் பகுதி தூங்காமல் கழித்தான் இராசசிம்மன். மறுநாள் பொழுது விடிந்தது. கடற் காய்ச்சல் தணிவதற்கு மாருக அதிகமாகி யிருந்தது. சக்கசேனபதி, இரவில் தூங்காமல் இருந்ததற்காக அவனை மிகவும் கண்டித்தார்.


"அநேகமாக நாம் நாளைக்கே இலங்கைக் கரையை அடைந்து விடலாம். உங்கள் உடம்பு நாளுக்குநாள் இப்படிப் போய்க் கொண்டிருக்கிறதே. கூடியவரையில் பயணத்தை நீட்டாமல் சுருக்க வேண்டுமென்று நினைக்கிறேன் நான். நாம் மாதோட்டத்தில் போய் இறங்க வேண்டாம். அது மிகவும் சுற்றுவழி. அநுராதபுரத்துக்கு மேற்கே புத்தளம் கடல் துறையிலேயே இறங்கி விடுவோம். ஏற்கெனவே நாம் விழிஞத்தில் புறப்பட்டதால் மிகவும் சுற்றிக் கொண்டு பயணம் செய்கிறோம். கோடிக் கரையிலிருந்தோ, நாகைப்பட்டினத்திலிருந்தோ புறப்பட்டிருந்தால் தொண்டைமானாற்றுக் கழிமுகத்தின் வழியே விரைவில் ஈழ மண்டலத்தின் வடகரையை அடைந்து விடலாம். சேதுக்கரையிலிருந்து புறப்பட்டால் மாதோட்டம் மிகவும் பக்கம். நானும் இதற்கு முன்பெல்லாம் உங்களை இலங்கைக்கு அழைத்து வந்தபோது கடலில் வடக்கே நீண்ட வழி சுற்றாக இருந்தாலும் மாதோட்டம் வழியாகத் தான் அழைத்துச் சென்றிருக்கிறேன். இம்முறை அப்படி வேண்டாம். உங்கள் உடம்புக்கு நீண்ட பயணம் ஏற்காது. புத்தளத்தில் இறங்கி அநுராதபுரம் போய் விடுவோம். அரசர் கூடப் பொலன்னறுவையிலிருந்து இப்போது அநுராதபுரத்துக்கு வந்திருப்பார்" என்று சக்க சேனபதி கூறியபோது இராசசிம்மனுக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டது.

"சக்கசேனபதி! சோழமண்டலக் கடற்கரையாகிய நாகைப்பட்டினத்திலிருந்தும் கோடிக்கரையிலிருந்தும் அவ்வளவு விரைவாக இலங்கையை அடைந்து விடலாமென்று நீங்கள் சொல்கிறீர்கள். ஆனால் சோழனின் புலிச் சின்னமும் கொடும்பாளூர்ப் பனைமரச்சின்னமுமுள்ள கொடியோடு அன்றிரவு செம்பவழத்தீவில் நான் ஒரு கப்பலைப் பார்த்தேன். அவர்கள் கூட ஈழ நாட்டுக்குப் போகிறவர்கள் போல்தான் தெரிந்தது. ஆனால் தொண்டைமானாற்றுக் கழிமுகத்தையும், மாதோட்டத்தையும், விட்டு விட்டு ஏன் அவர்கள் தெற்கே வந்தார்கள் என்பது எனக்கு விளங்கவில்லை?" (அந்த ஆட்கள் தன்மேல் வேல் எறிந்து துரத்திக் கொல்ல முயன்றதையும், அப்போது மதிவதனி தன்னைக் காப்பாற்றியதையும் மட்டும் அவரிடம் அவன் கூறவில்லை) என்று கேட்டான் இராசசிம்மன்.

"அப்படி அந்தக் கப்பல் இலங்கை வருவதாயிருந்தால் நம் கப்பலுக்குப் பின்னால்தானே வரவேண்டும்? அப்படியும் காணவில்லையே?" என்று சந்தேகத்தோடு பதில் சொன்னார் சக்கசேனபதி.

"நாகைப்பட்டினத்துக்கே திரும்பி விட்டார்களோ, என்னவோ? அப்படியானாலும் நம் கப்பல் செல்லும் திசையிலேயே வந்துதானே வடமேற்கு முகமாகத் திரும்ப வேண்டும்?" என்று மீண்டும் கேட்டான் இராசசிம்மன்.

"யாரோ, என்ன காரியத்துக்காக வந்தார்களோ? ஒருவேளை கீழ்க் கரையை ஒட்டிப் பாம்பனாறு வழியாகவும் போயிருக்கலாம். நீங்கள் சொல்வதையெல்லாம் சிந்தித்தால் எனக்குப் பல வகையில் சந்தேகங்கள் ஏற்படுகின்றன. இளவரசே! இப்படி ஒரு கப்பலைப் பார்த்தேன் என்று நீங்கள் அன்றே செம்பவழத்தீவில் என்னிடம் கூறியிருக்கலாமே! தாங்கள் கூறாமல் மறைத்து விட்டது ஏனோ?" சக்க சேனபதி சற்றே சினந்து கொள்வது போன்ற குரலுடன் இவ்வாறு கேட்ட போது இராசசிம்மன் விழித்தான். "சரி! அவர்கள் பேச்சு நமக்கு எதற்கு? அந்தக் கப்பல் எக்கேடு கெட்டு வேண்டுமானால் போகட்டும். நாம் நம்முடைய காரியத்தைக் கவனிப்போம். நீங்கள் கூறுகிறபடி புத்தளத்திலேயே இறங்கி விடலாம்" என்று பேச்சை மாற்றினான் அவன்.


Lakmé
டால்கம் பௌடர்
யூ டி கோலான்
லிப்ஸ்டிக்
பேஸ் பௌடர்
டஸ்டிங் பௌடர்
Lakmé
லக்மே
அழகின் அலங்காரத்திற்கென
ப்ரஞ்சு முறையிலிருந்து
தயாரிக்கப்பட்ட சாதனங்கள்
Lakmé
லக்மே ஒரு டாடா தயாரிப்பு

அத்தியாயம் 37

நினைப்பென்னும் நோன்பு

தான் உள்ளக் கருத்து நிறைவேறுமா, நிறைவேறாதா என்று அறிவதற்காகத் தான் கூடல் இழைத்ததை அத்தை பார்த்து விட்டாளே என்ற வெட்கம் கூடல் கூடிய மகிழ்ச்சியில் சிறிது சிறிதாகப் புதைந்துவிட்டது மதிவதனிக்கு. தன் எண்ணங்களை நோன்புகளாக்கி வலிமையான அன்புத் தவத்தை உறுதியாக நோற்றுக் கொண்டிருந்தாள் அவள்.

உற்சாகமாகக் கடையில் போய் உட்கார்ந்துகொண்டு சங்குகளையும் பவழங்களையும் விற்றாள். தந்தை கடையைப் பார்த்துக் கொண்ட சமயங்களில் தனது சிறிய தோணியைச் செலுத்திக் கொண்டு தீவின் கரையோரமாகக் கடலைச் சுற்றி வந்தாள். இன்னும் சில சமயங்களில் ஏழு கன்னிமார் கோயில் புன்னை மரத்தடியில் போய்ப் பெரிய முனிவர் போல் கண் மூடி உட்கார்ந்து தியானம் செய்தாள். பைத்தியக்காரப் பெண் போல் தன் அருகில் யாருமில்லாத தனிமையான சமயங்களில். "நினைப்பதை அடைவது ஒரு தவம்" என்று மெதுவாகத் தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள்.

மதிவதனி அன்று மாலையில் ஒருவிதமான மகிழ்ச்சியோடு தோணியில் ஏறிக் கொண்டு கரையோரமாகவே அதைச் செலுத்திச் சென்று கொண்டிருந்தாள். அப்போது அலங்காரமான சிறிய கப்பல் ஒன்று தீவை நோக்கி வந்து கொண்டிருப்பதை அவள் கண்டாள். அதில் வருவது யாரென்று அறிந்துகொள்ள வேண்டும் என்று இயல்பாக அவள் மனத்தில் ஒரு ஆசை உண்டாயிற்று. தற்செயலாகச் செலுத்திக் கொண்டு போகிறவளைப் போல் அந்தக் கப்பலுக்கு அருகில் தன் தோணியைச் செலுத்திக் கொண்டு போனாள் மதிவதனி.

முன் குடுமியும், பருத்த உடம்பும், குட்டைத் தோற்றமுமாக ஒரு ஆள் அந்தக் கப்பலின் தளத்தில் நின்று கொண்டிருப்பதை மதிவதனி தோணியில் நின்று பார்த்தாள். அவள் பார்த்துக்கொண்டிருக்கும் போதே கப்பலின் தளத்தில் அரச குமாரி போன்ற அலங்காரத்தோடு அழகிய இளம் பெண் ஒருத்தியும், பெண்மைச் சாயல் கொண்ட முகமுடைய இளைஞன் ஒருவனும் வந்து அந்த முன் குடுமிக்காரருக்குப் பக்கத்தில் நின்றார்கள். மதிவதனி கடலில் துணிவாகத் தோணி செலுத்திக் கொண்டுவரும் காட்சியை ஏதோ பெரிய வேடிக்கையாக எண்ணிப் பார்க்கிறவர்களைப் போல் அந்த மூன்று பேரும் கப்பல் தளத்தில் நின்று பார்த்தார்கள்.

முன் குடுமிக்காரர் அவளை நோக்கிக் கைதட்டிக் கூப்பிட்டு ஏதோ விசாரித்தார். கடல் அலைகளின் ஓசையில் அவர் விசாரித்தது மதிவதனியின் செவிகளில் விழவில்லை. தோணியை இன்னும் பக்கத்தில் கொண்டுபோய் நிறுத்திக் கொண்டு, "ஐயா! என்ன கேட்டீர்கள்? காதில் விழவில்லை?" என்று அண்ணாந்து நோக்கி வினவினாள் அவள்.

"தோணிக்காரப் பெண்ணே! இதோ அருகில் தெரியும் இந்தத் தீவுக்குப் பெயர் என்ன? கப்பலோடு இரவில் தங்குவதற்கு இங்கே வசதி உண்டா?" என்று முன்குடுமிக்காரர் அவளிடம் இரைந்து கேட்டார்.

"ஆகா! தாராளமாகத் தங்கிவிட்டுப் போகலாம். இந்தத் தீவுக்குப் பெயர் செம்பவழத் தீவு! பார்த்தாலே உங்களுக்குத் தெரியுமே!" என்று மதிவதனி பதில் சொன்னாள். அந்தக் குட்டையான முன்குடுமிக்காரரைப் பார்க்கப் பார்க்க வேடிக்கையாக இருந்தது அவளுக்கு.

"கூத்தா! இடையாற்றுமங்கலத்தில் எங்கள் மாளிகைக்கும் அக்கரைக்கும் இடையிலுள்ள பறளியாற்றைப் படகில் கடப்பதற்கே எனக்குப் பயமாக இருக்கும். தண்ணீரை மொத்தமாகப் பரப்பாகப் பார்க்கும்போது அவ்வளவு தூரம் பயப்படுவேன் நான். இதோ இந்தப் பெண் கொஞ்சங்கூடப் பயப்படாமல் இவ்வளவு பெரிய கடலில் சிறிய தோணியைச் செலுத்திக் கொண்டு எவ்வளவு உரிமையோடு சிரித்துக் கொண்டே மிதந்து வருகிறாள் பார்த்தாயா? எனக்கு வியப்பாக இருக்கிறது" என்று கப்பலின் தளத்தில் நின்ற பெண் தன் அருகில் இருந்த பெண் முகங்கொண்ட இளைஞனிடம் கூறினாள். தோணியிலிருந்த மதிவதனி அதைக் கேட்டுப் பலமாகச் சிரித்தாள்.

"பெண்ணே! நீ ஏன் சிரிக்கிறாய்?" என்று அந்த இளைஞன் மதிவதனியைப் பார்த்துக் கேட்டான். அந்தக் குரல் அசல் பெண் குரல் போலிருப்பதை எண்ணி வியந்துகொண்டே, "ஒன்றுமில்லை! உங்கள் பக்கத்தில் நின்றுகொண்டிருக்கும் அம்மையார் சற்று முன் உங்களிடம் கூறிய வார்த்தைகளைக் கேட்டேன். சிரிப்பு வந்தது. இவ்வளவு தூரம் தண்ணீருக்குப் பயப்படுகிறவர்கள் கப்பலில் வர எப்படித் துணிந்தார்களென்று எனக்குத் தெரியவில்லை!" என்று பதில் கூறினாள் மதிவதனி.

"அதற்கென்ன செய்வது? எது எதற்கெல்லாம் பயப்படுகிறோமோ, அதை வாழ்வில் செய்யாமலா இருந்து விடுகிறோம்? பயப்படுவது வேறு; வாழ்க்கை வேறு!" என்று சொல்லி விட்டுச் சிரித்தான் இளைஞன். அந்த இளைஞனுடைய உதடுகள் பெண்ணினுடையவை போல் சிவப்பாய்ச் சிறிதாய், அழகாய் இருப்பதை மதிவதனி கவனித்தாள்.

அவர்களுடைய கப்பலுடனேயே தன் தோணியையும் செலுத்திக் கொண்டு கரைக்குத் திரும்பினாள் அவள். அந்தக் கப்பலில் வந்தவர்கள் யார் என்பதை நேயர்கள் இதற்குள் புரிந்து கொண்டிருப்பார்கள். விழிஞத்திலிருந்து புறப்பட்ட நாராயணன் சேந்தனும், குழல்மொழியும் அவர்களிடம் வம்பு செய்து அந்தக் கப்பலிலேயே தனக்கும் இடம் பிடித்துக்கொண்ட கூத்தன் என்னும் வாலிபனும்தான் இப்போது செம்பவழத் தீவைநெருங்கிக் கொண்டிருந்தார்கள். கப்பலை நிறுத்தி விட்டுக் கரையில் இறங்கியதும், "பெண்ணே! உன்னோடு கூட வந்தால் எங்களுக்கு இந்தத் தீவைச் சுற்றிக் காண்பிப்பாய் அல்லவா?" என்று மதிவதனியைப் பார்த்துக் கேட்டான் நாராயணன் சேந்தன். "ஆகட்டும்" என்று புன்னகையோடு பதில் சொன்னாள் மதிவதனி. கப்பலைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளுமாறு ஊழியர்களிடம் சொல்லிவிட்டுச் சேந்தனும் குழல்மொழியும், கூத்தனும், மதிவதனியோடு ஊர் சுற்றிப் பார்க்கக் கிளம்பினார்கள்.

எல்லா இடங்களையும் சுற்றிக் காண்பித்து விட்டு இறுதியாகத் தீவின் கடை வீதிக்கு அவர்களை அழைத்து வந்தாள் மதிவதனி. அணிகலன்களிலும், அலங்காரத்திலும் அதிகம் பிரியமுள்ளவளாகிய குழல்மொழி நவரத்தின நவமணிகளும், பொன்னும், புனைபொருள்களும் விற்கும் ஒரு பெரிய கடைக்குள் எல்லோரையும் அழைத்துக்கொண்டு ஆவலோடு நுழைந்தாள். செம்பவழத் தீவிலேயே பெரிய கடை அது.

சாதரூபம், கிளிச்சிறை, ஆடகம், சாம்பூநதம் என்னும் நால்வகைப் பொன்னும் வயிரம், மரகதம், மாணிக்கம், புருடராகம், வயிடூரியம், நீலம், கோமேதகம், பவழம், முத்து—என்னும் ஒன்பது வகை மணிகளும் நிறைந்திருந்தன அங்கே.

ஆடவர் அணிந்து கொள்ளும் தாழ்வடம், கண்டிகை, சுரி, பொற்பூ, கைக்காறை, திருப்பட்டிகை, குதம்பை, திருக்கம்பி, கற்காறை, சுருக்கின வீரபட்டம், திருக்குதம்பைத் தகடு, திரள்மணி வடம் ஆகியவைகள் ஒரு புறம் இலங்கின. பெண்கள் அணிந்து கொள்ளும் திருக்கைக்காறை, மோதிரம், பட்டைக்காறை, தாலி, திருக்கம்பி, திருமகுடம், வாளி, உழுத்து, சூடகம், திருமாலை, வாகுவலயம், திருக்கைப் பொட்டு, பொன்னரிமாலை, மேகலை ஆகியவை மற்றோர்புறம் இலங்கின.

வயிரத்தின் பன்னிரு குற்றமும், ஐந்து குணமும், மரகதத்தின் எட்டுக் குற்றமும் எட்டுக் குணமும், மாணிக்கத்தின் பதினாறு குற்றமும், பன்னிரு குணமும், நீலத்தின் எட்டுக் குற்றமும் பதினொரு குணமும், முத்துக்களின் இரண்டு குணமும் நான்கு குற்றமும் தெரிந்து சொல்லவல்ல இரத்தினப் பரிசோதக வித்தகர்கள் அங்கு நிறைந்

✲ அருள் வாக்கு ✲

தென் அமெரிக்காவிலுள்ள மெக்ஸிகோ என்னும் தேசத்தில் ஒரு உத்சவம் நடக்கிறது. அதற்கு ராம சீதா என்று பெயர். அங்கே வெட்டு மிடங்களில் எல்லாம் பிள்ளையார் விக்ரகங்கள் அகப்படுகின்றன. பெரு என்னும் தேசத்தில் எல்லோரும் சூரியனைத் தெய்வமாக வழிபடுகின்றனர். சித்திரை மாதம் அவர்களுடைய உத்சவம் நடைபெறுகிறது. அவர்களுடைய பெயர் இன்காஸ் என்று இப்பொழுது வழங்குகிறது. இனன் என்பது சூரியனுடைய பெயர். அதிலிருந்து அவர்கள் இப்பெயரை அடைந்தனர்.

—ஸ்ரீ சங்கராச்சாரியார், காஞ்சி காமகோடி பீடம்



" அன்னதானம் செய்யப்போகிறோம். உங்கள் உதவியும் தேவை !"

" நான் அவசியம் வந்து சாப்பாட்டில் கலந்து கொள்கிறேன்."

"அதைத் தவிர...?"

" வீட்டுக்கும் காரியரில் சாப்பாடும் எடுத்துப் போகிறேன் !"

டிருந்தனர். குழல்மொழி அந்தக் கடையில் அவ்வளவு நின்று நிதானித்து ஒவ்வொரு பகுதியாகச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தது சேந்தனுக்குப் பிடிக்கவில்லை. வெறுப்போடு முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டு ஒரு மூலையில் ஒதுங்கி நின்று விட்டான் அவன். மதிவதனியும், குழல்மொழியும், கூத்தனும் சுற்றிப் பார்த்து விட்டு நாராயணன் சேந்தன் நின்று கொண்டிருந்த மூலைக்குத் திரும்பி வந்தனர்.

" இந்த மாபெரும் செல்வக் களஞ்சியம் போன்ற கடையைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் ?" என்று சேந்தனை நோக்கிக் கேட்டாள் குழல்மொழி.

" பெண்களின் நகை ஆசையால் உலகம் எப்படிக் குட்டிச்சுவராய்ப் போய்க் கொண்டிருக்கிறதென்று நினைக்கிறேன். இவைகளால் ஏழைகளாகப் போனவர்களின் தொகையை நினைக்கிறேன் " என்று சேந்தன் கடுகடுப்போடு பதில் சொன்னான். அவனுடைய முரட்டுத்தனமான பதிலைக் கேட்டுக் கூத்தன் உட்பட மற்ற மூவரும் முகத்தைச் சுளித்தார்கள்.

" அம்மணீ ! நீங்கள் ஏன் முகத்தைச் சுளிக்கிறீர்கள்? சிலபேர்கள் தங்களுக்குக் கிடைக்காத பொருள்களைக் கிடைக்கவில்லையே என்பதற்காகக் கிடைக்கிறவரை வெறுத்துக் கொண்டிருப்பார்கள். இந்த மனிதர் கூறிய கடுமையான பதிலிலிருந்து இவர் திருமணமாகாதவரென்று நினைக்கிறேன் !" என்று அந்தக் கடையின் வணிகர் சேந்தனைக் கேலி செய்தார். சேந்தன் அவரை வெறுப்போடு பார்த்தான்.

" சகோதரீ ! நம் ஐயாவுக்கு நகை என்றால் ஏன் இவ்வளவு வெறுப்போ? தெரியவில்லையே ?" என்று குழல்மொழியிடம் நாராயணன் சேந்தனைக் குறிப்பிட்டு நகைத்துக் கொண்டே கேட்டான் கூத்தன்.

அவனை அடிப்பதற்குக் கையை ஓங்கிக் கொண்டு பாய்ந்து விட்டான் சேந்தன். அவனைச் சமாதானப் படுத்துவதற்குள் மதிவதனிக்கும் குழல்மொழிக்கும் போதும் போதும் என்றாகி விட்டது. கடை வீதியில் தங்களுடைய கடைக்கும் அவர்களைக் கூட்டிக்கொண்டு போய்க் காண்பித்தாள் மதிவதனி.

" ஐயா ! பெண்கள்தான் ஆடம்பரத்துக்காகக் கைமீறிச் செலவு செய்வார்கள் என்று நீங்கள் தவறாகக் கருதுவதாகத் தெரிகிறது. அது தவறு. உதாரணமாக நான் ஒன்று சொல்லுகிறேன், கேளுங்கள். சில தினங்களுக்கு முன் செல்வச் செழிப்புள்ள அழகிய இளைஞர் ஒருவர் ஒரு முதியவரோடு இலங்கைக்குப் போகிற வழியில் கப்பலை நிறுத்தி இந்தத் தீவில் இறங்கியிருந்தார். எங்கள் கடையில் வந்து ஆயிரம் பொற்கழஞ்சுகள் விலைமதிப்புள்ள ஒரு வலம்புரிச் சங்கை வீண் பெருமையைக் காட்டுவதற்காக இரண்டாயிரம் பொற்கழஞ்சுகளைக் கொடுத்து வாங்கிக்கொண்டுபோனார். இப்போதாவது ஒப்புக் கொள்ளுங்கள். ஆடவர்களிலும் கை மீறிய செலவு செய்பவர்கள் இருக்கிறார்கள்" என்று அந்த மூவரையும் கப்பலில் கொண்டு போய் விடுவதற்காகத் திரும்பிச் சென்றபோது மதிவதனி சேந்தனிடம் ஒரு பேச்சுக்காகச் சொன்னாள். உடனே, " அந்த இளைஞர் எப்படியிருந்தார்? அவரை நீ பார்த்ததிலிருந்து ஏதாவது அடையாளம் கூற முடியுமா, பெண்ணே ?" என்று மூன்று பேருமாக மதிவதனியைத் துளைத்தெடுத்து விட்டார்கள். அவர்களிடம் அதை ஏன் கூறினோம் என்றாகி விட்டது அவளுக்கு.

" ஐயா! எனக்கு அவருடைய அடையாளம் ஒன்றும் நினைவில்லை. சும்மா பார்த்த நினைவுதான் " என்று கூறி மழுப்பி விட்டு அதற்குமேல் அவர்களோடு தங்கியிருக்க விரும்பாமல் விடைபெற்றுக் கொண்டு வீட்டுக்குப் போய் விட்டாள் அவள். மறுநாள் காலை அவள் கடற்கரைக்கு வந்த போது புறப்படத் தயாராயிருந்த கப்பலிலிருந்து முன்குடுமிக்காரர் மீண்டும் அவளைத் தூண்டிக் கேட்டார். அவள் தனக்குத் தெரியாதென்று கூறி விட்டாள். (தொடரும்)


அழகுமிக்க தோற்றம்
மெல்லிய சருமத்திற்கு சமனூட்டவும்,
மிருதுவாகவும் வெண்மையாகவும் திகழச்
செய்வதற்கு ஒரு ஸ்னோ அவசியம். அதுதான்
"'ஹாஸலின்' ஸ்னோ". உஷ்ணப்
பிரதேசங்களுக்கென தனி முறையில் தயாரிக்கப்
பட்டது "'ஹாஸலின்' ஸ்னோ"
குளுமையுடன் சுகம் தருகிறது. ஏமாற்றம்
செய்ய முடியாத இதன் பாக்கிங் ஒன்றே
இதன் தூய்மைக்கு உத்தரவாதம்.
"'HAZELINE' SNOW"
"'ஹாஸலின்' ஸ்னோ"
டிரேட் மார்க்
ஒரு பர்ரோஸ் வெல்கம் தயாரிப்பு
BWY-6



பாண்டித் தேவன்

காந்தன்

படத்தின் பெயரைப் பார்த்ததும் ஏதோ சரித்திரக் கதை என்றுதான் நினைத்தேன். அனேகமாக எல்லாருமே இப்படி நினைத்திருந்தால் அதில் அதிசயம் ஒன்றுமில்லை.

ஆனால் சரித்திரத்துக்கும் "பாண்டித்தேவன்" திரைக் கதைக்கும் என்னளவும் சம்பந்தம் இல்லை. சாதாரணமாக, கதாநாயகன் அல்லது கதாநாயகியின் பெயரைத்தான் படத்தின் பெயராக வைப்பது வழக்கம். ஆனால், கதாநாயகனின் தகப்பன் பெயர்தான் இந்தப் படத்தின் பெயராக வைக்கப்பட்டிருக்கிறது. அது குறிப்பிடத்தக்க ஒரு மாறுதல்தானே?

சமீபகாலத்தில் அடுத்தடுத்து வெளிவந்திருக்கும் தமிழ்ப் படங்களின் திரைக்கதைகள் அனேகமாக ஒரே மாதிரியாக இருந்து வந்திருக்கின்றன.


காதல் — அதற்கு ஒரு போட்டி, போட்டியின் காரணமாகப் பொறாமை, பொறாமையின் விளைவாக ஒருவர் சாதல்; வீரம் — அதை எதிர்த்துப் பல கயவர்களின் சூழ்ச்சி. கடைசியில் அதர்மத்தின் வீழ்ச்சி; இப்படி மாறி மாறி வரும் பழைய விஷயங்கள்தான் மறுபடியும் மறுபடியும் திரைக்கதையின் ஆதாரமாக இருந்து வந்தன. படம் பார்ப்பவர்கள் யாருமே திரைக்கதையில் ஒரு திருப்பத்தை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த தருணத்தில் "பாண்டித்தேவன்" வெளிவந்திருக்கிறது.

பழைய ஜமீன்தார் — திவான் கதைதான் என்றாலும் அணைத் திட்டங்களை அடிப்படையாகக் கொண்டுவிட்ட காரணத்தால், கதையில் ஒரு மாறுதல் இருக்கிறது. தமிழ்ப் படங்களில் மாற்றம் காண விரும்பினால் பொதுவாக ஏமாற்றம்தான் கிடைக்கும் என்று திடமாக நம்பலாம். ஆனால் "பாண்டித்தேவன்" கதையில் அந்த ஏமாற்றம் இல்லை.

தமிழ்ப் படங்களின் பிரபல டைரக்டரான கே. சுப்ரமணியம் இந்தக் கதையை எழுதியிருக்கிறார்.

அணைக்கட்டு வேலைகள் நடக்கும் இடங்களில் பொதுவாக நடமாடும் பதுக்கல், மோசடி, சூழ்ச்சி முதலியவைகளையெல்லாம் மனத்தில் கொண்டு புனையப்பட்டிருக்கும் இந்தக் கதை, திரைப்படத்தின் உத்திகளையும் நிறையத் தாங்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே, இது திட்டங்களைப்பற்றிய வெறும் பிரசாரப் படமல்ல.

கன்னியூர்ப் பகுதியில் தேனாறு அணைக்கட்டுத் திட்டம் உருவாவதற்குப் பெருவாரியான நிலங்கள் அரசாங்கத்தினால் கோரப்படுகின்றன. நிலங்களை இழக்காமல் இருக்கவும், அணைக்கட்டு வேலையைக் காண்டிராக்ட் எடுத்துப் பணம் சுரண்டவும் ஜமீன்தார்கள் திட்டமிடுகிறார்கள். கன்னியூர் சமஸ்தானத்தின் மாஜி திவான் மார்த்தாண்டன் இவர்கள் தலைவன். பழைய என்ஜினீயர் இவர்களுடைய சூழ்ச்சிகளுக்கு உதவியாயிருக்கிறான். பழைய மகாராஜா சந்திரசேகர பூபதியின் பரம்பரை டபேதார் பாண்டித்தேவன். அவன் மகன் ரத்தினவேலு மேல்நாடு சென்று திரும்பியவன். புதிய என்ஜினீயராக அரசாங்கத்தால் நியமிக்கப்படுகிறான். அவன் நேர்மை தவறாதவன். சூழ்ச்சிகள்



எதுவும் அவனிடம் பலிக்கவில்லை. சிறு வயது முதல் ரத்தினவேலுவுடன் பழகிய ஏழைத் தொழிலாளி மகள் மீனு அவனை மனமாரக் காதலிக்கிருள். பழைய மகாராஜாவின் மகள் நீலாவும் அவனைக் காதலிக்கிருள். மீனுவுக்காக நீலா தன் காதலை விட்டுக் கொடுத்து அவர்கள் இன்ப வாழ்வுக்காக உயிர்த் தியாகமே புரிகிருள்.

டபேதார் பாண்டித்தேவனாக வரும் எம். ஜி. சக்கரபாணி மிகவும் பொருத்தமாக நடிக்கிருர். அந்தப் பாத்திரத்துக்குக் கதையில் அதிக முக்கியத்துவம் இல்லை. கடைசியில் பழைய மகாராஜா தம் சொத்து அவ்வளவையும் அவனுக்கு எழுதி வைத்து விடுகிருர். படாதிபதி படத்தின் தலைப்பையே அவனுடைய தாக்கி யிருக்கிருர்!

ஏழைப் பெண் மீனுவின் தம்பி மருதுவாக வரும் சிறுவன் சதிகாரர்கள் கையில் சிக்கியும் அஞ்சாமல் அவர்கள் சதிச் செயல்களைக் கடைசிவரையில் நிறைவேற வொட்டாமல் செய்கிருன். அந்தக் காட்சிகள் நன்று யிருக்கின்றன.

ஆயினும் அவனது நடிப்பு நன்ருய்ச் சோபிக்கவில்லை. சாதாரணமாகப் பல படங்களையும் போல் இந்தப் பையன் பாகத்தைப் பிரகாசமாய்ச் செய்ய முயற்சி நடந்திருக்கிறது. ஆனல் ஏனே அம் முயற்சி பலனளிக்கவில்லை.

மீனுவாக வரும் பி. எஸ். சரோஜா நன்கு நடிக்கக் கூடியவர்தான். என்ருலும் "பாண்டித்தேவ"னில் மிகவும் சோர்வாகக் காணப்படுகிருர். "புதுமைப் பித்தன்" படத்தில் இவர் அரண்மனை வைத்தியர் மகள் வேல்விழியாக வந்தது இன்னும் நினைவில் இருக்கிறது. இந்தப் படத்தில் இவர் நடிப்பு நினைவில் வைத்துக் கொள்ளும் அளவுக்கு இல்லை.

லாரி டிரைவராக வரும் கருப்பையாவின் பாகத்தைச் சந்திரபாபு ஏற்று மிகவும் திறமையாக நடிக்கிருர். படத்தில் ஹாஸ்யப் பகுதிக்கும் அது பெரிய உதவி புரிகிறது. படத்தின் கடைசிப் பகுதி வரையில் அவர் ஹாஸ்ய நடிப்பு கதையோடு கலந்து மிளிர்கிறது. விஜயரகுநாத பூபதியாக நடித்தபோது சந்திரபாபுவின் நடிப்பு நடனம் கலந்த அமர்க்களம்தான்!

மார்த்தாண்டனின் காதலி எலிசாவும் என்ஜினியருக்குப் பலவிதத்தில் உதவி புரிகிருள். நடனமும் ஆடுகிருள். ராகினிக்கு அந்தப் பாகம் மிகவும் பொருத்தமாக அமைந்திருக்கிறது.

என்ஜினீர் ரத்தினவேலுவாக வரும் டி. கே. பாலசந்திரனுக்கு அதிக வேலையில்லை. நீலாவைக் காதலிக்கிருர்; கடமை உணர்ச்சியில் எதையும் மறக்கிருர். கடைசியில் மீனுவை மணக்கிருர்.

இந்தப் படத்தில் நன்ருய் நடித்திருப்பவர்கள் வரிசையில் என். எஸ். கே. மதுரத்தைக் குறிப்பிட வேண்டும். பார்வையை இழந்த ஏழைப்பாட்டியாக வரும் அவர் நடிப்பு மிகவும் இயல்பா யிருக்கிறது. படவுலகில் பழுத்த அநுபவமும், நடிப்பில் ஆர்வமும் இருப்பதால்தான் அவரால் அவ்வளவு இயல்பாக நடிக்க முடிகிறது.

ராஜ சுலோசனு நீலாவாக நன்ருக நடித்திருக்கிருர். கடைசியில் உயிர்த்தியாகம் புரிகிற வரையில் அவருக்கு இந்தப் படத்தில் நிறைய வேலை இருக்கிறது.

"பாண்டித்தேவன்" கதை, வசனம் ஆகியவற்றின் பொறுப்பை டைரக்டர் கே. சுப்ரமண்யம் ஏற்றிருப்பதுடன் படத்தைப் பாராட்டத்தக்க முறையில் டைரக்ஷனும் செய்திருக்கிருர்.


அணைக்கட்டு, தொழிலாளர்கள் கல் உடைக்கும் காட்சி, வெள்ளப் பிரவாகம், பாம்புப் பாதையில் வளைந்து நெளிந்து செல்லும் லாரி முதலியவைகளெல்லாம் அற்புதமாகப் படமாக்கப் பட்டிருக்கின்றன. சினிமா உலகில் இருபத்தைந்து ஆண்டுகளாகப் பணியாற்றி வரும் டைரக்டர் கே. சுப்ரமண்யத்துக்குப் பெருமையளிக்கும் விதத்தில் படம் உருவாகி யிருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விஷயம்.




ஆனல் படம் ஒரே வேகத்தில் செல்லாமல் பல இடங்களில் தங்கித் தங்கிச் செல்லுகிறது.

இந்தப் படத்தின் குறைகளைக் கவனிக்க முடியாதபடி புரவி நடனம், கிராமிய நடனம் முதலிய பலவித நடனங்கள் புகுத்தப்பட்டிருக்கின்றன.

படத்தில், பத்துப் பாடல்கள் பலரால் பாடப்பட்டிருக்கின்றன என்று எதுகை, மோனை எழிலுடன் எடுத்து எழுதுவதைத் தவிரப் பாடல்களைப்பற்றி வேறு ஒன்றும் அறியேன் பராபரமே!







B-COMPLEX



B-COMPLEX
FORTE

நாட்டு வைத்தியம்

ஸ்ரீஹரி

95. யானைக்கால்......

யானைக்கால் பெருங்கால். அல்ல அல்ல லிம்ஃஆன்ஜைடிஸ்-பைலேரியாஸிஸ் என்பது போன்ற நாமகரணங்கள் செய்வது "உழக்கிலே-கிழக்கு மேற்கு" பார்ப்பது போலத்தான். 'ரத்தத்தில் குறிப்பிட்ட கிருமி காணக் கிடைக்கவில்லை. ஜுரமில்லாமல் வெறும் நரம்புத் தடிப்பும் - வீக்கமும் மட்டும் ஏற்படுமானால் அதை எப்படி யானைக்கால் ஜுரம் என்பது?' என்றெல்லாம் விண்வாதம் புரிவதில் அர்த்தமே இல்லை. வியாதியைக் குணப்படுத்தக் கூடிய நிலையில் செய்ய வேண்டியதைச் செய்யாமல் கைநழுவ விட்டதுதான் இவ்வித வறட்டு வாதத்தால் கண்ட பலன் என்ற கதையாகி விடும்.

ரத்தப் பரிசோதனையில் குறிப்பிட்ட கிருமி காணக் கிடைக்குமானால்......? வீரம் - பாஷாணம் போன்ற சரக்குகள் சேரும். (ஆர்ஸினோ டைடாய்டு-அல்லது அஸடில் ஆர்ஸான் போன்ற) மருந்துகளைத்தான் மேல்நாட்டு வைத்திய முறைப்படி உபயோகிப்பர். பிறகு இந்த வேண்டாதவிஷத்தை உடலில் ஏற்றதால் ஏற்படும் தொல்லைகளுக்கு என்ன செய்வது? இவ்வித தொல்லைகள் யாரோ ஒருவருக்குத் தானே ஏற்படுகிறது? பெருவாரியான வருக்குக் குணந்தான் ஏற்படுகிறது. தோஷம் எதுவும் ஏற்படுவதில்லை என்று சிலர் சொல்லலாம். இவர்களைப் போன்ற வேறு சிலர் மகாமேதைகள்என்று மேல் நாட்டில்அழைக்கப்படும் நிபுணர்கள் 'ஆர்ஸெனிக்' என்னும் பாஷாணப் பொருளை அறிவும் அனுபவமும் உள்ள வைத்தியர்கள் சீண்டவும் நடுங்குகின்றனர் என்று சொல்கிறார்கள். இப்படியாக இவர்களுக்குள்ளாகவே அபிப்பிராய பேதம் உள்ளபோது பாமரனை நோயாளி என்ன செய்வதென்று தெரியாமல் திகைப்படைகிறான்.

"ஹெட்ரஸான் மாத்திரை இருக்கிறதே! சஞ்சீவி போல் இந்த நோயில் பலனளிக்கிறதே!" என்று ஒரு சிலர் சொல்லலாம். இவர் கட்சியில் சேர்ந்தவரில் வேறு சிலர் "உம்......ச்சு" என்று சப்புக் கொட்டி விட்டு, "அந்த 'தியரி' எல்லாம் இப்போது மாறிப் போய் விட்டது, சார்! ஹெட்ரஸான் சில வகைக் குடற் கிருமிகள்-ஊனிநோனைப் முதலிய இடங்களில்தான் பயன் தருகிறதாக இப்போதெல்லாம் கொடுத்து வருகிறோம்" என்று முடிக்கிறார்கள். இந்நிலையில் பாமரனின் பரிதவிப்பை என்ன வென்பது?

பாமரனுக்கு வைத்தியத்தைப் பற்றிய விசாரம் எதற்கு? ஏதோ தனக்குள்ள வியாதியைச் சொல்லிக் கொண்டு டாக்டரிடம் போக வேண்டியது. அவர் கொடுத்த மருந்தைச் சாப்பிட வேண்டியது. மற்றைய விவரங்களில் மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொள்ளக் கூடாது என்கிறீர்களா? அப்படிச் சொன்னால் ஒப்புக்கொள்ளும் காலம் மலையேறி விட்டது. தொட்டிலில் படுத்திருக்கும் குழந்தை தனக்குத் தாலாட்டுப் பாடும் தன் பாட்டியின் பாட்டில் சுருதி இல்லை, தாளம் இல்லை என்றுசொல்லுகிறது. அவ்வளவுக்கு அறிவும் விழிப்பும் ஏற்பட்டுள்ள இக்காலத்தில் மேற்சொன்ன போக்கை ஏற்க மாட்டார்கள். மேலும், ஒரு நோயாளி டாக்டரிடம் எதிர்பார்ப்பது என்ன? வைத்தியமல்ல. மருந்தல்ல.



வாத்தியார்:—ஏண்டா அழறே...?

பையன்:—போங்க ஸார்! அவனுக்கு மட்டும் இரண்டு சைபர் போட்டீர்கள்; எனக்கு மட்டும் ஒரே ஒரு சைபர்தானு ஸார்?

தான் படும் கஷ்டங்களை அனுதாபத்துடன் கேட்கும் யாராவது ஒருவனிடம் சொல்லி மனத்துக்கு ஆறுதல் பெற விரும்புகிறான் ஒரு நோயாளி. இதைத் தான் அவன் டாக்டரிடம் எதிர் பார்ப்பது. இதற்குத் தனக்கு அவகாசமோ, பொறுமையோ இல்லை என்று சீறி விழும் புண்யாத்மாக்களின் கடமை உணர்ச்சிக் குறைவையும் பண்புக் குறைவையும் என்னென்று சொல்வது?

"சேஷம் கோபேன பூரயேத்" என்று வடமொழியில் ஒரு பழமொழி. பதில் சொல்ல முடியாத நிலைமை ஏற்படும் போது கோபமூண்டு 'தட்புட்' என்று வாயடி கையடி அடித்து எதிராளியின் வாயையும் அடைத்துவிடு என்பதுதான் இந்தப் பழமொழியின் கருத்து. இதை நன்கறிந்து பழக்கத்தில் கொண்டு வந்து பல்காலும் வெற்றி கண்டவர் வேணுமானால் மேலே சொன்னவிதம் அப்பாவியான பாமர நோயாளியின் வாயை அடைக்க முயலலாம். ஒருகால் ஓரிரண்டு சந்தர்ப்பங்களில் இவர் எதிர்பார்த்த விதமே வெற்றியும் காண நேரிடலாம். ஆனாலும், இவ்விதப் போக்கு விரைவில் மலையேற வேண்டியதுதான். அனேகமாக அக்காலம் வந்தாயிற்று என்றே சொல்லலாம். எப்படியானாலும் பாமரர் என்பவர் இப்போது யாருமில்லை. 'இது என்ன வியாதி? இது ஏன் அதுவாயிருக்கக்கூடாது? இதற்கென்ன சிகிச்சை? இம்மருந்தில் என்னென்ன சரக்குகள் சேருகின்றன? இவை எப்படி இவ்வியாதியைப் போக்கும்? என்றெல்லாம் கேட்பது சர்வ சாதாரணமாகி விட்டது. ஆகவேதான் பாமரனின் குழப்பத்தைச் சொல்லி - அதை உண்டாக்குதல் பெருந் தவறு என்றும் கூறினேன்.

வியாதிக்குக் காரணமான கிருமியை ரத்தத்தில் காணும் வரையில் இதை யானைக்கால் என்று ஒப்புக் கொள்வதில்லை. அவ்விதம் கண்ட பிறகோ...? ஒருகால் அக்கிருமி உடலில் வந்து புகுந்தால் அதோடு சரிதான். வியாதியை வேரறுப்பதென்பது அசாத்தியம் என்று முடிவாகத் தெரிவித்து விடுகின்றனர். இதற்குமேல் என்ன சொல்ல விருக்கிறது? சரி, நாட்டுவைத்தியத்தில் உள்ள சிகிச்சையைக் கவனிக்கலாம்.

நாட்டுவைத்தியத்தைப் பற்றின வரையில், யானைக்கால், பெருங்கால் - எலிபண்டியாஸிஸ், பைலேரியாஸிஸ், லிம்ஃப் ஆன்ஜைடிஸ் என்ற எந்தப் பெயரிட்டு அழைத்தாலும் சரி-சிகிச்சை என்னவோ அடிப்படைத் தத்துவத்தில் ஒரே விதந்தான். நோயாளியின் சரீரக்கூறு, வியாதியின் பேதம் - நிலை. ஆகியவற்றை உத்தேசித்து மருந்துகளின் உருவத்திலும் அவற்றை உபயோகிக்கும் வகையிலும் வித்தியாசங்கள் இருக்கலாம்.

ரத்தப் பரிசோதனை, அதில் குறிப்பிட்ட கிருமியைக் காண்பது என்ற பாகுபாடு கிடையாது. ரத்தப் பரிசோதனை செய்வோரும் 'கிருமிகளைக் காண நேரிடவில்லை' என்கிறார்களே தவிர, 'கிருமிகள் ரத்தத்தில் இல்லை' என்று சொல்வதே இல்லை. இது எதனால்? கிருமிகள் ஒருகால் ரத்தத்தில் இருந்தாலும் இருக்கக் கூடும். பரிசோதனைக் காலத்தில் காணக் கிடைக்கவில்லை. இந்த நிச்சயிக்க முடியாத பரீட்சையால் என்ன பயன்?

சரீரத்தின் நிலையிலுள்ள ஏற்றத் தாழ்வுகளைச் சரிக்கட்டலாம். கிருமி இருக்குமானால் அது ஒழியட்டும். அல்லது தனது செயலாற்றும் திறனையிழந்து செத்த பாம்பாகத் திரட்டும். இல்லாவிட்டால், கிருமிகள் புகவோ - சூழ்நிலை சௌகர்யத்தைப் பற்றிச் சரீரத்தில் நிலை பெறவோ வாய்ப்பளிக்காத தரத்துக்குச் சரீரத்தின் ஸ்திதியை மாற்றி விடலாம். இதுதான் நாட்டு வைத்திய சிகிச்சையின் அடிப்படைத் தத்துவம். (தொடரும்)

B·O·A·C COMET 4 JETLINER



பி.ஓ.ஏ.ஸி. காமட் 4 ஜெட் லைனர்
ஐரோப்பாவுக்கும், தூரகிழக்கு நாடுகளுக்கும் : ஏப்ரல் மாதத்தில் இந்தியாவிற்கு விஜயம் செய்கிறது

இப்பொழுதே உங்கள் பிரயாணத்திற்கு வேண்டிய டிக்கட்டுகளை புக் செய்யுங்கள். எங்கு செல்ல வேண்டுமெனத் திட்டமிட்டாலும், பி.ஓ.ஏ.ஸி. ஜெட்லைனர்கள் உங்களுக்காக காத்திருக்கின்றன. ஏப்ரல் மாதம் முதல் பி.ஓ.ஏ.ஸி. காமட் 4 விமானங்கள், இந்தியாவிலிருந்து இங்கிலாந்து ஐரோப்பா, மற்றும் தூரகிழக்கு நாடுகளுக்கும் பறந்து செல்லும். வாயு வேகமுள்ள ஜெட்—ப்ராப் பிரிட்டானியா விமானங்கள் முக்கியமான ஆகாய மார்க்கங்களில் ஏற்கெனவே பறந்து சென்று கொண்டிருக்கின்றன. ஜெட் லைனர் மூலம் ஒவ்வொரு கண்டத்திற்கும் பிரயாணம் செய்ய பி.ஓ.ஏ.ஸி.யானால்தான் பறந்து செல்ல இயலுகிறது

நேர்த்தியான ஜெட் லைனர்களுக்கும், அருமையான சர்விஸுக்கும் பி.ஓ.ஏ.ஸி. விமானங்களில் பறந்து செல்லுங்கள். பி.ஓ.ஏ.ஸி.யால் நியமிக்கப்பட்ட உங்கள் உள்ளூர் ஏஜெண்டையோ அல்லது பி.ஓ.ஏ.ஸி. பம்பாய், கல்கத்தா, டில்லி, மதராஸ் இவர்களையோ விசாரித்து விவரமறிந்து கொள்ளுங்கள்

உலக முழுவதிலும் பி.ஓ.ஏ.ஸி.

B·O·A·C

உங்கள் நலனைப் பேணுகிறது

பிரிட்டிஷ் ஓவர்ஸீஸ் ஏர்வேய்ஸ் கார்பரேஷன்



இதயத்திலே ஒரு கீறல்

இள நீல வண்ணக் கலவை பூசிய எதிர்ச் சுவரைப் பார்த்தபடியே வெகு நேரம் நின்றான் வாசு. அவன் பிஞ்சு விரல்கள் அவனையும் அறியாமல் அச் சுவரை ஒரு முறை தடவிப் பார்த்தன. "அப்பா! வழ வழ என்று என்னமாய்த் தான் இருக்கிறது! பள்ளிக்கூடத்திலே இருக்கிற போர்டு கூட இத்தனை வழவழப்பா யில்லையே!" என்று வாய் விட்டுச் சொல்லி மகிழ்ந்தான் அவன்.

அவனது குறுகுறுக்க கண்கள் அந்த அறை முழுவதையும் சுற்றி வளைத்து ஒரு முறை நோட்டம் பார்த்தன. அவன் கைக்கு எட்டாத உயரத்தில் சுவர்களில் அழகும் கலையுணர்வும் ததும்பக் காட்சி தந்த படங்கள் அவன் பிஞ்சு நெஞ்சைத் தீண்டவில்லை. அறை மத்தியில் வண்ண மலர்க் கொத்தைத் தாங்கியிருந்த கிண்ணமும் அதை நிறுத்தியிருந்த வட்ட மேஜையும் அவன் பரபரப்புக்குக் குறுக்காகவே இருந்தன. 'மெத்'தென்ற சோபாக்களும் நாற்காலிகளும் அவன் துள்ளி ஓடுவதற்கு இடையூறாகத் தெரிந்தன. சாளரத்தின் ஓரமாக நின்ற ரேடியோப் பெட்டியும், 'டிக் டிக்' என்று ஒலி செய்யும் சுவர்க் கடிகாரமும் அவன் கவனத்தைக் கவரவில்லை. கண்ணெதிரே தெரிந்ததையெல்லாம் பார்த்து அந்த இள மனம் தொலைதூரம் சென்று விட்டது, எதையோ தேடி. "ஒரு சாக்கட்டி கிடைத்தால் இத்தனை பெரிய போர்டிலே எத்தனை பெரிய 'அ'னா எழுதலாம்?"

இந்த எண்ணம் அவனது பிஞ்சுக் கால்களைத் துள்ள வைத்தது. அந்தப் புதிய வீட்டின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் அந்த இளம் கால்கள் இழுத்துச் சென்றன அவனை. வண்ணமும் ஒளியுமாய்த்தான் கட்டியிருக்கிறார்கள் வீட்டை. என்னென்னவோ பொருள்களைத் தான் வாங்கி வந்து அறைக்கு அறை கச்சிதமாக அலங்கரித்திருக்கிறார்கள். ஆனால் அத்தனை அழகான வீட்டிலே ஒரு சின்னச் சாக்கட்டி கிடைக்கவில்லையே வாசுவுக்கு.

வாசு சுற்றிச் சுற்றிப் பார்த்து அலுத்துப் போய்ப் பின்கட்டில் இருந்த கிணற்றங் கரைக்கும் போய் விட்டான். கிணற்றங்கரை எதிரே குளியல் அறை. அடுத்தாற் போல், கரி, வறட்டி போன்ற சாமான்கள் போட்டு வைக்கும் அறை. அந்த அறை வாசலில் விழுந்திருந்த ஒரு கரித்துண்டு வாசுவின் கவனத்தைக் கவர்ந்தது. துள்ளிக் குதித்தான் அவன். அடுத்த விநாடியே வாசுவின் கை ஆவலோடு அந்தக் கரித் துண்டைக் கவ்விக் கொண்டது. வாசுவின் கால்களிலும் உள்ளத்திலும் தான் என்ன துள்ளல்!

கரித்துண்டும் கையுமாக முன்னறைக்குத் திரும்பினான் அவன். ஒருமுறை அந்தச் சுவரை ஆவலோடு தடவிப் பார்த்தான். 'அ'னா 'ஆ'வன்னா என்று உரக்கக் குரல் எழுப்பிய வண்ணம் கை போனபோக்கில் அவன் கரிக்கோலம் தீட்டலானான்.

ஐந்து நிரம்பி ஆறும் பிராயத்தில் அடியெடுத்து வைத்த குழந்தை. பத்து நாட்களுக்கு முன்புதான் பள்ளிக்கூடம் போட்டார்கள் அவனை. இன்னும் 'அனா ஆவன்னா' கூடச் சரியாக எழுத வரவில்லை. ஆனால் அதற்குள்ளாகவே அந்த எழுத்துக்களை எழுதிப் பார்ப்பதில்தான் எத்தனை ஆவல் அவனுக்கு?

எழுத்துக்கள் தானா அவன் கையிலிருந்து அந்த நீலச் சுவரில் உருப் பெறுகின்றன! வெறும் கிறல்கள்! அந்தக் கிறல்களைத் தீட்டியே குதூகலம்கொள்கிறான் குழந்தை.

அவன உலகமே தனி. அந்த உலகத்தில் அந்தப் புதுச் சுவரின் இள நீல வண்ணப் பூச்சுக்கு அவன் அளித்த மதிப்பே வேறுதான். அந்த வழவழப்பான சுவரில் அவன் கைப் பிடித்த கரித் துண்டின் கிறல்கள் தான் எத்தகைய எழிலோவியமாகக் காட்சியளித்தன, அவன் கண்களுக்கு!

மனம் போனபடி, கைபோனபடி கிறுக்கி விட்டுத் தன் சாதனையைப் பெருமிதத்துடன் பார்த்துக் கொண்டு நின்றான் வாசு.

"ஐயையோ! சுவரைப் பாழாக்கி விட்டானே வாசு! வர்ணப் பூச்சுக் கொடுத்து இன்னும் நாலு நாட்கள் கூட ஆகவில்லையே!" அப்போதுதான் அவள் தன் தங்கை கோமளத்துடன் அந்தப் பக்கம் வந்தாள், தனது புது வீட்டைத் தங்கைக்குச் சுற்றிக் காட்டிவிட்டு.

"என்ன பண்ணி விட்டான், அக்கா? கையையும் காலையும் வைத்துக்கொண்டு ஒரு நிமிஷம் சும்மா இருக்க மாட்டானே அவன்?" என்ற பதற்றத்துடன் பேசியபடியே கனகத்தின் பின்னால் வந்த கோமளத்துக்குத் தன் மகன் செய்த காரியத்தைப் பார்த்ததுமே பற்றிக் கொண்டு வந்தது.

"அட... படுபாவி! புதுச் சுவரைப் பாழ் செய்து விட்டாயே! இதற்குத்தானே இந்தப் பிடைகளை அழைத்துக் கொண்டு ஒரு இடத்துக்கு வரக் கூடாது என்றிருந்தேன்" என்று ஆத்திரத்துடன் பேசியவாறே வாசுவின் கையைத் 'தரதர'வென்று பிடித்திழுத்து அவன் முதுகில் பேயறைவது போல் ஓர் அறை விட்டாள் கோமளம்.

"ஐயையோ! 'அ'னாத்தானே எழுதினேன், அம்மா!" என்று கூக்குரலிட்டபடியே சுருண்டு போய் உட்கார்ந்து விட்டான் குழந்தை வாசு.

பி.எம்.கண்ணன்





அப்படியே அவள் கையைப் பிடித்து உள்ளே இழுத்துக் கொண்டு வேகமாகப் போய் விட்டாள் கோமளம் ஆங்காரத்துடன்.

கனகம் கல்லாய்ச் சமைந்து போய் நின்று விட்டாள். குழந்தை வாசுவைத் தன் தங்கை அப்படி அடித்து விட்டாளே என்பதனால் அல்ல; ஒரு மணி நேரத்துக்கு முன்புகூட வனப்புடன் காட்சி தந்த அந்த ஹால் சுவர் கண்ணுக்கு விகாரமாகக் கரிக்கோலம் இட்டுக் கொண்டு நிற்கிறதே என்கிற அகப் பதைப்பினால்தான்.

கோமளம் ஊரிலிருந்து வந்து இன்னும் ஒரு மணி நேரம் கூட ஆகவில்லை. தானாக வரவில்லை அவள். அக்காள் 'புது வீடு கட்டியிருக்கிறேன். வந்து பார்த்து விட்டுப் போ' என்று எழுதியபடியால் தான் வந்தாள். அக்காள் குணம் தங்கைக்குத் தெரிந்ததுதான். பயந்து கொண்டேதான் வந்தாள் கோமளம். அவள் தன் குழந்தைகள் எல்லோரையும் அழைத்து வரவில்லை. கடைசிக் குழந்தை வாசு அவளை விட்டுப் பிரிந்திருக்க மாட்டான். அதனால்தான் அவனை மட்டும் அழைத்துக் கொண்டு வரும்படியாயிற்று அவளுக்கு. வந்து அன்று ஒரு நாள் மட்டும் தங்கி விட்டுத் திரும்பிப் போய் விடுவது என்கிற தீர்மானத்துடன் தான் வந்தாள் அவள். அந்த ஒரு நாள் பொழுதில் வாசு எந்தவிதமான ஆட்டியும் அடிக்காமல் இருக்க வேண்டுமே என்கிற கவலைதான் அவளுக்கு. அவள் பயந்தபடியே ஆகி விட்டது. வண்ணச் சுவரைக் கரியாக்கி விட்டான் வாசு. அதோடு, அக்காளின் உலகமே கரியாகிப் போனது போலக் கத்தி விட்டாள் அவள். கோமளத்துக்குப் பொறுக்குமா? குழந்தையை அடித்து இழுத்துக் கொண்டு உள்ளே போய் விட்டாள்.

கோமளம் குழந்தை குட்டிக்காரி. வாசுவுக்கு முன்னால் நாலு குழந்தைகள் ஆணும் பெண்ணுமாக இருக்கின்றன அவளுக்கு. கனகத்துக்கு அந்தப் பிடுங்கல் ஒன்றும் கிடையாது. அவள் கணவனுக்கு அவள் குழந்தை. அவளுக்கு அவர் குழந்தை. 'நீயும் நானுமடி எதிரும் புதிருமடி' என்று நிம்மதியாய் வாழ்ந்து வந்தார்கள் அவர்கள்.

கனகம் புது வீடு கட்டிக் குடிபுகுவதற்கு முன்னால் சென்னையில் நெருக்கமான பேட்டை ஒன்றிலே ஒண்டுக்குடியாய் வசித்து வந்தாள். அவள் வசித்த வீட்டிலே அவளைத் தவிர இன்னும் இரண்டு குடித்தனங்கள் இருந்தன. குழந்தையும் குட்டியும் குஞ்சும் குளுவானுமாக இருந்த அந்தக் குடித்தனக்காரர்களுக்கும் இடையே கனகத்துக்கும் அவள் கணவன் துரைசாமிக்கும் வாழ்க்கை நரகமாகத் தென்பட்டது.

கனகம் துரைசாமியுடன் வாழ வந்த இரண்டு மூன்று ஆண்டுகளிலே ஒரு வேளை தங்களுக்கு ஒரு குழந்தை இல்லையே என்று எண்ணி மறுகினார்களோ என்னவோ? ஆண்டுகள் செல்லச் செல்ல அவர்களுக்கு அந்த வாழ்வே பிடித்துப் போய் விட்டது. அதனுடன் அக்கம் பக்கம் இருந்த குழந்தை குட்டிகளின் மீதும் ஒரு வித எரிச்சல் ஏற்பட்டு விட்டது. 'அய்யய்யே! என்ன குழந்தைகளோ! இவர்களை எப்படித்தான் வைத்துக் கொண்டு சமாளிக்கிறார்களோ?' என்றுகூட எண்ணத் தொடங்கி விட்டாள் கனகம்.


துரைசாமி சற்றே கெடுபிடிக்காரர். அவருக்குத் தாம் வசிக்கும் இடம் துப்புரவாக, தும்பு தூசி ஏதுமின்றி இருக்க வேண்டும். தம் ஆடை அணிகள், அறையில் உள்ள பொருள்களெல்லாம் ஒழுங்காகவும், சுத்தமாகவும், கவர்ச்சிகரமாகவும் காட்சி தர வேண்டும் என்று கருதுபவர் அவர். கனகத்தை மெல்லத் தம் வழிக்குத் திருப்பி விட்டார். அவளும் அவர் விருப்பப்படியே தங்கள் இருப்பிடத்தைச் சுத்தமாகவும் அழகாகவும் வைத்துக் கொண்டாள்.

அவர்கள் எத்தனைதான் கவர்ச்சிகரமாகத் தமது இருப்பிடத்தையும் பொருள்களையும் வைத்துக் கொண்டாலும் இரண்டு குடித்தனங்களுக்கு நடுவே, அதிலும் அரை டஜன் குழந்தைகளுக்கு நடுவே, பாம்புக் கண் கொண்டு பார்க்க முடிகிறதா?

ஒரு குழந்தை அவர்கள் அறையிலே காகிதத்தைக் கிழித்துக் குப்பை போடும். இன்னொரு குழந்தை குழாயடியில் உடம்பை நனைத்துக் கொண்டு ஈரமும் அழுக்குமாக வந்து 'மாமா' என்று அவர் காலைக் கட்டிக் கொள்ளும். வேறொரு குழந்தை கனகத்தின் சமையலறைக்குள் தவழ்ந்து போய் அசிங்கம் பண்ணி வைக்கும். எதைக் கோபிப்பது, எதைத் தடுப்பது எதைப் பற்றிப் புகார் கூறுவது? கனகத்துக்கும் துரைசாமிக்கும் இந்தத் தொல்லைகளுக்கு ஈடு கொடுக்கவே பொழுது சரியாயிருக்கும்.

எத்தனையோ கண்டிப்புக்காரர்கள்தான் அவர்கள். அவர்கள் கண்டிப்புக்குப் பயந்து மற்றக் குடித்தனக்காரர்கள் தங்கள் குழந்தைகளை அவர்களிடம் அண்டவிடாமல் பார்த்துக் கொண்டுதான் இருந்தார்கள் என்று சொல்ல வேண்டும். ஆனால் பெரியவர்கள் வேண்டுமானால் பயப்படலாம், குழந்தைகளுக்குத் தெரியுமா? சில சமயம் பெரியவர்களுக்கே தெரியாமல் குழந்தைகள் கனகத்திடமும் துரைசாமியிடமும் வந்து விடும்.

குழந்தைகள்தானே விஷமம் பண்ணுகிறார்கள்? பெரியவர்களா பண்ணப் போகிறார்கள்? இந்த மனப்பான்மை கனகத்துக்கும் கிடையாது; துரைசாமிக்கும் கிடையாது. 'இந்த நரகத்திலிருந்து எப்போது நமக்கு விடுதலை கிடைக்கப் போகிறது? எப்போது



நமக்கென்று ஒரு தனி வீடு கட்டிக்கொண்டு, இந்தத் தொல்லையெல்லாம் இல்லாமல் நிம்மதியாக வாழப் போகிறோம்?" என்று இருவருமே ஏங்காத நாள் இல்லை.

பன்னிரண்டு ஆண்டு காலம் ஒண்டுக் குடியாக இருந்து அல்லல்பட்ட பிறகு அவர்கள் வேண்டிய நிம்மதியான வாழ்வு அவர்களுக்குக் கிடைத்தது. துரைசாமி புது வீடு கட்டினார். சென்னையின் ஒதுக்குப் புறத்திலே ஜன நெரிசல் இல்லாத இடமாகப் பார்த்து மனை வாங்கி வீடு கட்டினார் அவர். புதிய நகர் ஒன்று அங்கே கிளம்பிக் கொண்டிருந்தது. பல பேர் மனைகள் வாங்கிப் பங்களா மாடலில் வீடு கட்டி வந்தார்கள். துரைசாமியும் பங்களா கட்டினார். மிகப் பெரியதாகவும் இல்லாமல் மிகச் சிறியதாகவும் இல்லாமல் நடுத்தரமாக, தமக்கும் தம் மனைவிக்கும் அமைதியான வாழ்க்கையளிப்பதற்கு வாய்ப்பாக நவீன வசதிகளுடன் அவர் பங்களாவைக் கட்டி முடித்தார்.

புதுமனை புகுவிழாக் கொண்டாட வேண்டும் என்று முதலில் இருவருக்கும் ஒரு சபலம் தட்டியது. ஆனால் விழாக் கொண்டாடினால் பத்துப் பேர்கள் வருவார்கள்; போவார்கள். வெற்றிலை போட்டுக் கொண்டு சுண்ணாம்பைச் சுவரிலாவது கதவிலாவது தடவி வைப்பார்கள். கண்ட இடங்களில் புகையிலையைப் போட்டுக் கொண்டு துப்பி வைப்பார்கள்.

மேலும் பத்துக் குழந்தைகள் ஒன்றாகச் சேர்ந்தால் வீடே நிர்த்தூளியாகி விடும். இந்தப் போக்கில்தான் துரைசாமிக்குச் சிந்தனை சென்றது. அவர் தம் மனைவியைப் பார்த்து, ''கனகம்! இந்த நாள் கொண்டாடுவதில் எல்லாம் நம்பிக்கை இல்லை எனக்கு. ஊரைக் கூட்டிச் சோறு போட்டு, என்ன பலன் காணப் போகிறோம்?'' என்றார். அவர் போக்கிலேயே சிந்தித்துப் பழக்கப்பட்ட கனகம் மாத்திரம் என்ன சொல்லப் போகிறாள்?

ஒருநாள் 'திடும்' என்று நல்லவேளை பார்த்துக் கொண்டு அக்கம்பக்கத்துக்குக் கூடத் தெரியாமல் இருவரும் புதுமனை புகுந்து விட்டார்கள். பிறகுதான் கனகம் தன் தங்கை கோமளத்துக்கு எழுதினாள், ஒரு நடை வந்து புது வீட்டைப் பார்த்துவிட்டுப் போகும்படி.

தங்கையை அழைத்ததற்குக் கைமேல் பலன் கிடைத்து விட்டது தமக்கைக்கு. வந்த சுவடு தெரியாமல் வருத்தத்துடன் திரும்பிப் போய் விட்டாள் கோமளம் அன்று மாலையிலேயே.

துரைசாமி அன்று காரியாலயத்திலிருந்து வீடு திரும்பும்போது இருட்டி விட்டது. வந்ததும் வராததுமாக அவர் கண்ணில் பட்டது, சுவரில் காட்சியளித்த அந்தக் கரிக் கோலம்தான்.



கன்னம்மா — என் காதலி

"நீயாகவே செய்து பழகு. படித்துப் பட்டம்பெற்ற பெண் எவளையாவது கல்யாணம் பண்ணிக்கொள்ளப் போகிறவன் இப்போதே பழகவேண்டாமா? இதோ, இந்தக் காலத்துப் பெண்களுக்குத்தான் விரல் அமைகிறதா பார்!" என்று முணுமுணுத்தாள் பாட்டி. என் கிழிசல் சட்டையை இன்று நானே — அதுவும் வெளியே போகும் அவசரத்தில் — தைத்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம்; வீட்டுப் பெண்மணிகளுக்கெல்லாம் கைக்காரியம், அதாவது, கைக்கு மருதாணி அரைத்து இட்டுக்கொள்ளும் காரியம்!

"ஊசியால் குத்திக்கொண்டு விட்டாற்போலிருக்கிறதே உங்கண்ணா. இரத்தம் வருகிறது மீனு!" என்றாள் என் அத்தை மகள் கன்னம்மா. தனது பி.ஏ. பரீட்சையை முடித்துக்கொண்டு சென்னையிலிருந்து இன்று காலைதான் வந்து சேர்ந்திருக்கிறாள் அவள்.

"கை சிவந்துவிட்டதாமே மருதாணி இடாமலேயே!" என்றாள் மீனு: உடனே கலீரென்று சிரிப்பொலி; எனக்கோ கைவலி.

"கட்டுப் போடுங்களேன் விரலுக்கு. கந்தலுக்கா பஞ்சம் இந்த வீட்டில்"

"இருக்கவே இருக்கிறது மீனுவின் பழம்புடவை!" மீண்டும் கும்மாளம்!


இதைத் தொடர்ந்து புடவைகளைப்பற்றிய பேச்சு: இரண்டு வருஷங்களுக்கு முன்பு ஜோடியாக எடுத்த ஒரே மாதிரியான புடவைகளில் மீனுவுக்கு ஒன்றும் கன்னம்மாவுக்கு ஒன்றுமாகக் கொடுத்தார்களாம்; மீனுவின் புடவை மட்டும் சில மாதகாலத்தில் கட்டுப் போடுவதற்கும் குடுகுடுப்பைக்காரனுக்கும் போய்விட, கன்னம்மாவின் புடவை மட்டும் இன்றும் அவள் உடம்போடு இருந்து வருவதைக் கண்டு வியந்தனர்.

"நீயும் மருதாணி இட்டுக்கொள், கன்னம்மா" என்று உபசரித்தாள் மீனு. "இல்லே, மீனு. அப்புறம் . . ." என்று தயங்கினாள் கன்னம்மா.

தருக்கென்று இடைவெட்டினாள் பாட்டி. "பி.ஏ. படிக்கிறவளிட்ட என்னடி உபசாரம் உன் பழங்காலத்து மருதாணியை?"



L 368A-60 TM



உடனே கண்ணம்மா சொன்னாள்: "மருதாணி எனக்கும் பிடிக்கும், பாட்டி. ஆனால்... இப்போதே இட்டுக் கொண்டுவிட்டால்... வந்து..."

"இட்டுக்கொண்டால் என்ன..."

"ஒன்றுமில்லை... அழுக்குத் துணிகளை இன்றைக்கே துவைத்துக்கொள்ள முடியாமல் போய்விடுமோ என்று யோசித்தேன்."

கண்ணம்மா துணி துவைப்பதாகக் கூறியது எல்லோருக்கும் தூக்கிவாரிப் போட்டது. "வேடிக்கைதான், சலவை செய்வதற்கு நாங்களே வெளியே அனுப்புகிறோம் துணிகளை... இதைக் கேளண்ணா... இவள் சொல்கிறாள்..." என்று என்னைக் கூப்பிட்டாள் மீரு. வெளியே கிளம்பும் அவசரத்தில் இவர்கள் வம்புப் பேச்சைக் கேட்க எனக்கேது நேரம்?

அப்புறம் விளக்கு வைக்கும்போதுதான் வீடு திரும்பினேன். வந்தவுடனே அந்தத் தையல்காரன் 'பில்'லைத் தேடும்படி நேர்ந்தது. "அந்த சட்டைப் பையிலே வைத்திருந்தேன், எங்கே அந்தப் பழைய சட்டை? அழுக்குத் துணிகளோடு அனுப்பிவிட்டீர்களா? அடடாடா!" என்று கூச்சலிட்டேன். அந்த 'பில்'லை கண்ணம்மாவே கொணர்ந்து கொடுத்ததும் எனக்குப் புரிபடவில்லை.

"எங்கே ஓடிவிடப்போகிறது உன் சட்டை. பார் இதோ" என்று அம்மா, மேஜைமீது அடுக்கி வைத்திருந்த துணிவரிசையைக் காண்பித்தாள். வெள்ளை வெளேரென்று கண்ணைப் பறிக்க அவற்றைப் பார்த்து பிரமித்து விட்டேன்.

"தன் கையினாலேயே கண்ணம்மா இவ்வளவையும் துவைத்திருக்கிறாள். படித்தும் கர்வமில்லாத பெண்!" என்றாள் அம்மா. தும்பைப் பூவைப்போல பளிச்சிட்ட அந்தச் சட்டையை உடுத்தியதும் புதியதோர் பொலிவை உணரலானேன்; அதே சமயம் அத் துணிகளையெல்லாம் துவைத்தவள் மீது பச்சாதாபமும் உண்டாயிற்று. "இவ்வளவு துணிகளையுமா துவைக்கும்படி விட்டீர்கள், சிரமப்பட்டிருப்பாளே, பாவம்!" என்றேன்.

இதைக் கேட்டுவிட்ட கண்ணம்மா சொன்னாள்: "இதில் சிரமம் என்ன அத்தான். ஸன்லைட் சோப் உபயோகித்தால் இலகுவாயிற்றே! ஏன் தெரியுமா?" சுத்தம் வாய்ந்த சோப்பானதால் ஸன்லைட், சக்திவாய்ந்த நுரை கொழிக்கிறதென்றும், அடித்துத் துவைக்காமலேயே அந்த நுரை, அழுக்கை அறவே அகற்றிவிடக் கூடியது என்றும் விளக்கினாள் கண்ணம்மா.



"அவள் சொல்வதும் சரிதான். அடித்துத் துவைத்துப் பிழிக்கவும் வேண்டாம்; அப்புறம் கிழிசல் தைக்கிறேன் என்று ஊசியைக் குத்திக்கொள்ளவும் வேண்டாம்!" என்றாள் பாட்டி குதூகலமாக.



"முன்னமே தெரியாமல் போச்சு, கிழியாமல் பளிச்சென்று வெளுப்பாக வைத்துக் கொண்டிருக்கலாம்" என்று சொல்லிக் கொண்டாள் மீரு.

பாட்டிக்கோ பரம சந்தோஷம்; தன் பேத்தியின் கரங்களைப் பற்றியபடி வாழ்த்தினாள்: "என் கண்ணம்மாவின் கைக்கு மருதாணிதான் இடவேண்டும். இவளைக் கொத்திக்கொண்டு போகிறவன் கொடுத்துவைத்தவன்!" அப்போது பார்க்க வேண்டும் கண்ணம்மாவின் கன்னத்தில் ஏறிய சிவப்பை!

"கனகம்! இது என்ன கோரம்? யார் செய்த வேலை இது?" என்று கூச்சலிட்டார் அவர், தம் ஆடையைக் களைந்து மாற்றுடை தரித்தபடியே.

கனகம் நடந்த கதையை அழமாட்டாத குறையாகச் சொன்னாள்.

"போ! தங்கையை வரவழைத்ததற்குக் கைமேல் பலன் கிடைத்துவிட்டது!" என்று குத்தலாகப் பேசினார் துரைசாமி. கனகத்துக்கு அழுகை அழுகையாக வந்தது.

மறுநாளே கொத்தர்கள் வந்தார்கள். சுவரில் இருந்த கரிக்கோலத்தை அழித்துப் போட்டுப் புதிய வர்ணம் பூசி மீண்டும் புதுமை நிலவச் செய்தார்கள்.

துரைசாமியும் கனகமும் சுவரின் வனப்பு கெடவில்லை என்று அறிந்தபிறகே அமைதியுற்றனர்.

அன்று முதல் அவர்கள் இருவருமே தமது பங்களாவின் புது மெருகு கலையாமல் பாதுகாப்பதையே தமது வாழ்வின் லட்சியமாகக் கருதி வரலாயினர்.

பக்கத்து மனையிலே ஒரு புது வீடு உருவாகி வந்தது. துரைசாமியும் கனகமும் குடிபுகுந்த ஆறே மாதங்களுக்கெல்லாம் அடுத்த வீடும் கட்டி முடிந்தது. ஆடம்பரமாகப் புதுமனை புகுவிழா நடத்தி நாலு குழந்தைகளுடன் வீட்டுக்குடையவர்கள் அந்தப் புதிய வீட்டில் வசிக்கத் தொடங்கினார்கள்.

"பக்கத்து வீட்டிலே பெரிய குடும்பம் போலிருக்கிறது" என்றாள் கனகமும் தன் கணவனைப் பார்த்து.

"ஆமாம்! நாலு வால்கள் அங்கே இருக்கின்றன. கல்லும், மண்ணும் பறந்தபடி தான். இரண்டு நாட்களுக்கு முன் ஒரு வால் வாசலில் தொங்கும் விளக்கைக் கல்லால் அடித்து நொறுக்கிவிட்டது. நமது காம்பவுண்டுக்குள் கூட ஒரு கல் வந்து விழுந்தது. நான் பார்த்து விட்டுச் சக்கையாக 'டோஸ்' கொடுத்து விட்டு வந்தேன்" என்று பதில் சொன்னார் துரைசாமி.

ஆனால் துரைசாமியின் 'டோஸ்'க்கு அந்த 'வால்'கள் மதிப்புக் கொடுத்ததாகத் தெரியவில்லை. அவர்கள் குதிப்பும் கொம்மாளமும் எப்போதும் போலவே இருந்து வந்தன. அதைப் பற்றித் துரைசாமியும் கனகமும் கவலைப்பட்டது போல், அவர்களது பெற்றோர்கள் கூடக் கவலைப்படவில்லை.

• • •

நாட்கள் ஓடின. துரைசாமியும் கனகமும் புது வீட்டுக்கு வந்து ஓராண்டு கழிந்தது. அடுத்த வீட்டு அமளியைப் பற்றி அவர்கள் இப்போது கவலைப்படவில்லை. இரு வீடுகளுக்கும் இடையே இருந்த குறுக்குச் சுவர் இரு தனி உலகங்களைப் பிரித்துக் காட்டியது. அங்கே எத்தனைக்கெத்தனை கலகலப்பும் ஆரவாரமும் காணப்பட்டனவோ, அத்தனைக்கு அத்தனை அமைதி நிலவி வந்தது இங்கே.

துரைசாமி வீட்டைச் சுற்றிப் பார்த்தார். புத்தம் புதிதாகவே கன்னிக் குமரி போலக் காட்சியளித்தது அது. இருந்தாலும் ஓராண்டுக் காலமாகப் புனைந்திருக்கும் மேலாடை, மழைக்கும், வெய்யிலுக்கும், தும்புக்கும், தூசிக்கும் ஈடு கொடுத்துச் சற்றே பொலிவிழந்தது போல் தோன்றியது.

மறுபடியும் கொத்தர்கள் வந்தார்கள். சுண்ணமும், வண்ணமும் குழைத்துப் பூசிப் புதுமைப் பொலிவு தந்தார்கள். அன்றுதான் பூர்த்தியானது போலப் பளபளவென்று புதுமைத் தோற்றம் மிளிர்ந்த தங்கள் பங்களாவைப் பார்த்து இறுமாப்புக் கொண்டனர் துரைசாமியும், கனகமும். ஆறு மாதங்களுக்கு முன்புதான் கட்டி முடிந்து குடிபுகுந்த அடுத்த வீடு அப்போதே பல்லிளிக்கத் தொடங்கியிருந்தது.

அடுத்தவீட்டிலே 'கல்யாணமும் கார்த்திகையும்' நாளும் கிழமையும் நடந்தபடியே இருந்தன. வருவோரும் போவோருமாக எப்போதுமே அங்கே கலகலப்பாக இருந்தது. ஆனால் கனகத்தின் வீடு 'கப்சிப்' என்று கம்பீரமாகத் தலை நிமிர்ந்து நின்றது. துரைசாமியைப் பார்க்க வருகிறவர்கள் அவரது காரியாலய நண்பர்கள். அவர்களும் எப்போதாவதுதான் வருவார்கள். முன்னறையிலோ வாசல் வராந்தாவிலோ போட்டிருக்கும் நாகரிக நாற்காலிகளில் அமர்ந்து பேசிவிட்டுப் போய் விடுவார்கள். கனகத்தைப் பார்க்க யாருமே வருவதில்லை என்று கூடச் சொல்லலாம். அண்டை அயலில் இருப்பவர்களோடு கூட நெருங்கிப் பழக மாட்டாள் அவள். அப்படி எப்போதாவது பேச நேர்ந்தாலும் குறுக்குச் சுவர் ஓரமாக நின்று அவள் பேசுவாள்; அல்லது வாசல் கேட்டுக்கு அருகில் நின்று பேசிவிட்டு வருவாள். 'உள்ளே வாருங்களேன்' என்று யாரையுமே அவள் அன்புடன் அழைத்துப் பார்த்ததில்லை என்று தெருவில் இருந்தோர் புகார் கூறினர் என்றால் அதில் உண்மை இல்லாமல் போகவில்லை. அப்படி அவள் அழைத்தாலும் 'பிக்கல் பிடுங்கல்களை' வீட்டிலேயே விட்டு விட்டுத் தனியாக வரும் பெண்மணியைப் பார்த்துத்தான் கூப்பிடுவாள். அந்தப் பெண்மணியும் சிறிது நேரம் வாசலிலோ, முன் வராந்தாவிலோ நின்று பேசுவாள். அதற்குள் அவளைத் தேடிக் கொண்டு 'ஏதாவது ஒன்று' வந்து சேரும். கனகத்துக்குச் சங்கடம் ஏற்படாமல் அந்தப் பெண்மணி உடனடியாக விடைபெற்றுக் கொண்டு வந்த குழந்தையுடன் தன் வீட்டைப் பார்க்கப் போவாள்.

இப்படித்தான் கனகத்தின் வாழ்க்கை அவள் வேண்டிய நிம்மதியுடன் நகர்ந்து கொண்டு வந்தது.

துரைசாமி வீட்டில் இருக்கும்போது அவர் பேசி அவள் கேட்பாள்; அவள் பேசி அவர் கேட்பார். பேச்சு சாதாரணமாக அடுத்த வீட்டுக் குழந்தைகளின் அமர்க்களம், எதிர் வீட்டுக்காரர்கள் குழந்தைகளைக் கட்டுப்பாடின்றி வளர்ப்பது இப்படி எதைப்பற்றியாவதுதான் இருக்கும். அண்டை அயலில் இருப்பவர்களது குற்றமும் குறையும்தான் பெரிதாகப்படும் இந்தத் தம்பதியரின் கண்களிலே. அவற்றைப் பற்றி மணிக்கணக்காக அலுப்புச் சலிப்பில்லாமல் பேசிக் கொண்டிருப்பார்கள். பொழுதுதான் போக வேண்டுமே!

துரைசாமி காரியாலயத்துக்குச் சென்று விட்டால் கனகத்துக்குப் பத்திரிகைகளும்

புத்தகங்களும் இருக்கவே இருக்கின்றன. ரேடியோ வேறு பேசுகிறது. பாடுகிறது. போதுமே. அண்டை அயலாரின் தொண தொணப்பு எதற்கு? குழந்தைகள் கூட ரேடியோவில் பேசுகின்றன, ஆடுகின்றன. இல்லா விட்டால் சினிமா இருக்கவே இருக்கிறது. போய்ப் பார்த்துவிட்டு வந்தால் போகிறது. பொழுது போக்குக்குப் போதாதா? வீட்டிலே உபத்திரவம் இல்லாமல் நிம்மதியாக இருக்கலாம். கனகம் நிம்மதியாகத் தான் வாழ்ந்தாள்.



ஆண்டுகள் ஒவ்வொன்றாக உருண்டோடின. கனகம் புதிக புதிதாகப் புடவைகளும் நகைகளும் வாங்கினாள். துரைசாமி புதிக புதிதாக உடைகள் தைத்தார். அவர்களது பங்களாவும் அன்று தான் கட்டி முடிந்தது போல் என்றுமே புதுமைப் பொலிவுடன் காட்சி அளித்தது. கனகத்தின் புடவை நிறமும், துரைசாமியின் உடைகள் அமைப்பும் அடிக்கடி மாறிப் புதுமை அளித்ததுபோல் அவர்களது பங்களாவும் ஆண்டுக்கொரு நிறமாக அழகு தீட்டிக் கொண்டு புதுமெருகு அழியாமல் நின்றது.

'கனகமும் துரைசாமியும் குழந்தைக்கு அலங்காரம் பண்ணுவதுபோல் வீட்டுக்கு அலங்காரம் பண்ணுகிறார்கள். வேளைக்கு ஒரு புதுமையாகத் தோன்றுகிறது அது' என்று அண்டை அயலார் பேசுவது அவர்களுக்குப் பெருமையாயிருக்கும்.

'குழந்தைக்கு எங்கே இத்தனை கவனிப்புடன் அலங்கரிக்கிறார்கள் அவர்கள்?' என்று துரைசாமியும் கனகமும் தங்களுக்குள்ளாகவே கேலிப்பேச்சுப் பேசிக் கொள்வார்கள். அதில் ஒரு திருப்தி அவர்களுக்கு.

ஆனால் எத்தனை நாட்கள்தான் இயற்கையையும் உண்மையையும் மறந்து அவர்கள் 'நிம்மதி'யாக வாழ முடியும்?

அந்த நிம்மதியே துன்பமாகத் தென்படலாயிற்று கனகத்துக்கு. துரைசாமிக்குக் காரியாலயமும் வேலையும் பகல் பொழுதைப் பெரும்பாலும் ஓட்டி வைத்து விடுகிறது. களைத்துப் போய் வீடு திரும்பினால் சோபா இருக்கிறது சாய்ந்து கொள்ள. கனகமும் ரேடியோவும் பத்திரிகைகளும் கூட இப்போதெல்லாம் அவருக்கு அவ்வளவாகத் தேவைப் படவில்லை. ஓய்ந்துபோய்ச் சாய்ந்துவிடுப்பார்.

இருபதாண்டுகளுக்கு மேலாக அவர் உழைத்து ஓய்ந்து போயிருந்தார். இன்னும் சில ஆண்டுகள் ஆனால் உழைப்பிலிருந்து ஓய்வு பெற வேண்டியவர்தான் அவர். அப்போதே கூட ஓய்வு பெற்று விடலாம். யாருக்காக அவர் இன்னமும் உழைத்துக் கொண்டிருக்க வேண்டும்? சம்பாதித்துச் சேர்த்து யாருக்கு வைத்து விட்டுப் போக வேண்டும்?

சிறுகச் சிறுக இந்த விதமான எண்ணங்கள் அவர் உள்ளத்தில் புரையோடலாயின. ஓய்ந்த வேளையில் இத்தகைய எண்ணங்கள் அவரை மௌனியாக்கி வந்தன; உடல் அசதியும் உடன் சேர்ந்துகொண்டது.

கனகம் தன் கணவரிடம் இந்த மாறுதலைக் கவனித்தாள். அவர் முன்போலப் பேசுவதில்லை. வீட்டில் இருந்தபோதெல்லாம் கட்டிலிலோ, சோபாவிலோ கண்ணை மூடிக் கொண்டு சாய்ந்து கிடக்கிறார். அவர் நிம்மதியாகத்தான் இருக்கிறாரா?

கனகம் கேட்பாள்: "ஏன் இப்படி இருக்கிறீர்கள்? தன்னையில்லையா?" என்று.

"ஆமாம்! வயசு ஏறிக்கொண்டுதானே போகிறது. பார்த்துக் கொண்டே இருந்தால் இன்னும் இரண்டாண்டுகள்! அப்புறம் இந்தக் கட்டிலும் சோபாவும் தானே கதி?" என்று பெருமூச்சு விடுவார் துரைசாமி.

அவர் பேசிக் கொண்டிருந்த நாட்களைவிடப் பேசாதிருந்த நாட்களே கனகத்தின் நெஞ்சைக் கிளறிவிட்டன. அவள் நிம்மதி அவளைவிட்டு மெல்ல விலகிச் செல்வது போன்ற எண்ணம் பிறந்தது. இருந்தாலும் அவள் சமாளித்துக் கொள்ள முயன்றாள். துரைசாமியே பேசா விட்டாலும் அவளாக ஆயிரம் கதைகள் பேசி வந்தாள் அவரிடம்.

துரைசாமிக்குப் பேசுவதில் தெம்பில்லாதது போலவே, கேட்பதிலும் தெம்பில்லாது போயிற்று. அடுத்த வீட்டுக் கதைகளும், எதிர் வீட்டுக் கலவரங்களும் அவருக்குத் தேவைப் படவில்லை இப்போது. "கனகம்! இதையெல்லாம் இனி என் காதில் போடாதே. ஓய்ந்துபோய் வீட்டுக்கு வந்தால் சற்றுநேரம் நிம்மதியாக இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது எனக்கு. யார் எப்படிப் போனால் நமக்கு என்ன?" என்றார் ஒருநாள்.

கனகம் அதன் பிறகு அவரிடம் எதையும் சொல்வதில்லை. அவர் இஷ்டப்படி நிம்மதியாக இருக்கவே விட்டு விட்டாள்.

ஆனால் நிம்மதியாகவா இருந்தார் அவர்?

அவளும்தான் நிம்மதியாக வாழ்ந்தாளா?

அவர்கள் இருவருமே கோரிய நிம்மதி பாலைவனத்துப் புனல் போலச் சில ஆண்டுகள் அவர்களது ஊனக்கண்களமுன் காட்சி தந்து மறைந்து போயிற்று. இயற்கையின் வெம்மை தான் இருவரையுமே சூழ்ந்து கொண்டிருந்தது இப்போது.

ஒருநாள் துரைசாமி காரியாலயம் சென்ற பிறகு கனகம் சாளரத்தின் பக்கமாக நின்று கொண்டு அடுத்த வீட்டுச் சாளரத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். ரேடியோப் பெட்டி உறங்கிக் கொண்டிருந்தது. சில நாட்களாக அதை அவள் இயக்கு வதே இல்லை. மேலே படிந்திருந்த தூசியைக் கூடத் துடைக்கவில்லை அவள். பத்திரிகைகள் வட்ட மேஜையின் மேல் தாறுமாறாகக் கிடந்தன. புதிதாக வந்த பத்திரிகைகள் கூட மேலுறையோடு நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தன. கனகம் அவற்றைக் கையால் கூடத் தொடவில்லை. அவள் அடுத்த வீட்டுச் சாளரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அந்தச் சாளரத்துக்கப்பால் அந்த வீட்டுக் குடையவள் தன் கைக் குழந்தையைத் தொட்டிலில் விட்டு ஆட்டியவண்ணம் பாடிக் கொண்டிருந்தாள் :

'இன்பக் கதைகள் எல்லாம்-உன்னைப்போல்
ஏடுகள் சொல்வதுண்டோ
அன்பு தருவதிலோ உனைநேர்
ஆகுமோர் தெய்வமுண்டோ?'

அவள் சாதாரணமாகத்தான் பாடினாள், குழந்தையைத் தாலாட்டித் தூங்கச் செய்ய வேண்டுமே என்று. ஆனால் கனகத்தின் நெஞ்சைக் கீறிய அந்த அடிகள்.

எத்தனையோ முறை ரேடியோப் பெட்டி பாடியிருக்கிறது அந்த அடிகளை. உணர்ச்சியும் உருக்கமுமாகப் பாடியிருக்கிறது. கேட்டிருக்கிறாள் கனகம். அந்தளவு அழகாகப் பாட வில்லை அடுத்தவீட்டுப் பெண்மணி. பணிக்கும் மினுக்கும் பேற்றுக்கும், குடும்பபாரத்துக்கும் குழந்தைகளின் நாட்டிகளுக்கும் அவர்களது சேட்டை தொடிகளுக்கும், நலத்துக்கும் கெட்டதுக்கும் ஈடு கொடுத்துச் சாய்ந்து தேய்ந்து ஓய்ந்து போன அந்தப் பெண்மணியின் குரலிலே இசையின் இன்பத்தை எதிர்பார்த்து நிற்கவில்லை கனகம். அவளது தாய்மை தோன்மையைத்தான் தரிசித்தாள்.

கனகத்துக்கு மெய்சிலிர்த்தது. அவள் கண்களில் நீரோட்டம் மின்னித் தெரிந்தது. சாளரத்தைப் பற்றியபடியே அவள் எதிரே நின்ற தாயையும் அந்தத் தாய் வசிக்கும் வீட்டையும் பார்த்தாள். அந்தத் தாயைப் போலவே, அவள் வாழும் வீடும் இருப்பதாகத் தோன்றியது கனகத்தின் கண்களுக்கு. வெய்யிலுக்கும், மழைக்கும், காற்றுக்கும் ஈடு கொடுத்து வண்ணமும் ஒளியும் தேய்ந்திருந்தாலும் அந்த வீடு அதற்குடைய பெண்மணியைப் போலவே 'நானும்தான் வாழ்கிறேன், பார்!' என்று பறைசாற்றியது.

'ஆம்! நீதான் வாழ்கிறாய். உன் எஜமானி தான் வாழ்கிறாள். ஏன்? உன் எஜமானியை நீ வாழவைக்கிறாய். உன்னை அவள் வாழவைக்கி றாள். இருவருமே வாழ்கிறீர்கள். வாழுங்கள், நீடூழி வாழுங்கள் இருவருமே!'

தன்னையும் மீறி வாய் விட்டு வாழ்த்தினாள் கனகம். மனமார வாழ்த்தினாள் முதல் முதலாக. மறுவிநாடியே பின்புறம் ஏதோ ஓசை கேட்டுத் திரும்பினாள் அவள். உத்தரத்தி லிருந்து ஒருபல்லி பொத்தென்று கீழே விழுந்து கிடந்தது. அது விழுந்தபோது எழுப்பிய ஓசைதான் 'அப்பா! என்ன பயங்கரமான ஓசை!' என்று எண்ணத் தோன்றியது, கனகத்துக்கு.

ஆளியமாய்க் கிடந்த அந்தப் பங்களாவிலே கேவலம், ஒரு பல்லிகூடப் பயங்கரமாக ஒலி எழுப்புகிறது! படபடத்த மார்பைக் கையினால் அழுத்திக் கொண்டு பல்லியை விட்டுக் கண்களை நிமிர்த்தியபோது எதிர் அறையிலிருந்த கண்ணாடி அலமாரியில் அவள் உருவம் தெரிந்த தைக் கண்ணுற்றாள்.

ஐம்பது வயதை அணுகிய போதிலும் இன்னமும் கட்டுத்தளராத உடல், கொழுவிய கன்னங்கள்; டாலடிக்கும் வைர நகைகள். மக்கும் புதுப்புடவை கட்டியிருந்த புதுமைச் சூழ்நிலைக்கு ஏற்ற புதுமைத் தோற்றம். ஆனால் ஏன், அந்த முகத்திலே, அந்தக் கண்களிலே, அந்த ஏக்கம்? உள்ளத்தின் இருள் கண்களில் தெரிகிறதா? நெற்றியிலே லட்சுமிகரமாகத் தான் குங்குமம் துலங்குகிறது. ஆனால் உள்ளத் தின் சூனியத்தை நெற்றியும் கண்களும் எடுத் துக் காட்டாதபடி தான் குங்குமம் நெற்றி யைப் பாதுகாக்கிறதா? விழிகள் கண்களைக் காக்கின்றனவா? யாருக்கு இந்த அலங்காரம் எல்லாம்? ஐம்பதுக்கு மேற்பட்டு அசதியும் தளர்ச்சியும் கொண்டு இன்னும் சில ஆண்டு களில் கூடுகூடு கிழவராக வளைய வரப்போகிற துரைசாமிக்காகவா?

வெடித்துக் கொண்டு வந்தது சிரிப்பு, கனகத்தின் இதயத்தினின்றும், 'அவருக்காக நானும் எனக்காக அவரும் வாழ்ந்த காலம் போதுமே. வாழ்ந்து என்ன பலனைக் கண்டோம் விட்டோம்?'

'பலனைத்தான் கண்டு விட்டாயே! பார், உன் பங்களாவைப் பெருமையோடு!'-இதயத் தின் கேலிக் குரல்!

புருஷருக்குஅறியாமல் திருதும் பங்களாவை ஒரு முறை சுற்றி வரவேண்டும் என்று தோன் றியது அவளுக்கு. சுற்றி வந்ததுமே, 'இந்த ஆண்டிலே இதற்கு வெள்ளையடிக்கவும் வேண் டாம், வண்ணம் தீட்டவும் வேண்டாம்' என்று முடிவு செய்து கொண்டாள்.

இந்தத் தீர்மானத்துடன் அவள் முன் ஹாலில் வந்து ஒரு சோபாவில் உட்கார்ந் தாள். எதிர்ச் சுவரில் இளநீல வண்ணத் தைக் கண்டாள். அந்த இளநீல வண்ணச் சுவருக்குள்ளே தாறுமாறாகச் சில கரிக் கோடுகள் மறைந்து கிடப்பது அவள் கண் களுக்குத் தெரிந்தது. ஊனக்கண் காணாத உலகத்தை உள்ளக் கண்கள் உற்று நோக்கின. பல ஆண்டுகளுக்கு முன்னால் குழந்தை வாசு தீட்டிய கரிக் கீறல்கள் அவள் இதயத்தை இப்போது ஒரு முறை கீறிவிட்டன.

'பாவம்! குழந்தையை அப்படிப் போயறை வது போல் அடித்து விட்டாளே!' வாய்

விட்டுச் சொல்லுகிறாள் கனகம். அவள் கண்களில் ஊற்றுக் கிளம்புகிறது.

கண்ணீர்ப் படலத்தின் ஊடே அவள் வாசுவைக் காண்கிறாள். ஐந்து வயதுக் குழந்தையாக பத்து வயதுப் பாலகனாகக் காட்சி தருகிறான், அவனுக்கு முன் பிறந்த குழந்தைகள் ஆணும் பெண்ணும் வளர்ந்து 'மட்டும் மரியாதை'யுமாக நடந்து கொள்ளத் தெரிந்தவர்களாக விளங்குகிறார்கள். கனகம் கேட்கிறாள்: "கோமளம்! குழந்தைகளைக் கூப்பிட்டால்கூட அவர்கள் வரமாட்டேன் என்று சொல்கிறார்களே?"

"அக்கா! உன்னோடு அதிகமாகப் பழக்கமில்லை அவர்களுக்கு. கனகம் பெரியம்மா வரப் போகிறாள். அதோடு நீ கொஞ்சம் கண்டிப்புக்காரி என்று அவர்களுக்குத் தெரியும், 'நீங்கள் எல்லோரும் வாலைச் சுருட்டிக் கொண்டு இருக்க வேண்டும் என்று' நீ வருவதற்கு முன்பே நான் உனக்குச் சொல்லி வைத்திருக்கிறேன்."

கோமளத்தின் பதிலைக் கேட்டுச் சிரிக்கிறாள் கனகம். நாலைந்து ஆண்டுகளுக்கு முன் கோமளத்தின் வீட்டிலே ஏதோ விசேஷம் என்று இரண்டு நாட்கள் போய் இருந்துவிட்டு வந்த நிகழ்ச்சி கனகத்தின் நெஞ்சேடுகளில் புரளுகிறது.

'இன்னும் இரண்டு நாட்களாவது இருந்து விட்டுப்போ, அக்கா' என்று ஆசை ஆசையாகக் கூறினாளே கோமளம்? இருந்தேனா? அப்போது அந்த இரண்டு நாட்களே போதுமென்றும் விட்டது எனக்கு. ஆனால் இப்போது?...'

வராந்தாவிலிருந்து உள்ளே நுழைந்த துரைசாமியின் கால் செருப்புச் சத்தம் கனகத்தின் சிந்தனைத் திரையைக் கிழித்தது.

காரியாலயத்திலிருந்து அப்போது தான் வருகிறார் அவர். இன்னும் உடைகளைக் கூட மாற்றிக் கொள்ளவில்லை. வந்தவருக்குச் சூடாகக் காப்பி கூடக் கொடுக்கவில்லை அவள். 'கோமளத்தையும் குழந்தைகளையும் போய்ப் பார்க்க வேண்டும் என்று தோன்றுகிறது. போய் வரலாமா ஒரு பயணம்?" என்றாள் இடுஇடுப்பென்று.

துரைசாமி அப்படியே அயர்ந்து போய் நின்றார். ஒரு முறை உற்று நோக்கினார் கனகத்தை. அவள் தானா பேசுவது? அவள் கண்களுக்குள்ளே அவர் தம்மைக் கண்டார். தமக்குள்ளே அவளைக் கண்டார். 'ம்...' என்று ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார். 'தொப்'பென்று எதிரே இருந்த சோபாவில் சாய்ந்து கொண்டார்.

கனகம்!" என்று குரல் கொடுக்கவே சிறிது நேரம் பிடித்தது அவருக்கு.

கனகம் அவர் எதிரே வந்து ஆவலே வடிவமாக நின்றாள். அவர் சொல்ல இருக்கும் பதில் அவள் உள்ளத்தைக் குளிர வைக்குமா?

'கனகம்! வேலை செய்ய முடியவில்லை. இன்றோடு ஓய்வுபெற்றுக் கொண்டு வந்து விட்டேன். இனி எங்கே வேண்டுமானாலும் நாம் போகலாம்!"

"என்ன? வேலை செய்ய முடியவில்லையா? உடம்புக்கு என்ன?" என்று அங்கலாய்ப்புடன் கேட்டுக் கொண்டே அவர் நெற்றியில் கையை

நர்ஸ்: ஒவ்வொரு தடவையும் நான் அவர் நாடியைப் பார்க்கும் போது அவர் நாடி ஓரேடியாய்த் துடிக்கிறது!

டாக்டர்: (கொஞ்சம் செவிடு) அவர் நாடியை நீ எதற்கு அடிக்கடி பார்க்கிறாய்? நாடியை அல்லவா உன்னைப் பார்க்கச் சொல்கிறேன்

●



"ஆண் சிங்கம் பயப்படும் ஒரு பிராணி எது தெரியுமா?"

"......பெண் சிங்கம் ஸார்!"

●

"அடக்க விலையைவிடக் குறைவாகக் கடிகாரத்துக்கு விலை வைத்திருக்கீங்களே"

"பரவாயில்லீங்க! அதை ரிப்பேர் செலவிலே எடுத்துடுவேன்!"

●

"என் ஆருயிர்க் காதலியே! உனக்குத் தின்பண்டங்களுடன் ஒரு கடிதம் வைத்து அனுப்பி இருந்தேனே, அது எப்படி இருந்தது?"



"ரொம்ப ருசியாக இருந்தது!"

"சிவ சிவா! ருசியா? அந்தப் பேப்பரையும் தின்று விட்டாயா என்ன?"

●

"குழந்தை, ஏன் அழுகிறாய்?"



"அம்மா என்னை அடித்தாள்!"

"அம்மா உன்னை எதற்காக அடித்தாள்?"

"நான் அழுதேன்!"

●

கட்டு மீசை வைத்துக் கொண்டு இருந்த தாத்தா ஒருநாள் மீசையை எடுத்து விட்டார்.

பேரப்பயல்: தாத்தா! இத்தனை நாள் உன் மூக்கு எங்கிருந்தது?

●

மகன்: அப்பா! உன்னிடம் இருக்கிற அணுக்காசை யெல்லாம் கொடு ரூபாயாக்கித் தருகிறேன்.



தந்தை: எப்படிடா கண்ணு?

மகன்: இன்னிக்குத்தான் வாத்தியார் எங்களுக்கு அணாவை ரூபாயாக்கக் கத்துக்கொடுத்திருக்கிறார்

வைத்துப் பார்த்தாள். நெற்றி நெருப்பாய்க் கொதித்தது.

"ஐயையோ! காய்ச்சல் அடிக்கிறதே!" என்று பதறிப்போய் அலறினாள் கனகம்.

துரைசாமி தலைவலி என்று தரையில் படுத்தவர் அல்ல. உடலில் திடம் இருந்த வரையில் எந்த வலியையும் பொருட்படுத்தியதில்லை அவர். இப்போது சில நாட்களாகவே அசதி ஏற்பட்டுப் போயிற்று அவருக்கு. அதனுடன் காய்ச்சல் என்று படுத்துக்கொண்டு பத்து நாட்கள் ஆகிவிட்டன.

கனகம் தனியாய்த் தவித்தாள். கணவன் பிழைத்து எழுந்திருப்பாரா என்று ஏங்கினாள். அப்போதுதான் அவளுக்கு ஒத்தாசைக்குக்கூட ஒரு மனிதர் இல்லையே என்கிற எண்ணம் ஏற்பட்டது.

கோமளத்தை வரவழைக்கலாமா என்று நினைத்தாள். ஆனால் புது வீடு பார்க்க வந்தவளை இரண்டு நாட்கள்கூட இருந்து போ என்று சொல்லவில்லை கனகம். இப்போது ஒத்தாசைக்கு வா என்று எப்படிக் கூப்பிட முடியும்? 'ஊருக்குப் போய்ப் பத்து நாட்களாவது குழந்தைகளோடு இருந்து விட்டு வரலாம் என்று எண்ணினால் இந்த மனிதர் படுத்துக் கொண்டு விட்டாரே!' என்று வேதனைப் பட்டாள்.

பன்னிரண்டு நாட்களுக்குப் பிறகு துரைசாமிக்குப் படிப்படியாகக் காய்ச்சல் குறைந்தது. காய்ச்சல் விட்டு எழுந்து நடமாட மேலும் நாலைந்து நாட்கள் ஆயின.

"ஊருக்குப் போய்க் கோமளத்துடனும் குழந்தைகளோடும் பத்து நாட்கள் இருந்து விட்டு வருவோமே; உங்கள் உடம்புக்கும் நல்லது" என்று கனகம் கேட்டாள் ஒருநாள்.

"கனகம்! ஊர்ப் பிரயாணம் செய்ய எனக்குத் தெம்பில்லை. குழந்தைகளை அழைத்துக் கொண்டு வந்து பத்து நாட்கள் இருந்துவிட்டுப் போகும்படி கோமளத்துக்கு எழுது" என்றார் துரைசாமி.

அன்றையத் தபாலிலேயே கோமளத்துக்குக் கடிதம் சென்றது.

இரண்டு நாட்களுக்குப் பிறகு கோமளம் தன் கடைசிப் பிள்ளையுடன் வந்து சேர்ந்தாள்.

"கோமளம்! குழந்தைகள் எல்லோரையும் அழைத்து வரவில்லையா?" என்று துரைசாமி கனகம் இருவருமே சேர்ந்தாற்போல் கேட்டனர்.

"எல்லோரையும் எங்கே அழைத்து வருவது? அது அதற்குக் கல்லூரி, பள்ளிக்கூடம், வேலை, வெட்டி...எல்லோருமாக வீட்டை விட்டுக் கிளம்புவதென்றால் முடிகிறதா?"

"வாசுவையாவது நீ அழைத்து வந்திருக்கக் கூடாதா?" என்று கனகம் ஆவலோடு கேட்டாள்.

"வாசு ஐந்தாம் படிவம் படிக்கிறான். அதுவே அவனுக்கு பி. ஏ. வகுப்பு என்று எண்ணம். பள்ளிக்கூடம் கெட்டுப் போகுமாம். வரமாட்டேன் என்று விட்டான்."

"ரமணிதானே இவன்? நான் அங்கே வந்திருந்தபோது சின்னக் குழந்தை. ஒரு வயதுதான் இருக்கும் அல்லவா? அசல் வாசுவைப் போலவே இருக்கிறானே இவனும்! வாடா ரமணி!" என்று மிகுந்த ஆசையோடு அழைத்தாள் கனகம்.

ரமணி அவள் அழைத்தவுடனே எதிரில் வந்து நின்றான்.

"சமர்த்துக் குழந்தை. கூப்பிட்டவுடனே வந்து விட்டான்" என்று வாரியணைத்து முத்தமிட்டாள் கனகம்.

கோமளத்துக்கு ஆச்சரியமாய் இருந்தது. அக்காளின் செய்கை. முன் தடவை வாசுவுடன் அவள் வந்தபோது கனகம் தன் வீட்டுப் பெருமையைப் பற்றிப் பேசிக் கொண்டு போனாளே ஒழிய, குழந்தையை 'வா' என்று அருகில்கூட அழைக்கவில்லை. அதற்கேற்றாற் போல் அந்தப் பயல் கரியால் சுவரில் கிறுக்கிக் கனகத்தின் நெஞ்சையே கருகச் செய்து விட்டான். கோமளம் மறக்கவில்லை அதை. அந்தக் கருகிய நெஞ்சிலே மீண்டும் துளிர் விட்டிருக்கிறதா?

ஆம்; கோமளம் வந்து நான்கு நாட்களாகி விட்டன. ரமணியும் கனகமும் நான்கு ஆண்டுகளாகப் பழகினவர்கள் போல் ஆகி விட்டார்கள். முன் ஹாலில் சோபாவில் சாய்ந்திருக்கிறார் துரைசாமி. கனகம் அவர் எதிரே சுவர் ஓரமாகக் குந்தியிருக்கிறாள். குழந்தை ரமணி அவள் மடியில் இருக்கிறான்.

"ரமணி! உனக்கு எழுதத் தெரியுமா? பள்ளிக்கூடம் போகிறாயா நீ?" என்று கேட்கிறாள் கனகம்.

"வாசு பள்ளிக்கூடம் போகிறான். நான் போகவில்லை. ஆனால் வாசுவைப்போல் எனக்குக் கூட எழுதத் தெரியுமே!"

"வாசுவைப்போல் எழுதுவாயா நீயும்?"

"ஓ!"

"ஏதோ எழுது. பார்க்கலாம்!" எழுந்து போய் ஒரு கரித்துண்டை எடுத்துக் கொண்டு வந்து கையில் கொடுக்கிறாள் கனகம்.

"சிலேட்டு, பலப்பம்?"

"அ தெல்லாம் வேண்டாம். இதை வைத்துக் கொண்டு இந்தச் சுவரில் எழுது! பார்க்கலாம்!"

வாசுவைப் போலவே ரமணியும் ஒரு முறை அந்த இளநீல வண்ணச் சுவரைத் தன் பிஞ்சு விரல்களால் தடவிப் பார்த்தான். பிறகு 'அனா' 'ஆவன்னா' என்று உரக்கச் சொல்லிக் கொண்டே உற்சாகத்துடன் கிறுக்கத் தொடங்கினான்.

அவன் குரல் கேட்டு ஓடிவந்தாள் கோமளம். அவள் பயந்தபடியே மறுபடியும் நடந்து விட்டது. ஆனால் குழந்தை ரமணி குஷாலாகத் தன் பெரியம்மாவின் மடியில் உட்கார்ந்துகொண்டு கரிக் கோலம் வரைந்தான்.

பெரியப்பாவும் கூடப் பார்த்துக் கொண்டிருக்கிறார். இருவருமே ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை. அவர்கள் இருவரையும் மாறி மாறிப் பார்த்தாள் கோமளம். அவள் நெஞ்சம் நெகிழ்ந்தது.

இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு அந்த இருவர் வாழ்விலும் அந்த ஒரு வினாடியிலே தான் நிச்சயமான நிம்மதி பிறந்தது. அதைக் கண்டு உணர்ந்தாள் கோமளம். கலைக்க மனம் வரவில்லை அவளுக்கு. மெல்லத் திரும்பி உள்ளே போனாள்.

10. சித்திவிநாயகம் துப்புத் துலக்குகிறார்!

சீனுவும் காணவில்லை என்பதை அறிந்து கொண்டபொழுது சிப்பாய் சித்திவிநாயகத்துக்கு வந்த கோபத்துக்கு ஒரு கங்குகரை யில்லை.

"என்ன? சின்னப் பயல் சீனுவையும் காணவில்லையா? நீ செய்த துரோகம் கொஞ்சமா, நஞ்சமா? ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் உன் பிள்ளை காணாமற் போகுமா? எங்கே உன்னுடைய அருமைப்பயல் சீனு? எங்கே என்னுடைய உலகநாதன்? கொண்டு வா, இன்னும் பன்னிரண்டு மணி நேரத்துக்குள் நீ கொண்டு வராவிட்டால் இந்த வீட்டை விட்டு ஓடு...ஓடு... ஓடியே விடு" என்று அவர் ஜானகியிடம் சீறினார்.

"ஐயோ! நான் ஒரு குற்றமும் அறியாத பாவி. என்னை நம்புங்கள்" என்று மனமுருகினாள் ஜானகி.

"நம்பவா? இதோ பார், மாமுண்டி ஸ்டோரா முதலாளி ஒரு அன்னிய மனிதர். அவர் எழுதியிருக்கும் கடிதத்தைப் பார். அவருக்குள்ள மனிதத்தன்மை உனக்கு இல்லாமற் போனதைப் பார். என்னைப் பாராதே. என்னைக் கேட்காதே. எனக்கு அந்த இரண்டு பிள்ளைகளும் உடனடியாக வந்து சேர வேண்டும். இல்லாவிட்டால் என்னுடைய இடுப்பில் தொங்கும் இந்த ரிவால்வர் உன்னையும் சுட்டுத் தள்ளும். நான் முன்பிருந்த சித்திவிநாயகம் இல்லை. நீ செய்த கொடுமைகள் தாங்காமல் போய் விட்டான் உலகநாதன். சண்டாளி! அவனைத் தேடி அருமை மாணிக்கமான சீனுவும் போய் விட்டான்."

வெறி பிடித்த வேங்கைபோல் சீறும் புருஷனுக்கெதிரே அவளால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. ஆகவே பேசாது ஒதுங்கி விட்டாள். சித்திவிநாயகம் போலீசுக்குத் தகவல் சொல்லவும், ரேடியோவில காணாமற்போன குழந்தைகள் பற்றிய மனுவைப் பூர்த்தி செய்து அறிவிக்க ஏற்பாடுகள் செய்வதற்காகவும் புறப்பட்டார். அதிர்ஷ்டவசமாக அவர் போலீசுக்குப் புகார் செய்ய வந்தபோது,





அங்கே சொன்ன தகவலில் பாதி நம்பிக்கை பிறகு வந்தது.

"சீனுப்பயல் தஞ்சாவூர் - ஸ்டேஷனில் இருக்கிறான். ரயில்வே போலீசார் அவனைப் பிடித்து வைத்திருக்கிறார்கள். சின்னப் பையன் தனக்குச் சொந்த ஊர் திருச்சி என்றானாம். அம்மாள் [பெயர் ஜானகி என்று சொன்னானாம்." இவ்வாறு தகவல் வரவே, சித்திவிநாயகம் உடனடியாகத் தஞ்சாவூர் நோக்கிப் போனார். அவர் போனதும் சீனுப் பயல் கேட்ட முதல் கேள்வி "அப்பா! உலகண்ணன் எங்கே அப்பா?" என்பதுதான். அதைக் கேட்டுப் பட்டாளத்துச் சிப்பாயும் அழுதுவிட்டார்.

போலீசாருக்கு அவன் தன் பிள்ளை என்ற தகவலைக் கொடுத்துச் சீனுவை வீட்டுக்குக் கொண்டு வந்து சேர்த்தார்.

உலகநாதனது வயது, நிறம், போட்டிருந்த சட்டை முதலான அடையாளங்களைக் குறிப்பிட்டு இரண்டாம் நாள் ஒலி



உலகநாதன்

சாவி

பரப்பினார்கள். பையனைக் கண்டுபிடிப்பவர்கள் அனுப்ப வேண்டிய முகவரியையும் சொன்னார்கள். சித்திவிநாயகம் நூறு ரூபாய்ப் பரிசு கொடுப்பதாகவும் சொல்லியிருந்தார். ரேடியோவில் இந்த அறிவிப்பைக் கேட்டபோது குருட்டுப் பிச்சைக்காரன் மதுரையில் இருந்தான். தாண்டவராயன் டவுன் ஸ்டேஷன் டீக் கடையில் இருந்தான். ஆனால் கோபாலு இருந்த இடம் மட்டும் மறைவாக இருந்தது.

மூன்று தினங்கள் காணாமற் போன உலகநாதனின் அடையாளங்களைச் சொல்லி ரேடியோவும் தன் கடமையை முடித்துக் கொண்டது.

வந்தது முதல் சித்திவிநாயகம் துப்புத் துலக்குவதற்காக ஒவ்வொரு இடமாகப் போனார். முக்கியமாக ஜங்ஷன் பிளாட்பாரம் அங்கே இங்கேயென்று விசாரணை நடத்தினார். சில அநாதைச் சிறுவர்கள் உலகநாதனைப் பற்றிய விவரங்கள் சொன்னார்கள். அவன் திருநெல்வேலிக்குப் போயிருப்பதாகச் சொன்னார்கள். ஏணியைக் கண்டபோது அவன் குரங்கும் கையுமாக இருந்தான். குரங்கு அதற்குள் 'மாமியார் வீட்டுக்குத் தண்ணீர் தூக்குவதைக் கற்றுக் கொண்டிருந்தது. தலையை ஆட்டி ஆட்டி ஆவேசம் வந்தது போலக் கவிழ்ந்து கொண்டிருந்தது. காவடிதான் சரியாக ஆட முடியவில்லை.

ஏணியின் துணை கொண்டு தேடிப் பார்த்தபொழுது, உலகநாதன் திருநெல்வேலிக்குப் போவதாக எண்ணிக் கொண்டு, வடக்கே வந்து விட்டான் என்பது தெரிய வந்தது. வந்த இடத்தில் தாண்டவராயன் கையில் பிடிபட்டான் என்பதையும் ஊகித்துக் கொண்டார். தாண்டவராயன் அடைத்து வைத்த பழக் கிடங்குக்குள் வந்தார். அவனைத் திறந்து விட்டிருக்கும் நபரை விசாரணை செய்தார். அவன் சொன்னதும் உண்மை; பையன் பயந்து கொண்டு தப்பியதும் உண்மை. ஆனால் வடக்கே போனவன் என்ன ஆனான்?

இரவிலே வழி தெரியாமல் ஆற்றுக்குள் விழுந்து இறந்திருப்பானே என்ற பயம் வந்தது. சித்திவிநாயகம் இரவில் அதே நேரத்துக்கு ஒருநாள் போய்க் கொண்டிருந்தார். பாதை ஆற்றுக்கு வந்து ஆங்காங்கே பாழ் மண்டபங்களோடு முடிவடைவதைக் கண்டார். அங்கேயுள்ளவர்கள் பேச்சிலிருந்து ஏதேனும் துப்புத் துலங்குமா என்று பார்த்தார்; தொடர்ந்து இரண்டு மூன்று நாட்கள் இரவிலே அங்கே அலைந்தார். அலைந்தது வீண் போகவில்லை. அங்கே குடிபோதையில் இரண்டு பிச்சைக்காரர்கள் பிதற்றிக் கொண்டிருந்தார்கள்.

"டேய் இது என்னுடைய மண்டபம்!"

"உங்க அப்பன் கட்டின தரும மண்டபம். போடா!"

"டேய்! அந்தக் குருட்டு அண்ணன் என்னைத்தான் பார்த்துக் கொள்ளச் சொன்னான். நீ படுக்கக் கூடாது."

"என்னையும்தான் பார்த்துக் கொள்ளச் சொன்னான். நீ எழுந்து போடா."

"அவன் வரும்வரை எனக்குத்தான் இது சர்வ சுதந்திர பாத்தியதை."

"அவன் வரவாவது ஒண்ணாவது? எங்கே போய்ச் சேர்ந்தானோ?"

"அன்றைக்கு ராவிலே ஒருபயலைக் கரும்புக்கொல்லை வழியாக இழுத்துக்கொண்டு போவதைப் பார்த்தேன். அதுக்கப்புறம் இங்கே வரவே இல்லை. சரியான திருட்டு வேட்டை அகப்பட்டிருக்கும். கண் காணாமல் ஓடிப் போயிருப்பான்!"

அதைக்கொண்டு, குருட்டுப் பிச்சைக்காரனோடு போன பையன் தன்னுடைய உலகநாதனாகத்தான் இருக்க வேண்டும் என்று முடிவு கட்டி விட்டார், சித்திவிநாயகம். அந்தக் குருட்டுப் பிச்சைக்காரனைப் பற்றி விசாரிக்க மறுநாள் பகல்பொழுது அந்தப் பக்கம் போனார்.

அவர் ஆஜானுபாகுவாக இருந்ததால் போலீஸ் என்று உளறிக்கொட்டினார்கள். குருட்டுப் பிச்சைக்காரன் உண்மையில் திருடன் என்பதைச் சாடைமாடையாகச் சொன்னார்கள்.

குருட்டுப் பிச்சைக்காரன் இனிமேல் வந்தால், இன்ன விலாசத்துக்கு அறிவிக்க வேண்டும் என்று அவர்கள் சொல்லிய விவரங்களுக்காகச் சில்லறையைத் தாராளமாக வழங்கி விட்டு வீடு வந்து சேர்ந்தார். ஆனால் அவருக்கு நாட்கள் பல ஓடியும் எவ்விதமான நல்ல குறிப்பும் கிடைக்கவில்லை.

* * *

தாண்டவராயனுக்கு உலகநாதன் சேட்டின் வீட்டுக்குள்ளேயே இருக்க வேண்டும் என்ற சந்தேகம். 'அவனை வெளியே போக விடாமல் அடைத்து வைத்திருப்பான். எப்படியாவது கண்டு பிடிக்கவேண்டும்' என்று எண்ணினான். எனவே, பழக்கூடையை எடுத்துக் கொண்டு புறப்பட்டான். பொதுவாக அவன் தெருவில் தட்டோ, கூடையோ தூக்கிச்சென்று விற்பது கிடையாது. இருந்தாலும் துப்புத் துலக்க அவன் வந்த போது சேட்டு பெரிய சுருட்டு ஒன்றைப் பற்ற வைத்துச் சுவாரசியமாகப் புகைத்துக் கொண்டிருந்தான்.

"நல்ல சாதி பங்கனப்பள்ளி, நீலம், ஒட்டுரகம், மல்கோவா, கிரேப் இருக்குது. எல்லாம் அசல் சேலத்துச் சரக்கு."

"ஜாவ்! ஜாவ்!" என்றான் சேட்.

தாண்டவராயன் விற்பனை செய்யவா வந்திருந்தான்? ஏதாவது வாயைப் பிடுங்கிப் போக அல்லவா வந்திருந்தான்! பழங்களை இறக்கி வைத்தான்.

பழச் சதையை வெட்டுப் போட்டுக் கை படாமல் கத்தியின் முனையால் சேட்டினுடைய கையிலே வைத்தான். சேட் மாம்பழத்தை ருசி பார்த்தான்.

"வேண்டாம் போ. பழம் நிறைய இருக்கிறன்."

தாண்டவராயன் சொன்ன விலை மிகவும் மலிவு. அப்போது டசன் இரண்டு ரூபாய் விற்ற சரக்கை ஒரு ரூபாய் சொன்னான். சேட்டுக்கு விலையின் மலிவைக் கண்டதும் மனம் இளகியது. சொல்கிறவன் துப்புக் காண வந்தவன் என்பதை அவன் எங்கே அறிவான்? மற்ற ராசிகளையும் தாண்டவராயன் மிகவும் மலிவாகச் சொன்னான். சேட் எல்லாப் பழங்களையும் வாங்கிக் கொள்ளச் சம்மதம் தெரிவித்தான். அவன் சம்மதம் சொன்னது அப்படியொன்றும் பெரிய காரியம் இல்லை.

"நானே உள்ளே கொண்டு போய் வைக்கிறேன்" என்று கூறினான் தாண்டவராயன்.

"நீ நில். போக வேண்டாம். கூர்க்கா, இதர் ஆவ்!" என்றான் சேட்.

கூர்க்காவே, பெட்டியை எடுத்தான். அந்த வீட்டுக்குள் எவரும் புழங்குகிற சுவடு தெரியவில்லை. ஆள் நடமாட்டம் கூட இல்லை. ஆனாலும் சேட் தடுத்த காரணத்தைத் தெரிந்து கொள்ள ஆசைப்பட்டு மெதுவாகக் கத்தியைக் கூடைக்குள் போட்டு விட்டான். கூர்க்கா உள்ளே ஒரு பக்கம் கூடையை வைத்து விட்டுத் திரும்பி வந்தான் தாண்டவராயன். மறந்து விட்டவன்போல், "கத்தியைக் கூடைக்குள் வைத்து விட்டேன், எடுத்து வந்து விடட்டுமா?" என்று கேட்டான்.

"போய் எடுத்து வா, ஜல்தி!" என்று அனுமதியளித்தான் சேட்.

தாண்டவராயன் உள்ளே போனான். அங்கே யாரும் இல்லை. உள் பக்கம் கதவு சாத்தியிருந்தது. அவன் பழக்கூடை இருந்த கட்டிலிருந்துதான் துப்பாக்கிச் சத்தம் வந்திருக்க வேண்டும். சாய்வு நாற்காலி ஒன்று கிடந்தது. படுத்துப் படுத்து அழுக்கேறி யிருக்கும் பிரம்புப் பின்னல் தெரிந்தது. அங்கேதான் சேட்டோ, அல்லது சுட்ட ஆளோ படுத்திருக்க வேண்டும். பழக்கூடையைக் கொட்டிக் கவிழ்த்தான். பழங்களைப் பொறுக்கிச் சேர்க்கும் நேரத்தில் உள்ளே ஆள் அரவம் கேட்கிறதா, அல்லது உலகநாதன் போன்ற சின்னப் பயல்கள் யாரேனும் தெரிகிறார்களா என்று கவனித்தான்.


மேட்டூர்
சந்தன
சோப்பின்
மென்மையை
விவரிப்பதே கடினம்.
அபூர்வ மிருதுத்தன்மையும் பரிசுத்த
மேனியும் நுட்பமான இனிய சந்தன
மணங் கமழும் ஓர் நிலை...நீங்கள்
கேட்ட மாத்திரத்திலேயே கிடைக்
கும்! ஆனால், கேட்பதை மட்டும்
மேட்டூர் சந்தன சோப்
என்று குறிப்பிட்டுக் கேளுங்கள்!
மேட்டூர் சந்தன சோப்பில் மனோஹர
மான சந்தன மணம் நுட்பமான
முறையில் சேர்க்கப்பட்டுள்ளது.
மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல்.
கார்ப்பொரேஷன் லிமிடெட்
மேட்டூர் அணை :: சேலம் ஜில்லா
மானேஜிங் ஏஜெண்ட்ஸ்: சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட்
MC:602



தினசரி உணவை ஊட்டமிகச் செய்யும் டானிக்

மிக மிகச் சிக்கனமான செலவில், சாஸ்திரீய முறையில்—உணவை போஷாக்கு மிக்கதாகச் செய்கிறது. ஆல்போ-ஸாங் தினசரி உணவில் ஜீவ அணுக்களையும் வைடமின்களையும் வள முறச் செய்கிறது.

நோயுற்றகாலே ஆல்போ-ஸாங் எதிர்ப்பு சக்தியை எழுப்புகிறது. சிசுக்களும் சிறு குழந்தைகளும் உடல் உரமுறவும்—பலமுறவும் உணவு ஊட்டு கிறது. ஆல்போ-ஸாங் பாலூட்டும் தாய்மார் களையும், மூத்த வயதினரையும் ஆரோக்கிய மாகவும் திடமாகவும் இருக்க உதவுகிறது. ஆல்போ-ஸாங் ருசிமிக்க இனிக்கிறது—ஊட்டத் தைப் பெருக்கி விசேஷ பலன் அளிக்கிறது.

வனப்பு — வளம் நிறைந்த ஆரோக்கியத்திற்கு லட்சிய டானிக்கான ஆல்போ-ஸாங் சாப்பிடுங்கள்.

ஆல்போ-ஸாங்

ஜே & ஜே டிஷேன்

ஹைதராபாத். தக்காணம்



"அரே ஜல்தி ஆவ்" என்றான் சேட்.

ஒருமட்டும் கத்தியை எடுத்துக்கொண்டு வெளியே வந்தான் தாண்டவராயன். பணத்தைப் பெற்றுக் கொண்டு கடந்தவன். இனிமேல் கிடைக்கப் போவதில்லை என்று தோன்றியபோதிலும் இன்னொரு முறையைக் கையாள நினைத்தான்.

"ஏன், சேட்! யாராவது சின்னப் பயல்கள் உங்களுக்கு வேலைக்கு வேண்டுமா?" என்று கேட்டான்.

"போ, போ. வேண்டாம்!" என்று சொல்லி விட்டான் சேட்.

தாண்டவராயனுக்கு உளவறிந்து அலுத்துப்போய் விட்டது. 'இனிமேல் பையனைப் பற்றிய கவலைபால் வாடக் கூடாது. சித்தி விநாயகத்தைப் பம்பாய்க்கு அனுப்பிவிட வேண்டும்' என்று முடிவு செய்தான்.

அவன் அதைப் பேச்சுவாக்கில் பிரஸ்தாபித்தபொழுது "அது இருக்கட்டும். நீ எனக்கு ஒரு காரியம் செய்ய வேண்டும். எனக்குச் சில துப்புகள் கிடைத்திருக்கின்றன. அதாவது உலகநாதனை ஒரு குருட்டுப் பிச்சைக்காரன் எங்கோ திருடுவதற்கு அழைத்துக்கொண்டு போனானாம். அதற்கு அப்பால் எங்கே போனான், எங்கே திருட்டு நடந்தது என்றுதான் தெரியவில்லை. அந்தக் குருட்டுப் பிச்சைக்காரனையும் தேடிக் கொண்டிருக்கிறேன். நான் உலகநாதனைக் கண்டு பிடிக்காமல் பட்டணம் திரும்ப மாட்டேன்!" என்று சொல்லிவிட்டார் சித்திவிநாயகம்.

தாண்டவராயனுக்குத் தலை சுற்றியது. "குருட்டுப் பிச்சைக்காரனா?" என்றான்.

"ஆமாம். அவன்தான் நம்முடைய உலகநாதனைக் கரும்புத் தோட்டத்தின் வழியாகக் கொண்டு போனான் என்று சொல்லக் கேள்வி. ஆனால், எங்கே போனான், என்ன ஆனான் என்று மட்டும் தெரியவில்லை!" என்றார் சித்திவிநாயகம்.

'நிச்சயமாக கேஸ் வரப் போகிறது. அதில் நாம் அகப்பட்டுக் கொண்டு கம்பி எண்ண வேண்டி வரலாம்' என்ற நினைவு எழவே, அவன் மனம் தடுமாறினான். அப்பொழுது, "நான் திருநெல்வேலி போகப் போகிறேன்" என்று தமது திட்டத்தைச் சொல்ல எண்ணினார் சித்திவிநாயகம். பாவம், அவர் தாண்டவராயன் மனம் அடித்துக் கொள்ளும் பயத்தை அறிவாரா?

சித்திவிநாயகம் ரயில் ஏறித் திருநெல்வேலிக்கு வந்தார். அவருக்கு ஜோஸ்யத்தின் மீது நம்பிக்கை இல்லை. இருந்தாலும் சிரம தசை என்று ஏற்பட்டுவிட்டால் இல்லாத நம்பிக்கை யெல்லாம் வரத்தானே செய்கிறது! ரயிலில் அவரோடு ஒரு சாமியார் வந்தார். அவர் பேச்சுக் கொடுத்தபோது தமது அண்ணன் மகன் அநாதைச் சிறுவன் காணாமற் போனதைச் சொன்னார்.

"அப்பா! அவன் அகப்படுவான். எங்கும் போகவில்லை. ஒரு வீட்டில் அடைபட்டுக் கிடக்கிறான். நீ வந்த ஊருக்கு அருகில் இருக்கிறான். நீ என்ன முயற்சி செய்தாலும் பயன் இல்லை. அவனாகவே வருவான். ஊருக்குப் போ!" என்றார் சாமியார்.



"ஞாயிறு ஒரு நாள் ஆபீஸ் லீவு. வீட்டில் இருக்கிறீர்கள்; சரி! பிறகு ஒரு நாள் பூராவும் ஆபீஸிலேயே இருந்து விடுகிறீர்களே, அது ஏன்?"

"வீட்டுக்கு ஒரு நாள் லீவு கொடுத்து விடுகிறேன்!"

"இல்லை, சுவாமிகளே! அவன் படத்தைப் பத்திரிகைகள் அனைத்திலும் விளம்பரம் செய்யப் போகிறேன். அதில் ஏதேனும் பலன் ஏற்படலாம் அல்லவா? எங்கேயாவது செத்துப் போயிருந்தாலும் அது பற்றிய விவரமாவது தெரியும் அல்லவா?" என்றார் சித்திவிநாயகம்.

"படம் இருக்கிறதா?"

"இருக்கிறதா என்று தேடிப் போகிறேன். அவன் பாட்டி—என் அம்மா—எடுத்திருக்க முடியாது. அந்த ஊரில் வேறு யார் வீட்டிலாவது அவன் படம் இருந்தால் அதைத் தேடிக்கொண்டு வரலாம் என்று பார்க்கிறேன்!"

"உனக்கு ஆண்டவன் அருள் செய்வான். ஆனால் அவன் அகப்பட்டால் எனக்குத் தகவல் கொடுப்பாயா?" என்று கூறி விலாசத்தைக் கொடுத்தார் சாமியார்.

சாமியார் இறங்கிப் போய் விட்டார். மதுரை ஸ்டேஷன் வந்ததும், 'இந்தப் பெரிய சந்திப்பில் ஒருவேளை உலகநாதன் நிற்கலாம். பெரிய நகரங்களில் இதுபோன்ற தப்பிய சிறுவர்கள் சுற்றுவார்கள்!' என்று எண்ணிய சித்திவிநாயகம் இறங்கிப் பார்த்தார்.

அவர் கண்ணிலே பட்டவன் ஏணி. அவன் குரங்கும் தானுமாக மங்கம்மாள் சத்திரத்தின் முன் வேடிக்கை காட்டிக் கொண்டிருந்தான்.

"டேய்! நீ திருச்சி ஆளில்லையா?" என்று கேட்டார் கூட்டத்தில் நின்ற சித்திவிநாயகம்.

"ஆமாம். நீங்களா? அந்தப் பையன் அகப்பட்டானா?"

"இல்லையே! நீ இங்கே வந்து எவ்வளவு காலமாச்சு?"

"நேற்றுத்தான் சாமி வந்தேன். இப்போ இங்கே நல்ல வரும்படி கிடைக்குது. பிக்பாக்கெட் ஆள் ஒண்ணு சொன்னேனே, பாருங்க!" என்றான் ஏணி.

"யாரோ கோபாலு என்று சொன்னாயே. அவன்தானே?"

"ஆமாம். அப்பாலே வாருங்கள், சொல்லுகிறேன்" என்று கூறி எழுந்தான் குரங்காட்டி ஏணி.

குரங்கு அவன் சொல்லாமலே ஆனந்தமாகக் காவடியை—அதாவது வளைந்த

குச்சியில் கலர்த்தாள் ஒட்டிய சிறுகுடை ஒன்றை — தூக்கிக் கொண்டு அவன் பின்னாலேயே வந்தது.

இருவரும் தனித்து நின்று பேசினார்கள்.

"சாமி! அவன பெரிய முரடன். நேற்று நான் திண்டுக்கல் வழியாக ஒரு லாரியிலே வந்தேன். குரங்கும் என்னோடு லாரியில் வந்தது. லாரிக்காரன் என்னைக் கொண்டுவந்து மதுரை மங்கம்மாள் சத்திரத்தின் அருகிலே இறக்கி விட்டான். டவுன் பக்கம் வந்த சமயம், கோபாலு போல் ஒரு ஆள் முகத்தைப் பார்த்தேன். திருச்சியை விட்டு வராத ஆள் இங்கே எதற்கு வந்தான் என்று எண்ணினேன். அவன் இந்தப் பக்கம் வந்தால் ஏதாவது திருடாமல இருக்க மாட்டான். கூட்டம் சேர்ந்தாலே, அந்த ஆசாமி திருடுவான்" என்றான் குரங்காட்டி ஏணி.

"அது, சரி! கோபாலு என்ற ஆளைப் பற்றிச் சொல்லி என்ன பயன்?" என்று இடைமறித்தான் சித்தி விநாயகம்.

"நான் பார்த்த ஆள் அவன்தான்."

"உலகநாதனை ஒரு குருட்டுப் பிச்சைக்காரன் அல்லவா இழுத்துக் கொண்டு போனானாம்! அந்தக் குருட்டுப் பிச்சைக்காரன் யார் என்று தெரியவில்லையே?"

"அவனைப் பற்றி எனக்கு அதிகம் தெரியாது. அவனையும் கொஞ்ச நாட்களாய்த் திருச்சியிலே காணவில்லை. அவனும் இக் கோபாலுவும் கூட்டு. அதனாலே குருட்டுப் பிச்சைக்காரனும் ஒருவேளை இங்கே இருக்கலாம்" என்றான் ஏணி.

"நீ எதற்கும் என்னுடைய விலாசத்துக்குக் கார்டோ, கவரோ எழுதி வை, இந்தா. இதைச் செலவுக்கு வைத்துக் கொள்!" என்றார் சித்திவிநாயகம்.

"வேண்டாமுங்க" என்று கூறிக் காசு வாங்கிக்கொள்ள மறுத்துவிட்டான் ஏணி.

சித்திவிநாயகம் அவனிடம் விடை பெற்றுக் கொண்டு ரயிலுக்குப் போனார்.

"வேய், குரங்காட்டி! இங்கே வா."

வெற்றிலை பாக்குக்கடை முதலாளி வலித்து கூப்பிடவே, ஏணி அங்கே போனான். அவனுக்கு அந்தக் குரல் கேட்டது போல் இருந்தது.

அவர் விளையாட்டு காட்டச் சொன்னார்.

குரங்கு இலங்கையைத் தாண்டியது. காவடி எடுத்தது: ஆவேசம் வந்து தலையைச் சுற்றி ஆடிக் காட்டியது.

"எங்கேடா பிடிச்சே?"

"திருச்சியிலே உள்ள குரங்கு சாமி. திருவரம்பூர் சாதி. பொல்லாத சாதி!" என்றான் ஏணி.

"விலைக்குத் தருகிறாயா?"

"இதுதான் பிழைப்பு. உங்களுக்கு எதற்கு, சாமி?"

"இருபது ரூபாய் தருகிறேன். கொடு!"

"முடியாது சாமி, முடியாது!"

"இந்த ஊரிலே பிச்சை எடுத்துப் போடுவியா?"

ஏணிக்குப் பயம் உண்டு. ஆனாலும் துணிந்த கட்டை. "நீங்களா சாமி ஊர்ப் பிச்சையைக் குத்தகை எடுத்திருக்கிறீங்க?" என்று கேட்டான். உடனே கடைக்காரனுக்குக் கோபம் வந்து அவனை ஓங்கிக் கன்னத்தில் இழுத்து விட்டான்.

ஏணிக்குப் பதில் குரங்கு அடித்தவனைப் பிடுங்கி விட்டது. குரங்கின் பிடியிலிருந்து விடுபடுவது பெரிய கஷ்டம்.

அடித்தவன் கெஞ்சினான். ஏணியின் தயவைச் சம்பாதித்தான். கடைக்குள்ளிருந்த ஒரு நபர் வெளியே வந்தான். "அட நம்ம ஏணிப் பயலா?" என்றான்.

வந்தவன் வேறு யாரும் இல்லை; கோபாலுவேதான்.

"அண்ணே! நீங்களும் இங்கேயா இருக்கிறீங்க? ஏன் திருச்சி புடிக்கலே?"

"இவன் நம்ம தம்பிடா ஏணி. அவன் குரங்கு விலைக்குக் கேட்டானா? நீ குரங்கை விற்க வேண்டாம், இங்கேயே வந்து படுத்துக் கொள். இது நம்ம கடையைப்போல்" என்று சொன்னான் கோபாலு.

அன்றிரவு கடைக்காரனும், கோபாலுவும் பேசிக் கொண்டிருந்தார்கள்; ஏணியின் நெஞ்சோடு தலை வைத்துக் குரங்கு தூங்கிக் கொண்டிருந்தது. ஏணியும் தூங்குவதாக எண்ணி விட்டார்கள் அவர்கள். ஆனால் ஏணி விழித்துக் கொண்டுதான் இருந்தான்.

"இந்தப் பயலையும் இவன் குரங்கையும் பழக்கினால் நாம் பெரிய வேட்டை ஆடி விடலாம்."

"குரங்குகளைத் தந்திரமாகப் பழக்கினால் அவை வீட்டுக்குள் போய்ப் பண்டங்கள் கொண்டு வரும். வீட்டுக்குள் போய், கதவிலுள்ள கொண்டி தாழ் இவற்றைத் திறக்கும். நாம் வெகு சுலபமாக உள்ளேபோய் வெற்றி அடையலாம்!"

"உனக்கு இவனைத் தெரியுமா?"

"தெரியும். இவன் கொஞ்சம் நல்ல பையன். நம்முடைய தொழிலுக்கு வர மாட்டான். சிரமப்பட்டுப் பழக்க வேண்டும். இவன் போனாலும் இவன் குரங்கை எப்படியாவது இவனிடமிருந்து அபேஸ் செய்துவிட வேண்டும்."


இப்படியாகப் பேசிக் கொண்டே அவர்கள் உறங்கி விட்டார்கள். மறுநாள் காலை எழுந்து பார்த்தபோது குரங்கும் இல்லை: ஏணியும் இல்லை.

குரங்கைப் பிடுங்கிக் கொள்வார்களோ என்று ஏணி பயந்தான். எனவே, திரும்பிப் பார்க்காமல் மதுரையிலிருந்து திருப்பரங்குன்றம் போய்விட்டான். அங்கிருந்து பட்டாளத்துச் சிப்பாய் சித்திவிநாயகத்துக்கு ஒரு கார்டு எழுதினான்.

"நீங்கள் தேடும் குருட்டுப் பிச்சைக்காரன் மதுரையில் இல்லை. அவன் கூட்டாளி, கோபாலுவை இங்கே வெத்திலைப்பாக்குக் கடையில கண்டேன்-ஏணி."

இந்தப் பொருள் கொண்ட கடிதத்தைத் தபாலில் சேர்த்ததோடு தன் கடமை முடிந்தது என்று அவன் திருப்பரங்குன்றத்திலேயே தங்கிவிட்டான். ஊருக்குள் வேடிக்கை காட்டுவதில் குரங்கும் பழக்கம் பெற்றுவிட்டது. (தொடரும்)

Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs. Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam.


இப்பொழுது எலுமிச்சை ரசத்துடன்
டீயைக் குடித்துப் பாருங்கள்
LEMON
எக்காலத்திலும் இது
வசீகரிப்பது! ஒரு
கோப்பை மிகச் சூடான
டீயில் சிலதுளி எலுமிச்சம்பழ
ரசத்தை விட்டு, ருசிக்கேற்ற
வாறு சர்க்கரையைச் சேர்த்து
(பால் கூடாது) கலக்கி டீயின்
நன்மையுடன் எலுமிச்சம்பழப்
புஷ்டியையும் பருகுங்கள்.
TEA BOARD INDIA
நல்லதான் டீ — நான் உங்கள் நண்பன்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon